திங்கள்

மார்ச் '57 – அணா 8

ஏப்ரல் இதழ்

பேசும் படம் மலர் 1957

- ★ கண்ணைக்கவரும் இயற்கை வண்ணப் படங்கள்,
- ★ 1956 வருஷத்திய படங்களில் நடுநிலை விமர்சனங்கள்
- ★ 'பேசும் படம்' கௌரவ ஜாபிதா
- ★ மற்றும் பல விசேஷ அம்சங்கள்

★

விலை ரூ. 1. 25 தபாலில் ரூ 1. 75

★

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

சென்னை - 2

கோட்டாகுடி பெரியநாயக்கர்
எஸ். கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

திங்கள்

மார்ச் 1957

ஆண்டு 2 ★ துன்முகி—மாசி ★ மாதம் 2

இம்மாதம்

தமிழ் நாடகத் தந்தை	...	7
சின சர்க்கஸ்	...	8
டாக்டர் ஸி. பி.யுடன் ஒரு நாள்	...	17
வோட்டு பிறந்த கதை	...	21
சென்ற தேர்தலும் இந்தத் தேர்தலும்	...	27
கோல்டு கோஸ்ட்	...	33
மண்ணுக்குள் முன்னோர்கள்	...	37
இலக்கியத்தில் குடந்தை	...	40
சிவந்த கண்கள்	...	44
சென்னைத் துறைமுகம்	...	47
கனவு பலிதமானால்?	...	59
தாஜ் மஹால்	...	65
கடல் தரும் செல்வம்	...	68
நாடித் துடிப்பு	...	71
கண்ணாடி செய்தல்	...	73
ஜகத்தினை அழித்திடுவோம்	...	77
சலனப்படம்	...	82
உப்பு	...	87
சுவாமிமலை	...	89
மகாதேவி	...	93
இயற்கையும் இறைவனும்	...	95
திருவனந்தபுரம் மிருகக் காட்சி	...	99
உருளைக் கிழங்கு	...	101
வெண்ணிலாவே, வேகமேன்?	...	105
துப்பறியும் கலை	...	106

படக்கட்டுரை : சென்னைத் துறைமுகம்

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

சந்தா விவரம்

உள்நாடு ஒரு வருஷம்	ரூ. 6
,, அரை வருஷம்	ரூ. 3
வெளிநாடு ஒரு வருஷம்	ரூ. 8
தனிப்பிரதி விலை	அணா 8

விளம்பர விகிதம்

சாதாரண முழுப்பக்கம்	ரூ. 100
,, அரைப்பக்கம்	ரூ. 50
,, கால்பக்கம்	ரூ. 30
கடைசி அட்டை (மூவர்ணம்)	ரூ. 300
உள் அட்டை	ரூ. 150
முகப்புப் பக்கம்	ரூ. 150

கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ் சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்க முடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம் :

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

Statement about ownership published under the Registration of Newspapers (Central) Rules, 1956.

Form IV (See Rule 8)

(1) 17, General Patters Road, Madras-2. (2) Monthly. (3) Ramanath Press. Occupier: T. V. Ramanath, Indian, 17, General Patters Road, Madras-2. (4) Ramanath Publications, Proprietor: T. V. Ramanath, Indian, 17, General Patters Road, Madras-2. (5) Managing Editor: T. V. Ramanath, Indian, 17, General Patters Road, Madras-2. (6) T. V. Ramanath, Sole Proprietor.

I, T. V. Ramanath, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) T. V. Ramanath, 15-2-1957.

திங்கள்

வணக்கம்

நாடெங்கும் வரப்போகும் தேர்தலை முன்னிட்டு இம்மாதம் தேர்தல் பிரசாரம் வெகு மும்முரமாக நடந்து வருகிறது. பிரதி மாதமும் நாட்டில் நிகழும் நிகழ்ச்சிகளுக்குப் பிரதான்யம் அளித்து, அவை பற்றி விசேஷ கருத்துக்களை கட்டுரை வாயிலாக வெளியிட்டு வரும் நாம், இம்மாதம் தேர்தல் சம்பந்தமான விசேஷ கட்டுரைகளை இவ்விதழில் வெளியிட்டுள்ளோம்.

'வோட்டு பிறந்த கதை,' 'எல்லோரும் மன்னர்கள்,' 'சென்ற தேர்தலும் இந்தத் தேர்தலும்' ஆகியவை தேர்தல் சம்பந்தமான விசேஷ கட்டுரைகள்.

சென்னைத் துறைமுகம் பற்றி இவ்விதழில் படக்கட்டுரை வெளியாகியிருக்கிறது. துறைமுகம் எவ்வாறு உருவாகியது என்ற விவரங்கள் கொண்டது இக்கட்டுரை. 'தமிழ் நாடகத் தந்தை' சம்பந்த முதலியாரைக் கௌரவித்த விழாவையொட்டி அன்னாரின் சேவையை விளக்கி ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளோம்.

'சுவாமிமலை' என்னும் கட்டுரை இம்மாதத்தில் கோயில்கள் வரிசையில் வெளியாகியுள்ளது. இக்கட்டுரையாசிரியர் புகைப் படங்களுடன் விரிவாக இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

'கண்ணாடி செய்தல்' முறை பற்றி விளக்கமான கட்டுரை வாசகர்களின் கருத்தைக் கவரும்படி அமைந்துள்ளது.

'சலனப் படம்' சம்பந்தமாக அத்துறையில் தேர்ச்சி பெற்ற ஒரு அன்பர், யாவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதிய ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளோம்.

'துப்பறியும் கலை' கட்டுரை மிக ரஸமாக அமைந்திருப்பதன் காரணமாக இவ்விதழில் அதை 'புத்தகப்பகுதி' வடிவில் வெளியிட்டுள்ளோம்.

இவை தவிர, 'கனவு பலிதமானால்?' மண்ணுக்குள் முன்னோர்கள், 'ஜகத்தினை அழித்திடுவோம்' ஆகியவைகள் வாசகர்களின் நினைவில் என்றும் நிலைத்திருக்கக் கூடியவை என்று நம்புகிறோம்.

திங்களுக்குத் திங்கள்

இந்தியா விஷயத்தில் பெரும் அநீதி ஐ. நா. ஸ்தாபனத்தில் நடந்திருக்கிறது. காஷ்மீர் அதன் மக்கள் செய்த முடிவின் காரணமாக இந்தியாவுடன் சேர்ந்து பல வருஷங்களாகின்றன. காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை அரசியல் சட்டத்தைத் தயாரித்து சென்ற ஜனவரி 26உ அமுலுக்குக் கொண்டு வந்தது. ஆனால் பிரிட்டனும் அமெரிக்காவும் மற்றும் சில பிரதேசங்களும் சேர்ந்து காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை அந்த ராஜ்யத்தைக் குறித்து செய்யும் எந்த முடிவும் அப்பிரதேசத்தின் எதிர்காலத்தைப் பற்றி செய்த இறுதியான முடிவு என்று கருதப்படமாட்டாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. காஷ்மீரில் பொதுஜன வாக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து ஐ. நா. பந்தோபஸ்துக் கௌன்ஸில் ஆசிய ஆப்பிரிக்க மக்கள் விஷயத்தில் நேர்மையுடன் நடந்து கொள்ளப் போவதில்லை என்பதையும் தான் பிரிட்டன் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கைப்பொம்மை என்பதையும் நிரூபித்துக் கொண்டு விட்டது.

இந்தியா, சூயெஸ் விஷயத்தில் எகிப்தை ஆதரித்ததற்காக வஞ்சம் தீர்த்துக் கொள்ளவே பிரிட்டன் இந்தத் துரோகச் செயலில் இறங்கியிருக்கிறது. காஷ்மீரில் ஐ. நா. படைகள் அனுப்பப்பட வேண்டும் என்ற யோசனையை இந்தியா ஒரு நாளும் அனுமதிக்காது என்று நேரு தெரிவித்திருக்கிறார். இந்த நிலைமை காரணமாக இந்தியா காமன்வெல்த்திலிருந்து விலகினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இந்தியா முழுவதும் பொதுத் தேர்தலில் ஈடுபட்டிருக்கும் சமயம் பார்த்து பாகிஸ்தான் இந்தியாவைத் தாக்க முயன்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆகவே எதற்கும் இந்தியா தயாராகவே இருக்க வேண்டும்.

* • •

பொதுத் தேர்தல் சமீபித்து விட்டதால் சர்க்கார் சிப்பந்திகள், ரயில்வே சிப்பந்திகள் இவர்கள் விஷயங்களிலெல்லாம் ஆளுபவர்கள் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கின்றனர். வோட்டுகளைப் பெறுவதற்காக இதெல்லாம் செய்யப்படுகிறதோ என்று இக்காரியங்கள் பொதுமக்களிடையே சந்தேகத்தை எழுப்பாமல் இல்லை. டில்லிக்கு வந்த என். ஜி. ஒக்களை பார்க்க மறுத்த பண்டித நேரு, சென்னையில் அவர்களுக்குப் பேட்டி யளித்தார். அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரண உதவிபற்றிய உறுதி, தேர்தலுக்கு முன் கிடைக்காது போலிருக்கிறது.

ரயில்வே சிப்பந்திகளுக்கும் சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்களிடையேயும் பூரண திருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

சில ராஜ்யங்களில் தேர்தல் ஆரம்பித்து விட்டது. சென்னையில் இம்மாதம் முற்பகுதியில் தேர்தல். தமிழ் நாட்டைப் பொருத்த வரை இதைப்போல பரபரப்புத் தேர்தல் இதற்கு முன் நடந்ததில்லை என்று சொல்லலாம். முன்பெல்லாம் காங்கிரஸ் டிக்கெட்டில் கழுதையை நிற்க வைத்தாலும் அதற்கு வோட்டு போடும் மனப்பான்மை பொதுமக்களிடையே இருந்து வந்தது. ஆனுல், 'இன்று வோட்டு போடுங்கள். ஆனுல் பார்த்துப் போடுங்கள்' என்ற மனப்பான்மை இருந்து வருகிறது. காங்கிரஸ் பெயரால் கழுதையை ஏன் நிற்க வைக்க வேண்டும் என்று கேட்கிருர்கள் வாக்காளர்கள். நாட்டில் திறம்பட வேலை செய்ய பலமான எதிர் கட்சி உருவாகவில்லையே என்பதுதான் பெருங்குறையாக இருக்கிறது.

* * *

சென்னை நகர சபை மிகவும் பெருமை அளிக்கக்கூடிய ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. முதல் தடவையாக ஒரு கலைஞரை கௌரவித்திருப்பதைத்தான் குறிப்பிடுகிறேம், தமிழ் நாட்டில் நாடகக் கலைக்கே தந்தை என்று போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியாரைக் கௌரவித்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

* * *

சென்னை சர்வகலாசாலை நூற்றுண்டு விழாவை யொட்டி கிண்டி எஞ்ஜினீயரிங் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சி பொதுமக்களின் கவனத்தைக் கவர்ந்தது போல் இதுவரை எந்தக் கண்காட்சியும் கவர்ந்ததில்லை. மின்சாரத்தைக் கொண்டு வசதிகள் பல செய்து கொள்வதுடன் எவ்வளவு விசித்திரங்களையும் செய்யலாமென்பதை கண்ணுல் கண்டுகளிக்க இக்கண்காட்சி வாய்ப்பளித்தது. மெடிகல் காலேஜ் சம்பந்தமாக வைக்கப்பட்டிருந்த கண்காட்சிப் பகுதி பார்க்க வேண்டியதாகும். இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் பொதுஜனம் எளிய முறையில் பல விஞ்ஞான நுணுக்கங்களையும் அறியும் வாய்ப்பைப் பெற முடியும். இக்கண்காட்சி சம்பந்தமான படங்கள், கட்டுரைகள் எல்லாம் அடுத்த இதழில் இடம் பெறுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம். ★

நஞ்சன்கூடு பல்பொடி மற்றும் 54 மருந்துகள்
விபரப்புத்தகத்திற்கு எழுதுக
எழுதியும் சிகிச்சை பெறலாம்
சரும ரக்ஷண நறுமணக் களிம்பு
ஸான்டலக்ஸ்
சரும உபாதைகளுக்கும், தசை விபத்துக்கும்

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க
காஷ்மீர் - குஸூம்
என்ற மலர் மூலிகையை
உங்கள் கூந்தல் எண்ணெயில் ஊறவையுங்கள்
தஞ்சாவூர் T. A. அப்துல் ரஹீம்
சேவல் மார்க்கு
உயர்தர ஊதுபத்திகள், வாசனைகள்

ஆல்மன்டன்: சிறந்த பல விருத்தி லேகியம். ரூ. 7-0-0.
ப்ளவர் டஸ்டு: பெட்டிகளில் வைத்து ஆடைகளைக்காக்க. டஜன் 2/4.
சந்தன முகப்பவுடர் டப்பி ரூ. 1-4-0. கதம்ப அத்தர் ரூ. 5-0-0.
சுவாக் அத்தர் ரூ. 5-0-0. அரகஜா ரூ. 1.
சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை-1.

தமிழ் நாடகத் தந்தை

தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியாரது 85-வது பிறந்த தினத்தை யொட்டி, சென்ற 1—2—57-ல் அன்னாரைச் சென்னை நகராண்மைக் கழகம் வரவேற்று, கௌரவித்தது. சென்னை மேயர் கே என். சீனிவாசன் அவர்கள், நாடகத் தந்தையின் இலக்கிய சேவைகுறித்து நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் இக்கட்டுரை.

அரிய செயல்களைச் செய்தோரைப் போற்றிக் கொண்டாடும் வழக்கம் எல்லா நாடுகளிலும் உண்டு. அம்முறையிலே, பல துறைகளில்—நாடகம் புனைவதில் — நடிப்பதில்...சமய நூல்கள் இயற்றுவதில் சிறப்புற்று விளங்குபவர் திரு. சம்பந்த முதலியார் அவர்கள். நாடகத்தால் தமிழ் வளர்த்து மங்காப்புகழ் கொண்டு திகழும் அவரைக் கௌரவிப்பதில் நகராண்மைக் கழகம் பெருமை கொள்ளுகிறது.

தமிழன் தான் பேசிவந்த மொழியைப் பன்னெடுங்காலத்திற்கு முன்பே இயல், இசை, நாடகம் என்று மூவகைப் படுத்திக் கண்டு களித்தான். உலகிலே வேறு எம்மொழிக்குமில்லாத இச்சிறப்பு நம் தமிழ் மொழிக்கு வாய்த்தது. தளரா முயற்சியால் தமிழ் நாடகத் தந்தை சம்பந்த முதலியார் தமிழைத் தனதாக்கிக்கொண்டு, தாம் பெற்ற இன்பத்தை இவ் வையமும் பெற்று இன்புறுதல் வேண்டுமென விழைந்தார். அம்முறையில் அவர் வெற்றியும் கண்டு விட்டார்.

தமிழ் நாடக உலகில் ஒரு புரட்சியை உண்டு பண்ணிய இலக்கிய கர்த்தா அவர். நாடகத்தின் தரத்தை உயர்த்தியவர் அவர் என்றாலும் மிகையாகாது.



சென்னை மேயருடன் 'தமிழ் நாடகத் தந்தை'

சம்பந்த முதலியார் 1891-ல் 'சுகுணவிலாச சபா' என்னும் நாடக சபை ஒன்றை ஏற்படுத்தி அதில்தான் உள்பட, காலஞ் சென்ற டாக்டர் ஆர். கே. ஷண்முகம் செட்டி, சத்தியமூர்த்தி ஆகியோரையும் ஸர். ஸி. பி. அவர்களையும்கூட நடிக்கச் செய்து நாடக அபிமானிகளைப் பெருக்கியவர்.

அறிவுகொண்டு உணர்வதோடு, கண் கொண்டும் பார்த்து அறிவது அதிக சக்தி வாய்ந்தது. நல்ல நாடகங்களின் மூலம் உயர்ந்த கருத்துக்களைப் பாமர மக்களிடையும் புகுத்த முடியும் என்பதை அனுபவத்தில் கண்டவர் சம்பந்த முதலியார். நாடக ஆசிரியருக்கு வேண்டிய தகுதிகளாகிய கல்வி, கேள்வி, மதிநுட்பம், அனுபவம், ஒழுக்கமிவையாவும் பெற்று மக்களிடையே மங்காப் புகழுடன் விளங்கும் சம்பந்த முதலியாரை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம். ஷேக்ஸ்பியர் மகாகவியின் நாடகங்களுள் பலவற்றை மொழி பெயர்த்தும், 'நாடகத்தமிழ்' என்ற நூலை எழுதியும் ஏறக்குறைய எண்பது நாடகங்களைப் புனைந்தும் சிலவற்றில் அவரே நடித்தும் தமிழ் நாடக உலகில் ஒப்பற்ற சிறப்புடன் விளங்குகிறார்.

சம்பந்த முதலியார் இயற்றிய நாடகங்களுள் 'மனோஹரா' என்ற கற்பனை நாடகம் அறுபது ஆண்டுகளாக மக்கள் மனதைக் கவர்ந்து வருகிறது. நாடகங்கள் புனைவதோடு நில்லாது, சம்ஸ்கிருதத்திலிருந்துதான் தமிழ்மொழியில் நாடகங்கள் தோன்றின என்னும் ஏளன மொழியினை மறுத்துத் தொல்காப்பியத்திலும், பிற பழம்பெரும் தமிழ் நூல்களிலும் உள்ள வழக்காறுகளை எடுத்துக்காட்டித் தமிழ்மொழி தோன்றிய அன்றே தமிழ் நாடகமும் தோன்றியது என்பதை நிலைநாட்டிய பெருமை சம்பந்த முதலியாருடையதேயாகும்.

இறைவன் நம் தமிழ் நாடகத் தந்தைக்கு நோயில்லாப் பூரண வயது, ஓங்குபுகழ், உயர்வு, சாந்தி முதலிய பெரு நலங்கள் அனைத்தும் நல்கியருள வேண்டும் என்பதே நம் தமிழ் மக்களின் இதய பூர்வமான பிரார்த்தனை. ★

சரித்திரம் எங்கே?

தமிழ் இனமே! இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்குத்தான் உன்னைப்பற்றிய சரித்திரத்தை உருவாக்காமலே நீ உயிர் வாழப் போகிறாய்? உலகில் சரித்திரமில்லாத ஒரு இனம் உண்டானால் அது இந்தச் சரித்திரத் தமிழ் இனந்தானே! 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று வாய்மணக்கப் பாடுகிறோம். அந்த வள்ளுவன் வாழ்ந்த காலம், பிறந்த இடம் ஆகியவற்றைப்பற்றித் தெள்ளத்தெளிய இதுவரை நமக்கு ஏதேனும் தெரியுமா? ஒருவன் தனது அப்பனையும் பாட்டனையும் பற்றியே சரிவர அறிந்து வைத்துக்கொள்ளவில்லை என்றால், அவன் பெருமை என்ன ஆவது?

—ம. பொ. சிவஞானம்.



சீன சர்க்கஸ்

ரஷ்ய சர்க்கஸ் கோஷ்டியினரின் திறமையை சில மாதங்களுக்குமுன் கண்டோம். சென்ற மாதம் சீனக் கோஷ்டியினரின் சர்க்கஸ் காட்சிகளைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ரஷ்யக் கோஷ்டியினரை தூக்கியடிக்கும் முறையில் சீனக்கோஷ்டியினர் அபார, அற்புத வேலைகளைச் செய்து காட்டினர்.

ஒவ்வொரு அயிட்டங்களையும் எப்படி செய்திருக்க முடியும் என்று நினைத்துப் பார்க்கக்கூட கஷ்டமாயிருக்கிறது. ஒரு பீங்கான் ஜாடியை நெற்றிமீது வைத்துக்கொண்டு அதை நிமிர்த்துவது திருப்புவது இதெல்லாம் பிரமாதம்.

இக்கோஷ்டியினர் ராஜகுமாரி அமிருதகௌர் பயிற்சி திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டனர்.

இந்த சர்க்கஸ்காரர்கள் பீகிங் வெரைட்டி தியேட்டர் ஸ்தாபனத்தைச்சேர்ந்தவர்கள். அவர்கள் செய்து காட்டிய ஏராளமான அயிட்டங்களில் எது சிறந்தது என்று சொல்லவே முடியவில்லை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையில் சிறந்ததாக இருக்கிறது. இவர்களின் கண்கட்டு வித்தை எல்லாவற்றையும் மிஞ்சிவிட்டது. பெண்கள் ஆண்களைவிட திறமையை வெளிப்படுத்தினர்.

இத்தகைய கோஷ்டியினரின் விஜயத்தினுல் நாடுகளிடையே ஐக்யம் பலப்படுவதுடன் பிறநாட்டினர் உடல் பயிற்சிகளில் எவ்வளவு கவனம் செலுத்துகிருர்கள் என்பதையும் அறிய முடிகிறது.

'பாலன்ஸ்' திறன் காட்சிகளில் சில. இவ்வளவு அபூர்வமாக இதுவரை யாருமே செய்ததில்லை.

★





சீனாவிலும் ரஷ்யாவிலுள்ளதைப் போல இக்கலையைக் கற்பதற்கான பள்ளிகள் இருக்கின்றன.

★

என்னைக் கவர்ந்த இந்தியா

பேராசிரியர் டோயென்பி

பிரபல பிரிட்டிஷ் சரித்திர பேராசிரியர் டாக்டர் ஆனல்ட் ஜோஸப் டோயின்பி சென்னை வந்திருந்தபோது அவரை நமது நிருபர் சந்தித்துத் திரட்டிய கருத்துகளைக் கொண்டது இக்கட்டுரை.

இந்தியாவில் இப்போது காணப்படும் இந்திய நாகரிகம் ஆரிய திராவிட அம்சங்கள் ஒன்ருக கலந்து காணப்படுவதாகும். ஆரியர்கள் வெளி நாட்டிலிருந்து படையெடுத்து வந்தவர்கள். அவர்கள் ஒரிஸா, மகாராஷ்டிர எல்லையுடன் நின்று விட்டார்கள். இதன் பின்தான் ஆரிய நாகரிகமும் திராவிட நாகரிகமும் ஒன்ருகக் கலந்துவிட்டன. வட இந்தியாவின் நாகரிகத்தை திராவிடர்கள் ஏற்றுக் கொண்டனர். அதே சமயத்தில் திராவிடர்கள் தங்களுடைய நாகரிகத்தையும் பிரதிபலிக்கச் செய்தனர்.

இந்தியாவின் மதப்பற்று சர்வ வியாபகமானது. கிருஸ்துவ, முஸ்லிம், பௌத்த மதங்களைப்போல ஹிந்து மதம் அதிகமாகப் பரவாவிட்டாலும் இன்னும் அது வளர்ச்சியடைந்தும் பரவிக் கொண்டுமே வருகிறது.

தனி மனிதன் பிரச்னைகளுக்கு மதம் எப்போதுமே உதவியாக இருந்திருப்பதால், கம்யூனிஸம் இந்தியாவில் தழைத்தோங்க மார்க்கமேயில்லை.

உலக நாகரிகமும் சமாதானமும் தழைத்தோங்க இந்தியாவின் சகிப்புத்தன்மை மிகவும் உதவியாக இருக்கும். உலக சரித்திரத்தின் அடுத்த அத்தியாயத்தில் இந்தியாவுக்குப் பெரும் பங்கு இருக்கிறது.

பலாத்காரம் இல்லாமல் அந்நிய நாட்டினரிடமிருந்து

டோயென்பி

சுதந்திரம் பெற முடியும் என்று காந்திஜிக்குமுன் வேறு யாரும் நினைத்துக்கூட இருக்க மாட்டார்கள். உலக சரித்திரத்திலேயே காந்திஜியின் வழி ஒரு புது வழியாகும். காந்திஜி ஆரம்பித்த வேலையை நேரு இப்போது தொடர்ந்து செய்து கொண்டிருக்கிருர்.

உலக நாடுகளின் அடிப்படை அரசியற் கொள்கைகள் என்னவாயிருப்பினும், அவை ஐ. நா. சங்கத்தில் இடம் பெறும் உரிமையுடையன. சட்ட திட்டங்கட்கு அடங்கித் தமக்கிடையிலுள்ள தகராறுகளை விவாதித்து முடிவு செய்ய இச்சங்கத்தில் மாபெரும் நாடாகிய சீனம் இடம் பெருதிருப்பது ஆச்சரியமானதே! அமெரிக்காவே இதற்குக் காரணமாக விருப்பது பெரிதும் வருந்துதற்குரிய தொன்று. ★

மார்ஷல் ஜுகோவ்

ரஷ்ய ஜெனரல் மார்ஷல் ஜுகோவ் சமீபத்தில் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தார். நமது ராணுவத்தைப் பாராட்டியதுடன் அதை நம் தேசியத் தேவைகளுக்கு உகந்த முறையில் திருத்தியமைக்க வேண்டும் என்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

1896-ம் ஆண்டில் மத்திய ரஷ்யாவிலுள்ள கலுகா பிராந்தியத்தைச் சேர்ந்த ஸ்டிரல் கோவ்கா என்ற கிராமத்தில் ஒரு விவசாயியின் குடும்பத்தில் ஜுகோவ் பிறந்தார். இவர் முதலாவது உலக யுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்ட வீரர்களில் ஒருவர். பிப்ரவரி புரட்சியின்போது, அவரது படைப் பகுதியினர் அவரைத் தமது பகுதியின் புரட்சிக் கமிட்டிக்கு தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். *1918* ஆண்டிலிருந்து ஜுகோவ் செஞ்சேனையின் அணிவரிசைகளில் பணியாற்றிவந்துள்ளார். *1919*-ம் ஆண்டில் ஆரம்பத்தில் அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். யூரல்ஸ் போர் முனையிலும், ஜாரிஸ்ட்ஸினில் (ஸ்டாலின்கிராடில்) நடைபெற்ற போராட்டத்திலும் ஜுகோவ் பங்கெடுத்துக் கொண்டார். ஜாரிட்ஸின் போராட்டத்தின்போது அவர் படுகாயம் அடைந்தார். பூரண குணமடைந்த பிறகு, எதிர்ப் புரட்சி தளபதி விராங்கலுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த குதிரைப் படைப் பகுதி ஒன்றின் தலைவராக நியமிக்கப் பட்டார். அதற்குப் பிறகு அப்படை பூராவிற்கும் தளகர்த்தராக நியமிக்கப்பட்டார்.

உள்நாட்டு யுத்தம் முடிந்த பிறகு ஒரு குதிரைப் படை ரிஜிமெண்டின் தலைவராகப் பணியாற்றி வந்தார். அதே சமயத்தில் பெரும் ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கான உயர்தரப் பயிற்சிகளிலும் தேறினார். *1930*-ம் ஆண்டில் ஒரு குதிரைப்படை பிரிகேடின் தலைவராகப் பணியாற்றினார். *1931*-ம் ஆண்டில், செஞ்சேனை

யிலுள்ள குதிரைப் படையின் உதவி அதிபராக நியமிக்கப் பட்டார்.

1933-லிருந்து *1938*-வரையில் ஒரு குதிரைப்படை டிவிஷனுக்கும், பிறகு செஞ்சேனையின் குதிரைப்படை பூராவிற்கும் தளகர்த்தராகப் பணியாற்றினார். அதற்குப் பிறகு அவர், பைலோ ரஷ்ய விசேஷ ராணுவ ஜில்லாவின் உதவி தளகர்த்தராக நியமிக்கப்பட்டார். *1939*-ல் ஜப்பானிய ராணுவம் மங்கோலிய மக்கள்குடியரசின்பிரதேசத்திற்குள் ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் படையெடுத்தபோது, தற்காப்பு யுத்தம் நடத்திய சோவியத்-மங்கோலிய துருப்புகளுக்கு ஜுகோவ் தலைமை தாங்கினார். கால்-கின்-கோல் நதிதீரத்தில் ஜப்பானிய துருப்புகள் படுதோல்வி யடைந்தன. இவ்வெற்றியை சாதித்ததற்காக ஜுகோவுக்கு "சோவியத் யூனியன் வீரர்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. *1940*-ல் கீவ் விசேஷ ராணுவ ஜில்லாவின் தளகர்த்தராக நியமிக்கப்பட்டார். *1941* ஜனவரியில் செஞ்சேனையின் பொதுக் குழுத்தலைவராகவும், சோவியத் யூனியன் பாதுகாப்பு இலாக்காவின் உதவி மக்கள் கமிஸாராகவும் நியமிக்கப்பட்டார்.

லெனின்கிராடில் மிகவும் அபாயகரமான நிலைமை ஏற்பட்ட பொழுது, *1941* செப்டம்பர் *13*-ம் தேதியன்று, லெனின்கிராடு போர்முனைக்கு தோழர் ஜுகோவ் தளகர்த்தராக நியமிக்கப்பட்டார். அவரது தலைமையின்கீழ் சோவியத் துருப்புகள், லெனின்கிராட் நகரின் தலைவாசலுக்கருகில், எதிரியின் எதிர்த்தாக்குதலை முறியடித்து, லெனின்கிராட் நகரைக் காப்பாற்றின. இதனால் எதிரியின் துருப்புகள் முன்னேற முடியாதபடி நீண்ட கால முற்றுகையில் ஈடுபட வேண்டியதாயிற்று.

1941 அக்டோபரில், சோவியத் நாட்டின் தலைநகர் மாஸ்கோவிற்குப் பெரும் அபாயம் எழுந்தபோது, ஜுகோவ் மேற்குப் போர்முனைக்குத் தளகர்த்தராக நியமிக்கப்பட்டார். இவரது தலைமையிலிருந்த துருப்புகள், எதிரிப்படைகள் மாஸ்கோ நகரை நோக்கி முன்னேற முடியாமல் தடுத்து நிறுத்தினதுடன், ஒரு மிகப் பெரிய எதிர்த்தாக்குதலையும் தொடுத்தன. இதன் விளைவாக ஜெர்மன் - பாஸிஸ்ட்டு துருப்புகள் மாஸ்கோவிற்கு மேற்கே, பின்னோக்கித் தள்ளப்பட்டன. இதுதான் எதிரிப் படைகளுக்கு முதன் முதலில் ஏற்பட்ட பெரும் தோல்வி என்பது குறிப்பிடத்தக்கது. *1942*ம் வருடம் ஆகஸ்டிலிருந்து யுத்தம் வரையில், ஜுகோவ், சோவியத் யூனியன் இராணுவத்தின் உதவி சேனாதிபதியாகப் பணியாற்றினார். லெனின்கிராட் போர்முனையின் நடவடிக்கைகளையும், வோல்கோல் போர்முனையின் நடவடிக்கைகளையும் ஒரு திட்டத்தின்படி ஒருமுகப்படுத்தி, லெனின்கிராட் நகரை எதிரியின் முற்றுகையிலிருந்து விடுவித்தார்.

1943 ஜனவரி *18*ந் தேதியன்று, "சோவியத் யூனியன் மார்ஷல்" என்ற பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. *1944*ல் கிழக்குப் போர்முனையில் குர்ஸக் போராட்டத்தில் சோவியத் ராணுவ நடவடிக்கைகளுக்கு ஜுகோவ் வழி

காட்டினர். இதன் விளைவாக ஜெர்மன் பாஸிஸ்டுத் துருப்பு களின் இரண்டு முக்கிய பிரிவு கள் நிர்மூலமாகின. 1944ல், யுக்ரைனையும், பைலோ ரஷ் யாவையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கினர்.

யுத்தம் முடிந்த பிறகு, ஜெர் மெனியிலிருந்த சோவியத் துருப்புகளின் சேனதிபதியாக வும் சோவியத் ராணுவ நிர்வா கத்தின் அதிபராகவும் நியமிக் கப்பட்டார். அதற்குப் பிறகு, சோவியத் தரைப்படைகளின் சேனதிபதியாக நியமிக்கப்பட் டார். அதற்குப் பிற்பட்ட ஆண்டுகளில், ஓடெஸ்லா யூரல்ஸ் இராணுவ ஜில்லாக் களுக்குத் தலைமை தாங்கினர், 1953ம் ஆண்டிலிருந்து உதவிப் பாதுகாப்பு மந்திரியாகவும், அதற்குப் பிறகு 1955 பிப்ரவரியி லிருந்து பாதுகாப்பு மந்திரியாக வும் இருந்து வருகிருர்.

இவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை. ★

அட்டைப்படம்

மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்!

அன்று பாரதியார் கண்ட கனவு இன்று நனவாகி வருகிறது. தேச ஆட்சிக்கான முதல் வழி வியாபாரம் செய்து வந்த வெள்ளையர்களை வெருட்டி யடிக்கவேண் டும் என்பதுதான் என்பதை முதலில் உணர்ந்தவர் தமிழரான வ. உ. சிதம்பரம்தான். ஒரு காலத்தில் மேறகே, கிரீஸ், ரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா சுமத்ராவுக்கு அப்பாலும் தமிழனின் கப்பல் போய் வந் தது. தமிழ் வாணிபம் சிறப்பாக ஓங்கியகாலம் அது.

அந்தச் சிறப்பான பெருமை தமிழனுக்கு மீண்டும் ஏற்பட வேண்டும் என்றுதான் வ. உ. சி. அவர்கள் 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி'யை ஸ்தாபித்தார். இன்று நாடு சுதந்திரம் பெற்றபின் சுதந்திர இந்தியா வில் கப்பல் ஓட்ட அவர் இல்லை.

கடலோர வர்த்தகம் அந்நியருக்கிருந்த அநீதி நீங்கி அன்று பாரதியார் விரும்பியதுபோல இன்று மேலைக் கடல்களிலும் இந்தியா கப்பல் விடுகிறது.

இந்தியாவுக்கு கடற்படையும் உருவாகி வருகிறது. விமானந்தாங்கிக் கப்பல் வாங்கும் ஏற்பாடு சமீபத்தில் தான் பூர்த்தியாயிற்று. இந்தியாவின் கப்பல்கள் இந்திய பொருளாதார சுபிட்சத்திற்கு பெரும் உதவி செய்ய முடியும். சென்னைத் துறைமுகத்தில் கப்பல் வந்துள்ள காட்சியை இம்மாத 'திங்கள்' அட்டை அலங்கரிக்கிறது.

போட்டோ: சந்தாமியான்.

சரோஜினி தேவி

அ. அப்துல் காசிம்

இந்திய சுதந்திர வரலாற்று ஏட்டைப் புரட்டிக் கொண்டே சென்றால், இமய முதல் குமரிவரை தோன்றிய ஆயிரமாயிரம் வீரர்களையும், வீராங்கனைகளையும் நாம் சந்திக்கலாம். அவர்கள் மூட்டிய தியாகத்தீயில் எராளமான தொண்டர்கள் தங்கள் குருதியை நெய்யாகக் கொட்டினர்; எலும்பை ஆகுதியாக இட்டனர். உயர்த்திப் பிடித்த கொடியை ஒரு நாளும் தாழ்த்தமாட்டோம் என வீர முழக்கமிட்டனர். அவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இடியென முழங்கிய நேரத்திலே. அண்ணல் காந்திஜீயின் அஹிம்சைப் போராட்டத்திலே, வாழ்க்கையை அர்ப்பணிக்க ஓடி வந்த ஆரணங்குகளின் வரிசையிலே முதலிடம் பெறுபவர் நம் கவி சரோஜினியேயாகும்.

நம் கவிஞர் சுதந்திரப் போராட்டத்தில் மட்டுமின்றி சமூக சேவை செய்வதிலும் சலிப்பின்றி பணியாற்றினார். சுதந்திரக்கனல் ஒளிவிட்டுப் பிரகாசித்த நேரத்திலே இந்து-முஸ்லிம்களிடையே கருத்து வேறுபாடு காணத் தலைப்பட்டது. அதன் காரணமாக ஆங்காங்கு ஏற்பட்ட சண்டை சச்சரவுகளைத் தீர்த்துவைக்க, அல்லும் பகலும் அருந்தொண்டாற்றிய அண்ணல் காந்திஜிக்கு உறுதுணையாக இருந்து அவர் ஆற்றிய தொண்டை அளவிட முடியாது.

அன்னை சரோஜினியின் வாழ்க்கை வரலாற்றிலே, பல அதிசயிக்கத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. கற்பனையின் சிகரமாய், பெண்களின் திலகமாய், ஆங்கில மேதையாய், அரசியல் ஞானியாய், இலக்கிய ராணியாய், இந்தியப் பெண்களுக்கோர் வழிகாட்டியாய் அவர் நம் கண்முன்னே காட்சியளித்தார்.

அவர் வங்காளத்தில் பிராமண குலத்தில் தோன்றிச் சென்னையைச் சேர்ந்த கோவிந்தராஜுலு நாயுடுவை மணந்தார். சிறுமியாய் இருந்த பொழுது பிற்காலத்தில் தான் ஒரு கணிதமேதையாகவோ, விஞ்ஞான விற்பன்னராகவோ விளங்க வேண்டுமென ஆவல் கொண்டார்.

ஆங்கிலப் பாடம் அவருக்கு வேப்பெண்ணெய் சாப்பிடுவது போலிருக்கும். ஆங்கிலப் பாடம் நன்கு புரியாத குற்றத்திற்காக அவர் தந்தை அறையில் அடைத்தும்

ஆப்பிரிக்காவில் போயர் யுத்தத்தின் போது மகாத்மா சில இந்தியர்களுடன் ஆம்புலன்ஸ் படையில் சேவை செய்த சமயம். ஆம்புலன்ஸ் படையினருக்கு யூனிபாரம் தைக்க உதவும்படி காந்திஜி லண்டன் வந்தபோது வேண்டுகோள் விடுத்திருந்தார். ஒரு நாள் ஒரு பெரும் துணி மூட்டையே வேலையாள் தூக்கிவர, நாகரிக யுவதி ஒருவள் காந்திஜியைக் காணவந்தாள்.

இவர்தான் சரோஜினி. கோகலேதான் அவரை அனுப்பியிருந்தார். காந்தியை கண்டதும் சரோஜினிக்கு பெரும் ஏமாற்றமே ஏற்பட்டது. ஆனால் அவருடன் பேச ஆரம்பித்ததும் தான் அந்த அன்பின் மோகன சக்திக்கு அவர் அப்படியே வசப்பட்டு விட்டார்.

போட்டார் சரோஜினி தேவியை! ஆனால், அதே சரோஜினி பதினோராம் வயதில் அகில உலகமும் போற்றும் ஆங்கிலக் கவியாக மாறிவிட்டார்! பதின்மூன்றும் வயதிற்குள் ஆங்கிலக்கவி சர்வால்டர் ஸ்காட்டையும் மிஞ்சி விட்டார்—கவிதை புனைவதில்!

அவரது அறிவையும் ஆற்றலையும் கண்ட நிஜாம் மன்னர், தனது செலவில் லண்டனிலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும், கல்வி பயின்று வர அனுப்பினார். சரோஜினி வெற்றிக்கொடி நாட்டி வீடு திரும்பினார். மேல்நாடு சென்று பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி நம் சரோஜினி தேவியேயாகும்.

கவிஞர், கலைஞர் என்ற மாத்திரத்தில் வறுமை, பசிப்பிணி என்பவைதான் நம் கண்முன்னே காட்சியளிக்கும். ஆம்! உலகில் தோன்றிய மாபெரும் கவிஞரும், கலைஞரும் வறுமையில் வாடி, உடல் சோர்ந்து, உள்ளம் நொந்து, உண்ண உணவின்றித்தான் வாழ்க்கையை நடத்தினார்கள்.

ஆனால் சரோஜினி வறுமையின் வசம் சிக்கவில்லை. அண்ணல் காந்திஜியின் விடுதலை இயக்கத்திலே திடீரெனக் குதித்தார். அவ்வளவுதான் உல்லாச வாழ்க்கையை உதறித் தள்ளி, பட்டுப்பீதாம்பரத்தை பறக்கவிட்டு, ஆடம்பர வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்தார்.

1924-ம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டிற்கு தலைமை தாங்கினார். ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதாம் ஆண்டு நடைபெற்ற உப்புச் சத்தியாக்கிரகத்திற்குத் தலைமை தாங்கினார். இவ்வாறு எத்தனையோ தலைமைப் பதவிகளைத் தாங்கி திறம்பட நடத்தி இந்தியப் பெண்களுக்கோர் வழிகாட்டியாய் விளங்கினார்.

அண்ணல் காந்தியின் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்தார். இருவரும் எப்பொழுதும் கேலியாகவே பேசிக்கொள்வர். கவிஞர் காந்திஜியை 'மிக்கி மௌஸ்' என்றும், ஜின்னாவை 'டொனால்ட் டிக்' என்றும், அழைத்து வந்தார். கவிஞர் எங்கெல்லாம் இருப்பாரோ, அங்கெல்லாம் நகைச்சுவை ததும்பும்.

> உப்பு சத்யாக்ரகத்தின் போது மகாத்மாவுக்கு அடுத்த சேனைத்தலைவியாக அமர்ந்து தர்ஸனா உப்பளக் கோட்டையைத் தாக்கிய வீரபெண்மணி இவர். அப்போது அவருக்கு வயது 50 இருக்கும். வட்ட மேஜை மகாநாட்டுக்கு காந்திஜியுடன் சென்றவர்களில் இவரும் ஒருவர். இவர் ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்ரிக்கா நாடுகளுக்குச் காங்கிரஸ் தூதராகச் சென்று, இந்திய விடுதலை இயக்கத்திற்கு ஆசிய நாடுகளில் பிரசார உரிமை போராடும் இந்தியர்களுக்கும் சாதகமாக உலக அபிப்பிராயத்தை திருப்பியவர். நாடு சுதந்திரமடைந்த பின் ஐக்கிய மாகாண கவர்னராக சேவை செய்தவர்.

சரோஜினி தேவியிடம் ஊற்றெடுத்தோடிய கவிதா வெள்ளத்தைக் கண்ட காந்திஜி, அகமகிழ்ந்தார். அவரது கவிதைகளைப் படித்துப் படித்து பரவச மடைந்தார். கற்பனைத் திறனையும், கவிதா சக்தியையும் கண்ட காந்தி, அவரை 'புல் புலே ஹிந்த்' (இந்தியாவின் வானம்பாடி) என அழைத்தார்.

அவர் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காக ஓய்வு உறக்கமின்றி, அல்லும் பகலும் அரும்பாடுபட்டார். அதன் காரணமாக ஐக்கிய மாகாண முஸ்லீம்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று அவர்களுக்குத் தாய்போலப் பணியாற்றினார்.

சரோஜினி லண்டனுக்கு வந்தபோது அவருக்கு வயது 16. அப்போதே அவர் கவிதை புனைவதில் மிகத் திறமைசாலி, இவர் கவிதாப் புலமையை கோசே ஸா லைமான்ஸ், ஹார்டி, பெர்ட்ஸ்ஸி காலின்னே, ஹேவ்லக் எல்லிஸ், ஹென்ரி ஜேம்ஸ் முதலானவர்கள் போற்ற ஆரம்பித்தனர். லண்டன் இலக்கிய சங்கத்தில் சேர்த்து இவர் கௌரவிக்கப்பட்டதின் காரணமாகவே, இவர் காந்தியை சந்தித்த சமயம் (1914ல்) லண்டனில் இருந்தார். இதற்குப்பின் காந்தியை சரோஜினி அடிக்கடி சந்தித்துவந்தார்.

கவிஞரிடம் உரையாடுவது மிக உற்சாகமாக விருக்கும். சாடையாலும், சைக்கினையாலும், இனிய குரலில் பேசும்பொழுது அவரது பேச்சிலே தேன் சொட்டும். திடீரெனக் குரலை மாற்றி, கேட்பவர்களை திகிலடையச் செய்வதில் அவருக்கு நிகர் அவரேதான்.

அவரிடம் கேள்வி கேட்கும் நிருபர்களிடம் எதிர்க்கேள்வி போட்டு அவர்களையே திணறடிப்பார். "ஏன் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் இந்தியாவிற்கு திரும்பிச் செல்லக் கூடாது?" என ஒருவர் கேட்டாராம். உடனே நம் கவிஞர். "ஏன் தென்னாப்பிரிக்காவில் உள்ள வெள்ளையர்கள் உடனே வெளியேறி தாய்நாட்டிற்குப் போகாமலிருக்கிறார்கள்?" இக்கேள்வியைக் கேட்டவர் ஊமையாகி ஒன்றும் பேசாமல் சென்று விட்டார். இவ்வாறு அவரது அறிவைக் கண்டோர் வியப்புறுவர்.

ஒன்பது வயதில் ஆங்கிலம் தெரியாத காரணத்திற்காக அறையில் அடைபட்ட சரோஜினி, பதினேராம் வயதில் ஆங்கிலக் கவியாக மாறினார். கணிதை மேதையாக விரும்பிய சரோஜினி காலச்சூழலில் கவிஞராக மாறினார். கவிஞராக வாழ்க்கையைத் துவங்கிய சரோஜினி, அரசியல் மேதையாக விளங்கினார். அரசியல் மேதையாக விளங்கிய சரோஜினி, ஆட்சி பீடத்தில் அமர்ந்தார்.

இவ்வாறு புரட்சிகரமான புதிய தோர் வாழ்க்கையில் இலங்கிய அவரது தொண்டு, என்றும் மறக்க முடியாதது. அவர் வகித்த பதவிகள் ஆசிய மாதர்களுக்கோர் எடுத்துக்காட்டு! அவர் இந்தியாவின் முடிசூடாராணியாக விளங்கி இந்தியப் பெண்களுக்கோர் வழிகாட்டியாய் வாழ்க்கையை நடத்தினர்.

இன்று, நம்மிடையே சரோஜினியார் இல்லாவிட்டாலும், அவர் நமக்கு விட்டுச்சென்ற அரும்பெரும் கவிதைகள் நம்மிடையே இருக்கின்றன. அவரை மறந்தாலும் அவர் எழுதிய 'தங்க வாசல்', காலப்பறவை' என்ற கவிதைச் சோலையை யார்தான் மறக்க முடியும்?

கவிக்குயில் சரோஜினிதேவி ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினர். ஆனல் ஆங்கில மொழியின் ஒளியிலும் மாண்பிலும் திளைத்து கவிதைகள் புனைந்தார்.

இவர் சென்னை சர்வகலாசாலை பட்டதாரி. தன் பன்னிரண்டாம் வயதில் மெட்ரிக்குலேஷன் பாஸ் செய்து 'அல்ஜீப்ரா' வகுப்பில் கவிதை நாட்டங் கொண்டார். தன் பதினரும் வயதில் சரோஜினி மேல் படிப்புக்கு லண்டன் சென்ருர். அவர் எழுதிய முதல் கவிதை 'Brid of Time'. அவர் வங்காளியாக இருந்தாலும் ஹைதராபாத்திலேயே அதிகமாக வசித்தவர்.

சுதந்திர இந்தியாவில் கவர்னர் பதவி வகித்த முதல் இந்தியப் பெண்மணி சரோஜினிதான் என்பது இந்திய சரித்திரத்தின் பெருமையை உலகிற்கறிவிக்கிறது. ★

டாக்டர் ஸி. பி. யுடன் ஒரு நாள்..

பேட்டி :
'நந்தலால்'

போட்டோ :
சந்தாமியான்

டாக்டர் ஸி. பி. என்றதுமே ஆஜானுபாகுவான உருவம், நீண்ட கோட், தலைப்பாகை இவை நம் கண்முன் தோன்றுவதுடன் மட்டுமின்றி, அவர் மிக அழகாக உச்சரித்துப் பேசும் ஆங்கிலமும் நம் செவியில் விழுவதை உணருகிறோம். அவர் சென்னையில் சேர்ந்தாற் போல சில தினங்கள் இருப்பதில்லை. அவர் காசி சர்வகலாசாலையின் தற்போதைய உப அத்யக்ஷகர். இதற்கு முன் அண்ணாமலை, திருவாங்கூர் கலாசாலைகளில் உப அத்யக்ஷகர் பதவி வகித்தவர். நிர்வாகத்தில் கைதேர்ந்தவர் என்பது இன்று எல்லாத்துறைகளிலும் முன்னணியிலுள்ள திருவாங்கூரே எடுத்துச் சொல்லுமே!

ஹரிஜனங்களுக்கு திருவாங்கூர் ஆலயங்களைத் திறந்துவிட வழிகாட்டியாக இருந்தவர் ஸி. பி. அவர்களே. அயல்நாடுகளில் சென்று, தன் இனிமையான பிரசங்கங்களின் மூலம் இந்தியாவின் பெருமையை உணர்த்தியதும் அவரே.

அவர் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று கூட்டங்கள் வீதம் சென்ற ஒரு மாதத்தில் பேசியிருக்கிறார். இக்கூட்டங்களில் அநேகமாக எல்லாவற்றிற்குமே நான் சென்றிருந்தேன். அவர் பிரசங்க வன்மை என்னை மிகவும் கவர்ந்ததே அதற்குக் காரணம். ‘ஸி. பி.யுடன் ஒரு நாள்’ என்று குறிப்பிடுவதைவிட, ‘ஸி. பி. யுடன் ஒரு மாதம்’ என்றுகூட குறிப்பிடலாம்.

திருவாசக வெளியீட்டு விழா, திருமறை வெளியீட்டு விழா, பெற்றோர்கள் மகாநாடு, கல்விக் கண்காட்சி திறப்புவிழா எதுவும் ஸி. பி. இல்லாமல் நடைபெற முடியாது. இங்கு வெளியிடப்படும் அவருடைய கருத்துக்கள் பல, அவருடைய பிரசங்கங்களிலிருந்து திரட்டியவை. ஒற்றுமை, ஒருமை இவைகளின் வித்தியாசங்களை விளக்கி அவர் கூறியதாவது:

அரசியலில் எதிர் கட்சியின் அவசியம்பற்றி சமீபத்தில் சர்ச்சை நடைபெற்றது. அரசியலைப் பொருத்த வரையில்

நிலைமை மிகத் தெளிவாக உள்ளது. ஜனநாயகம் மிகவும் கஷ்டமான நிலை. அது எல்லா இடங்களிலும் வெற்றி பெற்று விடவில்லை. அது உலகம் முழுவதும் ஒரே மாதிரியான மார்க்கத்தையும் பின்பற்றவில்லை. இந்தியாவின் சரித்திரம் முழுவதிலும் வித்தியாசங்கள் இருந்து வந்தபோதிலும் அடிப்படையில் ஓர் ஒற்றுமை இருந்து வந்திருக்கிறது. வடக்கையும் தெற்கையும் ஒன்று சேர்க்கும் லட்சிய ஒற்றுமை உள்ளது.

உலகம் முன்னேற முன்னேற வேற்றுமைகளை அதிகரிக்கும் மனப்பான்மைகளும் செயல்களும் அதிகரித்து வருகின்றன. மனிதத் தன்மையை வளர்த்து உயர்த்துவது தான் வாழ்க்கையின் லட்சியம். இந்த மனிதத் தன்மையை அழிக்க அல்லது இதன் முக்கியத்துவத்தைக் குறைக்க செய்யப்படும் எந்த முயற்சியும் தீயது.

மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியாகச் சிந்தித்து ஒரே மாதிரியான கருத்துக்களைக் கொண்டிருக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் கூறப்படும் ஒருமை தானும் அழிந்து மனிதனின் தனித்தன்மையையும் அழித்து விடும்.

இந்தியாவில் ஜனநாயக வளர்ச்சிக்கு உள்ள முக்கிய முட்டுக்கட்டை எது என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், ஒரு தலைவரை தெய்வமாக பாவித்து, அவர்களை குறை கூறாமலிருக்கும் மனோபாவம் எப்போதுமே இருந்து வருகிற

காலையில் முக்கிய வேலை பத்திரிகை படிப்பது

பொதுக் கூட்டங்களில் பேசுவதென்றால் கனகுஷி

தென்றும் இந்த மனப்பான்மைக்கும் ஜனநாயகத்திற்கும் ஒத்துவராதென்றும் அவர் கூறினார்.

ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் என்று முழுவதும் சொல்வதைவிட, ஸி. பி. என்ற இரண்டு எழுத்தைச் சொன்னால் சட்டென்று யாருக்கும் தெரியும். இவருக்கு ஆங்கிலம் சமஸ்கிருதம் இரண்டிலும் பாண்டித்யம் உண்டு. தமிழ் சில வருஷகளாக கற்றுவருவதாகக் கூறினார். ஆனால், திருமுறை வெளியீட்டு விழாவில் ''இந்த இடத்தில் ஆங்கிலத்தில் பேசினால் நன்றாக இருக்காது. எனக்குத் தெரிந்த வரையில் தமிழில் பேசுகிறேன்'' என்று குறிப்பிட்டு விட்டு தமிழில் பேசினார். தமிழில் எவ்வித தடங்கலுமில்லாமல் மிக நன்றாகவேதான் பேசினார். அன்று பொங்கல் நாள். அப்புனித நாளன்று அவர் தமிழில் பிரசங்கம் செய்வது அரங்கேற்றமாகி விட்டது.

ஸி. பி. பத்திரிகை தொழில் கமிஷனில் மெம்பராக இருந்து அரிய சேவை செய்திருக்கிறார். நிர்வாகத்தில் தலைசிறந்த இவரை இந்தியா இன்றும் பூராவாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். சமூகம், கல்வித்துறைகளில் இவர் செய்துள்ள சேவைக்கு நாடு என்றும் கடமைப்பட்டுள்ளது. ★

எல்லோரும் மன்னர்கள்

எச். டி. ராஜா

நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் இருந்த ஸ்ரீராஜா, ராஜ்ய சபை மெம்பராக சேவை செய்தவர். இப்போது லோகசபையின் அபேட்சகர்.

புதிய அரசியலமைப்பின்படி வயது வந்த எல்லோருக்கும் வோட்டுரிமை உண்டு. வோட்டர்களின் இஷ்டப்படியே அதாவது பிரஜைகளின் இஷ்டப்படியே ஆட்சி நடக்கும். சுருங்கச் சொன்னால் எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள்!

வோட்டு மூலம் நாட்டை ஆளும் பிரஜைகளுக்கு அதிகாரத்துடன் பொறுப்பும் உண்டு. அதுதான் நாட்டுப் பாதுகாப்பில் அக்கறை காண்பிப்பது.

எச். டி. ராஜா

தேசிய வருமானத்தை அதிகரிப்பதிலும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் மக்கள் மனப்பூர்வமாக சிரத்தை காட்டவேண்டும். வெறும் சம்பளத்திற்கு வேலைசெய்வதாக மக்கள் மனதில் எண்ணமிருந்தால், எந்தத் தொழிலும் துரிதமாக முன்னேற முடியாது. வயல்களில் வேலை செய்வது மூலமும் கைத் தொழில்கள் மூலமும் நாட்டின் உற்பத்தியையும், செல்வத்தையும் பெருக்குகிறோம். உற்பத்தி பெருக்கினாலேயே தேசிய செல்வம் பெருகி வாழ்க்கைத் தரம் உயர முடியும் என்பதை உணர வேண்டும். முக்கியமாக விவசாய நாடாக உள்ள நமது இந்தியா, உணவுக்காக பிறரை நம்பி இருப்பது மானக் கேடாகும் பக்கத்து நாடுகளுக்கு அவசியமானபோது நாம் சகாயம் செய்யக்கூடிய அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

நெசவுத் தொழிலில் நம்நாடு புகழ்பெற்றது. முதல் முதலில் சீமைக்கு பருத்தி கொண்டு போனவர்கள் நாம்தான். அப்போது சீமையில் பருத்தி உடை கிடையாது. பருத்தியே அங்கே யாருக்கும் தெரியாது. ஆட்டு ரோம உடைகளையே உடுத்தி வந்தனர். நமது பருத்தி அங்கே போனவுடன், "ஓ இவ்வளவு வெண்மையான ரோமம் உள்ள

ஆடுகள் உங்கள் இந்தியாவில் இருக்கிறதா?''என்று அதிசயத்துடன் கேட்டார்கள் வெள்ளையர்கள். ''ஐயா இது ரோமம் அல்ல. செடியில் காய்க்கிற பருத்தி,'' என்று இந்தியர் சொன்னதும் வெள்ளையர்கள் ஆச்சரியப்பட்டனர்.

ஆனால், பழம் பெருமையை மட்டும் நாம் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? நமது மக்கள் ஜவுளியை நல்ல தரமாக மேன்மேலும் உற்பத்தி செய்து, தாங்களும் வித விதமான உடைகளை உடுத்திக் கொள்வதோடு, வெளி நாட்டுக்கும் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை சம்பாதிக்க வேண்டும்.

ஆட்சி நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும் அதற்குப் பொறுப்பு மன்னர்களே—அதாவது மக்களே. ஏனென்றால் மக்கள்தானே தங்கள் வோட்டுகள் மூலமாக பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள்? அப் பிரதிநிதிகள் சரியாக நிர்வகிக்கிறார்களா என்று இடைவிடாது சவனித்து வரவேண்டும். ஜனநாயகத்தில் மக்களின் இந்தக் கண்காணிப்பு மிக அவசியம்.

இதே பொறுப்பை பலம் பொருந்திய எதிர்கட்சியும் திறம்படநிறைவேற்ற முடியும். நமது நாட்டில் அப்படி ஒரு எதிர் கட்சி இல்லாதது துர்ப்பாக்கியமாகும். இங்கே கொஞ்சம் கொஞ்சம் பலத்துடன் பல பலவீனமான எதிர்க்கட்சிகள் உள்ளன. நாட்டின் நலனுக்கு இது உகந்ததல்ல. அதனால்தான், ஆட்சியில் உள்ளவர்கூட, ஜனநாயகம் வெற்றிகரமாக இயங்க வேண்டும் என்றால், பலம் பொருந்திய எதிர்க்கட்சி அவசியமானது என்று அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். சரியான கேள்விகள் கேட்க சட்ட சபைகளில் ஆட்கள் இருந்தால்தான், பதவியில் உள்ளவர்களும் சுறுசுறுப்பாகப் பணியாற்றுவார்கள். மொத்தத்தில் இதனால் ஜனங்களுக்கு நன்மை உண்டல்லவா?

புத்திசாலித்தனமான, நல்லாட்சி நடக்க வேண்டும் என்றால், நமது நாட்டு மக்கள் எல்லாருக்கும் நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். *100*-க்கு *15* பேர்களுக்கே எழுதப் படிக்கத் தெரியும் என்ற நிலைமாறி, *100*-க்கு *100* பேர்களுக்கு நன்றாக எழுதப் படிக்கத் தெரியும் என்ற நிலை சீக்கிரமே ஏற்படவேண்டும்.

பழைய காலத்து இயந்திரக் கருவிகளை வைத்துக்கொண்டு, தேசத்தை முன்னேற செய்ய வேண்டும் என்று நினைப்பது தவறாகும். விஞ்ஞான சாஸ்திரத்தில் நமது தேசமும் பிற தேசங்களைப்போல முன்னேறி, விஞ்ஞானிகளுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் போதிய மதிப்புக்கொடுத்து இந்நாட்டு மன்னர்களும்—அதாவது மக்களும், மக்களின் பிரதிநிதிகளும் நன்றாக உதவ வேண்டும்.

இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிபெற வேண்டுமென்றால், இந்நாட்டு மன்னர்களின் பரிபூரண ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் தேவை. அதில் இருக்கும் ஊழல்களை அகற்றி, அதனால் உண்டாகும் நன்மைகளை சரிவர இந்நாட்டு மன்னர்களிடையே பரப்பினால்தான், திட்டம் வெற்றியடைய முடியும் என்பதில் சந்தேகமில்லை.★

வோட்டு முறை பிறந்த கதை

எஸ். நடராஜன், பி. ஏ.,

தேர்தல் நெருங்கிவிட்டது. உங்கள் வோட்டு யாருக்கு என்று கேட்பது இப்போது சர்வசகஜம். 'வோட் செய்வது' அல்லது வாக்களிப்பது என்பது ஜனநாயகத்திலுள்ள முக்ய அம்சமாகும். வோட் செய்வது மக்களின் உரிமை மட்டு மல்ல, கடமையுமாகும். இந்த வோட்டுமுறை பற்றிய வரலாறுகளை இக்கட்டுரை விவரிக்கிறது.

தற்கால ஜனநாயகத்தின் முக்ய அம்சமான 'வோட்டு' முறை புராதன கிரேக்கர்களிடமிருந்து ஏற்பட்ட வழக்கமாகும்.

அக்காலத்தில் (புராதன கிரீஸில்) கிரேக்கர்கள் தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க கூட்டத்தில் அங்கிகாரத்தை தெரிவித்துக் கோஷமிடுவதையும், ஈட்டியை கேடயத்துடன் மோதி சப்தம் ஏற்படுத்தியும் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து வந்தனர்.

பின்னர்தான் சம்மதத்தைத் தெரிவிக்க கைதூக்கும் வழக்கம் ஏற்பட்டது.

பானைக்குள் கூழாங்கல் போடுவது

எப்பேர்ப்பட்ட விஷயங்களானாலும்—தகவலோ, வழக்கோ முக்யமான நிர்வாகப் பிரச்னைகளோ பொதுக் . ங்கள் கூட்டித்தான் அக்காலத்தில் கிரேக்கர்கள் தீர்த்து வந்தார்கள். கூட்டத்தில் செய்யப்படும் முடிவை ஆதரிப்பவர்கள் ஒருபெரிய பானைக்குள் கூழாங்கல்லைப் போட வேண்டும்.

வயோதிகருக்கு வழிகாட்டி

இந்த 'வோட்டு' முறையை ரோமர்களும் சிலகாலம் கையாண்டார்கள். கி. மு. 139 லிருந்து 107 வரை அவர்கள் கூழாங்கற்களுக்குப் பதில் மெழுகுபூசிய மரக்கட்டையை உபயோகித்து வந்தனர். இக்கட்டைக்கு 'டபெல்லா' என்று பெயர்.



வோட்டுப் போட நிற்கும் 'க்யூ'.

பட்டவர்த்தனமான 'வோட்டு'

சென்ற நூற்றுண்டுவரை பிரிட்டனில் பட்டவர்த்தன மான வோட் முறையே அமுலில் இருந்து வந்தது. அபேட்சகர்கள் மேடைமீது பேசிக் கொண்டிருப்பார்கள். அவரை எதிர்ப்பவர்கள் வெறுப்பு காரணமாக அவர்மீது செருப்பு, அழுகல் முட்டை இவைகளை வீசுவதையும் பொறுத்துக் கொண்டு பேசிக்கொண்டேயிருப்பர். அவரை ஆதரிப்பவர்கள் பட்டவர்த்தனமாகதங்கள் வோட்டை மேடைக்கு வந்து கொடுப்பர்.

பட்டவர்த்தனமாக வோட் அளிக்கும் முறையினுல் உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலைமை ஏற்பட்டது.

ரகசிய 'வோட்டு' முறை

ரகசியமாக வோட்டு செய்யும் முறை 1856-ல் முதன் முதலாக தென் ஆஸ்திரேலியாவில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பின்தான் பிரிட்டனும் இதர ஜனநாயக நாடுகளும் இம் முறையைப் பின்பற்றின.

ஜெர்மனியில் முன் காலத்தில் 'வோட்டு' காகிதத்துடன் ஒரு கவரும் கொடுக்கப்படும். வோட்டு காகிதத்தில் குறி செய்து அதை கவரில் போட்டு ஒட்டி கொடுக்கவேண்டும். வரவர வோட்டளிப்பவர்களின் தொகை அதிகமாகவே எல்லாரும் ஒரே இடத்தில் வந்து வோட்டு செய்வது அசாத்யமாகி விட்டது. அதன் காரணமாகவே வோட்டுச் சாவடிகள் (பூத்) ஏற்பட்டன.

அமெரிக்காவில் அநேகமாக எல்லா பதவிகளுமே தேர்ந்தெடுக்கப் படுபவைதான். அங்கே வோட்டுகளைப் பதிவு செய்யவும் உடனே வோட்டுகளைக் கணக்கிட்டு முடிவு

தெரிவிக்கவும் இயந்திர சாதனங்கள் இருக்கின்றன. இந்த இயந்திர சாதனங்களிடம் தேர்தல் தில்லுமுல்லுகள் எதுவும் பலிக்காது. வோட்டு போட்டவுடனேயே முடிவையும் தெரிந்து கொண்டு விடலாம்.

கட்டாய வோட்டு

சில நாடுகளில் வாக்காளர்கள் கட்டா'யம் வோட்டுப் போட வேண்டும் என்ற சட்டம் இருந்து வருகிறது. சில ஜனநாயக நாடுகள் வாக்காளர்கள் கட்டாயம் வோட்டு போட வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. இம்முறை ஆஸ்திரேலியாவிலும் பெல்ஜியத்திலும் அமுலிலிருந்து வருகிறது. சில நாடுகள் வோட்டு போடச் செல்லாமல் இருக்கும் அபேட்சகர்களுக்கு அபராதமும் விதிக்கப்படுவதுண்டு.

இரண்டாவது தடவையும் அவர் தன் கடமையைச் செய்யத் தவறினால், கடும் அபராதம் விதிக்கப்படும். மூன்ருவது தடவையில் அவர் பெயர் டவுன் ஹால் வெளியில் ஒட்டப்படும். இவ்வளளவுக்குப் பின்பும் வோட் செய்யச் செல்லாவிட்டால், வாக்காளர் ஜாபிதாவிலிருந்தே அப்பெயர்கள் அகற்றப்பட்டு விடும். அவர் எந்தப் பதவியையும் அந்தஸ்தையும் ஏற்கக் கூடாது.

பெண்களுக்கு வோட்டுரிமை இல்லாத நாடுகள்

1893-ம் வருஷத்திற்குப் பிறகு *1939*-ம் வருஷம் வரையில் *33* தேசங்களில் பெண்களுக்கு வோட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பின் மேலும் *15* தேசங்களில் பெண்கள் அவ்வுரிமையை அடைந்திருககிருர்கள்.

ஆனல், ஸ்விட்ஜர்லாந்து பெல்ஜியம், ஆர்ஜெண்டின முதலிய *18* நாடுகளில் ஸ்திரீகளுக்கு இன்னும் வோட்டுரிமை இல்லை.

இன்று அமெரிக்கஜனத்தொகையில் ஆண்களைவிட பெண்கள் *20* லட்சம் அதிகம். அமெரிக்க அரசியலில் மாதர் வோட்டுகள் மிகவும் முக்யம் வாய்ந்ததாகும்.

வோட்டர்களின் வயது நிர்ணய முறையில் நாட்டுக்கு நாடு வித்தியாசமாக இருக்கின்றன. ரஷ்யாவிலும் பிரிட்டனிலும் வோட்டர்களின் வயது விஷயத்தில் ஒரே முறையைத் தற்காலிகமாக அனுசரித்து, அடுத்து அடுத்துத் திருத்தி அமைத்து வருகிருர்கள். ஆனல், இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம் முதலிய நாடுகளில் ஒரே நிரந்தரமான வயதை வோட்டர்களுக்கு நிர்ணயித்து விட்டார்கள்.

நடந்த நூற்ருண்டில் வோட்டர்களுக்கு கல்வித் தகுதி பற்றிய விஷயத்தில் பலமுறை திருத்தி அமைத்து வந்தனர். ஆனல், இது நடைமுறையில் அனுசரிக்க மிகவும் சிரமமாக இருந்தது. சில நாடுகளில் இது விஷயத்தில் ஒரு வரையறையை வகுக்கப்பட்டு வந்தன. உதாரணமாக துருக்கியில், தங்கள் தாய் பாஷையில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கே வோட்டுரிமை அளிக்கப்பட்டது. ஐக்ய அமெரிக்காவில் படிக்கத் தெரியுமா என்று பரிசோதித்த பின்பே உரிமை அளிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு படிக்காதவர்களுக்கும் ப்ரேஜில் வோட்டுரிமை கிடையாது. ஆனல் இந்தியாவில் இந்தக் கட்டுப்பாடு இல்லை. இந்தியா

வயது வந்தவர்களுக்கு வோட்டுரிமை அளித்து வருகிறது.

இந்தத் தேர்தல்

சட்டபூர்வமான குடியரசு ஏற்பட்டபிறகு இரண்டாவது தடவையாக வருகிற பொதுத் தேர்தல் இந்தியா முழுவதும் நடைபெறும். பஞ்சாபிலும், ஒரிஸாவிலும் பிப்ரவரி 4-ம் தேதியே வாக்குப்பதிவு ஆரம்பமாகி முடிந்துவிட்டது.

சென்னை ராஜ்ய வாக்காளர்கள் மார்ச் 1, 4, 6, 8, 11 தேதிகளில் வோட்டுச் சாவடிக்குச் செல்வார்கள். சென்னை நகரில் 8-ம் தேதி வோட்டுப்போடுவது நடைபெறும். மிக அதிக நாட்கள் தேர்தல்நடத்திய பெருமை பஞ்சாப் ராஜ்யத்திற்குதான் (18 தினங்கள்). அடுத்ததாக மைசூரில் 16 தினங்கள் நடந்தது.

இந்தியாவின் வாக்காளர்கள்

ராஜ்ய வாரியாகப் புள்ளி விவரம்

புதுடில்லி, ஜன. 31—ஜம்மு, காஷ்மீர் ராஜ்யம் நீங்கலாக இந்தியா முழுவதிலும் தற்போது 19 கோடியே 30 லக்ஷம் வாக்காளர்கள் இருப்பதாகத் தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

ராஜ்யம் வாரியாக வாக்காளர் தொகை வருமாறு:—

சென்னை ...	1.75,99 056
ஆந்திரப் பரதேசம்	1.76.60,665
அஸ்ஸாம்	43 74,089
பீஹார்	1,95,63,747
பம்பாய்	2,43,86,525
கேரளம்	75,59,047
மத்தியப் பிரதேசம்	1.38.80,209
மைசூர்	1,04,23,618
ஒரிஸ்ஸா	79,51,805
பஞ்சாப்	91,12,743
ராஜஸ்தான்	86,93,031
உத்தரப்பிரதேசம்	3 47 70,434
மே. வங்கம்	1,51,18,061
டில்லி	9,76,306
ஹிமாசல பிரதேசம்	6,84,628
மணிபுரி	3,30,111
திரிபுரா	3,45,849
மொத்தம்	19,31,29,924
சென்ற தேர்தலில் வாக்காளர்	17,32,13,635

அந்த ஒரு வோட்டு!

தனி மனிதன் ஒருவனது வோட்டு எத்தகைய மாறுதலைச் செய்கிறது பாருங்கள்!

1941-ல் அமெரிக்க காங்கிரஸில் அதிகப்படியாகக் கிடைத்த அந்த ஒரு வோட்டின் பலனுக ஜெர்மனி, ஜப்பான் ஆக்ரமிப்பிலிருந்து உலகம் காப்பாற்றப்பட்டது. இந்த ஒரு வோட்டினுல் படைகலைப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

பிரெஞ்சு சரித்திரத்தில் ஒரு வோட்டின் பலத்தில் எவ்வாறு குடியரசுகள் தோன்றியுள்ளன, குடியரசுகள் கவிழ்ந்திருக்கின்றன, என்பன தெரியும்.

காமன்ஸ் சபையில் மூன்று முறை முக்ய முடிவுகள் ஒரு வோட்டு மெஜாரிட்டியுடன் செய்யப்பட்டிருக்கின்றன. ஹனேவர் குடும்பத்தினர் பிரிட்டிஷ் ஆட்சி பீடத்திற்கு வந்தது ஒரு வோட்டு மூலம்தான்.

1649-ம் சார்லஸ் மன்னர் தலையை வெட்டிவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது இந்த ஒரு வோட்டு மூலமேதான். 68 பேர் சார்லஸ் மன்னர் முடிவுக்கும் 67 பேர் அவரைக் கொல்லக்கூடாது என்றும் வோட்டு செய்தனர். ஆலிவர்கிராம்வெல் அதிகாரத்திற்கு வந்ததும் இந்த ஒரு வோட்டின் பலத்தினுல்தான்!

இந்தத் தேர்தலும் சென்ற தேர்தலும்

தேர்தல் கமிஷனர் சுகுமார் ஸென்

1951-52-ல் நமது பொதுத் தேர்தல்கள் முதல் தடவையாக நடந்த பிறகு 5 வருஷங்கள் ஆகிவிட்டன. அப்போது அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் சபையும், ராஜ்ய சட்ட சபைகளும் பூரண காலவரம்பான 5 வருஷத்துக்கும் சேவை செய்துவிட்டன.

நம்மைப் போன்ற ஒரு ஜனநாயக தேசத்தில் குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை பொது மக்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து சர்க்கார் அமைவது பொருத்தமும் முறையும்தான். அதனுல் சர்க்கார் நடத்தி வருகிற ஏற்பாடுகள், கைக்கொண்டுள்ள கொள்கைகள் முதலியவைகளை மக்கள் தெளிவாக ஆதரிக்கிருர்கள் என்று நம்பிக்கை ஏற்படும். மக்கள் தங்கள் இஷ்டத்தை வாக்குச் சீட்டு மூலம் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பும் கிடைக்கிறது.

சமீபத்தில் நமதுதேச அரசியல் நிர்வாகப் பகுதிகள் பெருமளவில் மாற்றி யமைக்கப்பட்டன. அதனுல் பல ராஜ்யங்களில் நிர்வாக யந்திரத்தைப் பெருமளவுங்கு மாற்றி யமைக்கவும் அவசியம் ஏற்பட்டது. ராஜ்யங்களின் எல்லைகளும் ஜனத் தொகைகளும் மாறு பட்டபடியால் தேர்தல்தொகுதிகளை விஸ்தாரமாக மாற்றியமைக்கவும் நேரிட்டது.

முதலாவது பொதுத்தேர்தல்

முதலாவது பொதுத்தேர்தல் வெகு திறமையாகவும் ஒழுங்காகவும் நடந்திருப்பதாக இந்தியாவிலும் வெளி நாட்டிலும் பாராட்டப் பட்டிருக்கிறது. ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானுல், வோட்டுப் பெட்டி மூலம் வாக்காளர்கள் தெரிவிக்கும் அபிப்பிராயத்தை தேர்தல்களில் பங்கு கொள்கிறவர்களும், பொதுவாக மக்களும் ஆட்சேபத்துக்கு இடமில்லாமல் அங்கீகரிப்பது அவசியமாகும். இளமைப் பருவத்திலுள்ள ஒரு ஜனநாயக நாடு என்ற முறையில் நமக்கு முதலில் ஏற்பட்ட சோதனைக் கட்டத்தை 1951-52-ல் நடந்த தேர்தல்களில் வாக்காளர்கள் அளித்த தீர்ப்பை மக்கள் விசுவாசத்தோடு அங்கீகரித்ததன் மூலம் நாம் வெற்றிகரமாகக் கடந்து விட்டோம். அதற்குப் பிறகு சிறிய அளவில் மூன்று தேர்தல்கள் நடந்துள்ளன. இப்போது இல்லாமல் ஆகிவிட்ட பழைய பெப்சு, திருவாங்கூர்-கொச்சி, ஆந்திரா ஆகியமூன்று ராஜ்யச் சட்ட சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டன; அங்

தச் சட்டசபைகளை உரியகாலத்துக்கு முன்னதாகக் கலைக்க நேரிட்டது. அந்தத் தேர்தல்களும் சுமுகமாக நடந்தன; கண்ணியமாகவும் நடந்தன. அதனுல் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் அவை சர்வசுதந்திரத்துடனும் நேர்மையாகவும் நடைபெறறன என்ற திருப்தியும் ஏற்பட்டது.

இந்தப் பொதுத் தேர்தல் நம் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. *1957* மார்ச் *12*உ தேதிதான் வாக்குப் பதிவுக்கான கடைசித் தேதி யென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

முந்திய தேர்தலுக்கும் இதற்குமுள்ள முக்கிய மாறுதல்கள்

1951–52 தேர்தலுக்கும் வருகிற தேர்தல்களுக்கும் ஏதாவது வித்தியாசமிருக்குமா என்று அடிக்கடி கேட்கப்படுகிறது. தேர்தல் முறை, தேர்தல் நடவடிக்கைகள் ஆகியவை விஷயத்தில் அடிப்படையான மாறுதலெதுவும் இருக்காது, அவை சென்ற பல வருஷங்களாகக் கையாளப்பட்டு, சிறந்தவை யென்று நிரூபணமாகியிருக்கிறது. ஆனுல் இரண்டு அம்சங்களில் இந்த இரு தேர்தல்களுக்குமிடையே ஒரு முக்கியமான வித்தியாசமிருக்கும். முதலாவதாக, ஒவ்வொரு ராஜ்யத்திலும் வாக்குப் பதிவு *16* தினத்தில் அல்லது அதற்கும் குறைவான காலத்தில் பூர்த்தியாகிவிடும். இரண்டாவதாகி, இந்தக் காலம் நாடு முழுவதிலும் ஒருப்போல இருக்கும். *1951–52*-ல் பல ராஜ்யங்களிலும் பல்வேறு தேதிகளில் வாக்குப் பதிவு நடந்தது. ஒவ்வொரு ராஜ்யமும் பூர்வாங்க வேலைகளைச் செய்து முடித்து தேர்தலுக்குத் தயாரானவுடன் வாக்குப் பதிவு நடத்தலாமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. *1951* அக்டோபர் இறுதியில் பனி படிவதற்கு முன் ஹிமாசலப் பிரதேச மலைப் பிராந்தியத்தில் வாக்குப் பதிவு நடத்த வேண்டியிருந்தது. உத்தரப் பிரதேசத்தில் வேலைக் கஷ்டமுள்ள மலைப்பாங்கான இடத்தில் வாக்குப் பதிவு நடத்த *1952* பிப்ரவரி இறுதி வரையில் காத்திருக்க நேர்ந்தது.

எனவே, சென்ற தேர்தலின் போது நாடு முழுவதிலும் வாக்குப் பதிவை நடத்த 4 மாத காலம் வேண்டியிருந்தது. ஆனுல், பெரும்பாலான ராஜ்யங்கள் *1951* டிசம்பரிலும், *1952* ஜனவரியிலும் வாக்குப் பதிவை நடத்தின. பல ராஜ்யங்கள் வாக்குப் பதிவுகளைக் கட்டங் கட்டமாக மூன்று அல்லது நான்கு வாரங்கள் அல்லது அதற்கும் மேற்பட்ட காலத்துக்கு நீடித்து நடத்தின. இதன் விளைவாய், தேசம் சுமார் *4* மாதங்களுக்கு தேர்தல் சிரமங்களுக்கு உள்ளாகியிருந்தது. இந்த இரண்டு அம்சங்களிலும் அடுத்த தேர்தலில் நிச்சயமான அபிவிருத்தியிருக்கும்.

இவ்வளவு நீண்டகாலம் தேர்தல் நடவடிக்கைகளை இழுத்துப் பிடிப்பதால் உள்ள சங்கடங்கள் பிரத்தியக்ஷம். தேர்தல் காலம் முழுவதிலும் மாமூலான நிர்வாக வேலைகளை அநேகமாய் நிறுத்தி வைக்க வேண்டும். எந்த தேசமுமே இவ்வாறு ஐந்து வருஷத்துக்கொரு முறை அதன் மாமூல் நிர்வாக நடவடிக்கைகளைத் தடைப்படுத்த அனுமதிக்க முடியாது. எனவே, வருகிற தேர்தல்கள்

இரு வார காலத்திற்குள் வாக்குப் பதிவு நடைபெறுகிற நாட்களின் எண்ணிக்கை ஒன்று முதல் எட்டு வரையாக ராஜ்யங்களுக்கேற்றபடி மாறியிருக்கும். வாக்குப் பதிவு நடக்கும் ஒரு தினத்துக்கும் அடுத்த தினத்துக்கும் இடையே போதிய சாவகாசமிருந்தால்தான் வாக்குப் பதிவு செய்யும் கோஷ்டிகள் ஒரு தொகுதியிலிருந்து அல்லது ஒரு வோட்டுச் சாவடியிலிருந்து மற்றொன்றுக்குப் போவதற்குச் சமயமிருக்கும்; இவ்வாறு சாவகாசம் தேவைப்படுவதால்தான் வாக்குப் பதிவுக்காக மொத்தக் காலத்தைக் குறைக்க முடியாமலிருக்கிறது.

இத்தேர்தல்களும் முந்திய தேர்தல்களைப் போலவே மிகவும் வெற்றிகரமாக நடக்குமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அவை ஒழுங்காகவும், அமைதியாகவும், சர்வசுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்பட்டு எதிர்காலத்துக்கு ஒரு நல்ல முன்மாதிரியை ஏற்படுத்தும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இப்போது அரசியல் கட்சிகள், அபேட்சகர்கள், வாக்காளர்கள், வாக்குப் பதிவு அதிகாரிகள் ஆகியோரெல்லாரும் முன்னிலும் அதிக அனுபவம் வாய்ந்தவர்களாகவும் தேர்தல் சட்டம், நடைமுறை முதலியவைகளில் அதிகப் பரிச்சயம் உள்ளவர்களாகவும் இருப்பார்களாகையால், சென்ற தேர்தலை விட இப்போது இன்னும் சிறந்த முறையில் காரியங்களைச் செய்வார்களென்று எதிர்பார்க்கலாம். மேலும், சட்டம் பல வழிகளில் முன்னிலும் சுலபமாக்கப்பட்டிருக்கிறது, சமீப காலத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் மூலம் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டிய வேலைகளும், சில சமயங்களில் சங்கடத்தை உண்டுபண்ணுகிற நடைமுறைகளும் ஒழிக்கப்பட்டு விட்டன.

நேர்மையான சுதந்திரமான தேர்தல்கள்

எந்தத் தொகுதியிலும் சரி, தேர்தல் பலன் இன்னபடி இருக்குமென்று நிச்சயமாக முன்கூட்டிச் சொல்வதற்கில்லை. இவ்வாறு அதில் ஓரளவு சந்தேகமிருப்பதால்தான்– அது சொற்ப சந்தேகமாயிருந்தாலும் சரி – தேர்தல்களில் இவ்வளவு அக்கறையும் ஊக்கமும் பிறக்கின்றன. எத்தனையோ தடவை தேர்தல் சம்பந்தமான ஹேஷ்யங்கள் பொய்யாகி விட்டிருக்கின்றன, தனிப்பட்ட அபேட்சகர்களின் அபிலாஷைகள் எதிர்பாராத விதமாய் மோசம் போயிருக்கின்றன. வாக்காளர்கள் மாமூலாக எதிர்பார்க்கக்கூடிய முறையில் இல்லாமலும், சில சமயங்களில் தான்தோன்றித் தனமாகவும், சில சமயங்களில் விசித்திரமாகவும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் செய்த முடிவைக் குறைகூறவோ அல்லது அதற்கு விரோதமாக நடக்கவோ யாராலும் முடியாது; ஏனென்றால் நமது அரசியலமைப்புச் சட்டத்தின்படி வாக்காளர்கள்தான் ஆட்சி ஆதிபத்திய இறுதி அதிகாரிகள். வாக்காளர்களுக்கு சர்வ சுதந்திரமாக, நேர்மையாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டியதுதான். சில சமயங்களில் நமக்கு விளங்காத முறையில் விசித்திர நிலைமைகள்

தோன்றத்தான் செய்யும், அது இந்தியாவில் மாத்திரம்தான் ஏற்படுமென்பது இல்லை, சுதந்திரத் தேர்தல்கள் அவசியமென்று கருதி அவைகளை நடத்திவருகிற சகல ஜனநாயக நாடுகளிலும் அவ்வாறு நேருவதுண்டு. எனவே, நாம் வாக்காளர்களின் முடிவைத் தயக்கமில்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். யாரும் தாங்கள் நிச்சயமாக எதிர்பார்த்த முறையிலோ, அல்லது விரும்பிய விதத்திலோ தேர்தல் முடிவு இல்லாதது காரணமாக விஷயந் தெரியாமல் அல்லது அவசரபுத்தியில் தேர்தல்களின் சுதந்திரத் தன்மையையும் நேர்மையையும் சந்தேகிக்கக் கூடாது.

இந்த விஷயத்தை நான் வேண்டுமென்றே வற்புறுத்துகிறேன். *1951–52*-ல் வாக்குப் பதிவு நடந்தவுடனே எல்லாக் கட்சியாரும் அபேட்சகர்களும் தேர்தல்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடந்தன என்று பாராட்டியது ஞாபகத்தில் இருக்கும். ஆனால் வோட்டுகள் எண்ணப்பட்டுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு வரும்போது சிலருக்கு அம்முடிவுகள் ஏமாற்றத்தையும், வியப்பையும் அளித்தன. நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்த்த சிலருக்கு அவை பெரும் ஏமாற்றத்தை அளித்தன. அதற்குப்பின் தேர்தல் அதிகாரிகளின் நாணயத்தில் சந்தேகத்தையும் வாக்குச் சீட்டுப் பெட்டிகள் மோசடி செய்யக்கூடியவை என்ற அபிப்பிராயத்தையும் இங்கும் அங்குமாக சிலர் நிர்ணயமற்ற முறையில், ஆதாரமில்லாமல் தெரிவித்தனர். அதிர்ஷ்டவசமாய் அத்தகைய நிகழ்ச்சிகள் அபூர்வமாகவே இருந்தன. இறுதியில் மிகவும் சந்தேகம் கொண்டிருந்தவர்கள்கூட, தங்கள் சந்தேகம் தவறான பீதி காரணமாகவோ, வாக்காளர் ஆதரவு பற்றித் தாங்கள் கொண்டிருந்த தவறான மதிப்பு காரணமாகவோ ஏற்பட்டதுதான் என்று உணர்ந்துவிட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

வாக்குச்சீட்டுப் பெட்டிகள்

துரதிர்ஷ்டவசமாய் அடிக்கடி வாக்குச் சீட்டுப் பெட்டிகள் (பாலட் பாக்ஸ்) பற்றிச் சில புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவைகளை மோசடியாய்த் திறந்துவிடலாமென்று கூறப்படுகிறது. சமீபத்தில் தேர்தல் கமிஷன் அரசியல் கட்சிகள், தனிப்பட்டவர்கள் ஆகியோர்களை அழைத்து அவ்வாறு செய்து காட்டும்படிக் கேட்டுக்கொண்டது. கமிஷன் விதித்துள்ள நடைமுறைகளின்படி பெட்டிகளை மூடி முத்திரையிட்டபிறகு அதைத் திறக்க முடியுமா அல்லது வேறெந்த வகையிலாவது குலைக்க முடியுமா என்று பரிசோதிப்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. சில சமயங்களில் இதை அற்ப விஷயமாகப் பாவித்துச் சிலர் அது முடியுமென்று கூறிவிடுகிறார்கள். முத்திரையைக் குலைக்காமலோ பெட்டி மோசடியாகச் சிதைக்கப்பட்டிருக்கிறது என்ற அறிகுறி இல்லாமலோ அவ்வாறு செய்யமுடியாது. சிலர் கமிஷன் முன்னிலையில் அவ்வாறு செய்துகாட்ட முயன்றார்கள், ஆனால், ஒவ்வொரு தடவையும் அவர்கள் அம்முயற்சியில் தோற்றுவிட்டார்கள்.

அவசியமான விஷயங்களில் வாக்குச்சீட்டுப் பெட்டிகள் பலப்படுத்தப் பட்டிருக்கின்றன: எல்லாப் பெட்டிகளும் நன்ருகப் பரிசோதித்துப் பார்க்கப் பட்டிருக்கின்றன; அவசியமானல், பழுதுபார்க்கவும் பட்டிருக்கின்றன. எனவே, வருகிற பொதுத் தேர்தலில் வாக்குப்பதிவின்போது குற்றங்குறைகள் உள்ள எந்த வாக்குச்சீட்டுப் பெட்டியும் உபயோகிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

வாக்குச்சீட்டுப் பெட்டிகள் எவ்விதக் கோளாறுக்கும் இடமில்லாத நம்பிக்கையான பெட்டிகள்தான் என்று நிச்சயம் ஏற்படுவது அவசியம். அவை சம்பந்தமாய் பொதுப்பட ஒரு சந்தேகம் ஏற்பட்டுவிட்டால்—அந்த சந்தேகத்துக்கு ஆதாரமிருந்தாலும் சரி, ஜனநாயகத் தேர்தல் முறைகளில் மக்களுக்கிருக்கும் நம்பிக்கை வேரோடு அற்றுப் போகலாம். ஒரு தேர்தல் நேர்மையாக நடந்திருக்கிறதென்று மக்களிடையே நம்பிக்கை ஏற்படவில்லை



யானல் அந்த அளவுக்கு அத்தேர்தல் தோல்வியடைந்திருக்கிறதென்றே அர்த்தம்.

சென்ற சில வருஷங்களில் நாம் அடைந்துள்ள மிக முக்கியமான முற்போக்கு, தேர்தல்கள் வெறும் சர்க்கார் நடவடிக்கை அல்லது ஏற்பாடு என்று யாரும் கருதமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதுதான்—தேர்தல் ஸ்தாபனத்தை அநேகமாய் மத்திய அல்லது ராஜ்ய சர்க்கார்களின் சிப்பந்திகளே நடத்துகிருர்கள் என்பது உண்மைதான். ஆனல் தேர்தல்களை நடத்தும்போது அவர்கள் மத்திய சர்க்கார் அல்லது ராஜ்ய சர்க்கார்கள் உத்தரவுகளின்படி நடக்கவில்லை. நமது அரசியலமைப்புப்படியும், நம் சட்டங்களின்படியும் நாம் தேர்தல் கமிஷன் முதல் வாக்குப் பதிவு அதிகாரி வரையில் ஒரு சுதந்திர தேர்தல் ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிருேம். அந்த ஸ்தாபனம் சர்க்காரின் கட்டுப்பாட்டுக்கு உட்படாமலிருக்கும்படி நாம் வேண்டுமென்றே செய்திருக்கிருேம். அந்த ஸ்தாபனம் தேர்தல்கள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலும் நேர்மையாகவும், அச்சமின்றியும், நடந்துகொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நவீன ஜனநாயகத் தேர்தல்களும் ஏற்பாடுகளும் இன்னும் அதிகமாய்ப் பழக்கப்பட்டிராத, புதிதாக இருக்கிற, இந்தியா போன்ற ஒரு நாட்டில் ஜனநாயக முறைகளில் மக்களுக்குள்ள நம்பிக்கையும், விசுவாசமும் வலுப்பெறும்படி செய்வது மிக அவசியமாகும்: அதற்காகச் சுதந்திர ரீதியான ஒரு தேர்தல் ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, அதை வளர்த்துவருவது அவ

சியம். அந்தஸ்தாபனம் எல்லாருக்கும் ஒரே ரீதியில் நியாயம் வழங்குமென்றும், சட்ட மன்றங்களுக்குத் தேர்தல்களை நடத்துவது சம்பந்தமான சகல விஷயங்களிலும் நேர்மையான முறையில் நடந்துகொள்ளுமென்றும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒவ்வொரு அபேட்சகரும். ஒவ்வொரு பிரஜையும் நம்பிக்கை கொள்ளவும் எதிர்பார்க்கவும் கூடியபடி இருக்க வேண்டும்.

எனவே நமது தேர்தல்கள் வெறுமனே இலாகா பூர்வமான விஷயமோ நடவடிக்கையோ அல்ல; மத்திய அல்லது ராஜ்ய சர்க்கார்கள் மாத்திரம் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. சென்ற சில வருஷங்களாக அவை உண்மையிலேயே தேசீய முயற்சிகளாக உருவாகி வந்துள்ளன. அவை சகல அரசியல் கட்சிகளும் சகல சர்க்கார்களும், ஒவ்வொரு பிரஜையும் நெருங்கிய முறையில் கலந்து தீவிரமாகப் பங்கெடுத்து வருகிற நடவடிக்கைகளாகிவிட்டன. அரசியல் அமைப்புச் சட்டம், தேர்தல் சட்டங்கள் ஆகியவைகளுக்குட்பட்ட முறையில் தேர்தல் கமிஷன் சென்ற சில வருஷங்களாக சகல அரசியல் கட்சிகளையும் கூட்டுறவையும் உதவியையும் நாடி வந்திருப்பதுடன், அவைகளின் பிரதிநிதிகளைத் தாராளமாகக் கலந்தாலோசித்து அதற்குப் பிறகே அதன் கொள்கையையும் நடைமுறைகளையும்வகுத்துவந்திருக்கிறது. அரசியல் கட்சிகளும், தேர்தல் கமிஷனுக்குத் தங்கள் பரிபூர்ண ஒத்துழைப்பையும் தராளமான உதவியையும் ஆலோசனையையும் அளித்து வந்திருக்கின்றன என்பதை நான் நன்றியறிதலோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனவே, இப்போது நாம் இப்பொதுத்தேர்தல்களை உண்மையிலேயே ஒரு தேசீய முயற்சியாகக் கருதி எதிர்பார்த்திருக்கிறோம். கடைசியில் அவை முடிவடைந்தபின் செவ்வையாக செய்து முடிக்கப்பட்ட ஒரு பணியாக இருக்கும்,

சென்ற தேர்தலில்

சென்னை ராஜ்யத்தில் 14 கட்சிகள் போட்டியிட்டன. இவைகளில் 8 அகில இந்தியக் கட்சிகள். இந்தியா முழுவதும் வாக்காளர் தொகை 270 லட்சம் பேர். வோட்டுச் சீட்டுகள் 1020 லக்ஷம். வோட்டுப் பெட்டிகள் 33,90,000. வோட்டுச் சாவடிகள் 3,55,000. வாக்காளர் ஜாபிதாவின் மொத்தத்தில் பந்தோபஸ்து ஏற்பாடுகளுக்கு ரூ. 8679. 15 போலீஸ் கோஷ்டிகள். வோட் செய்தவர்களின் இடது கையில் செய்யப்படும் இங்கி அடையாளம் 21 நாட்கள் அழியாமல் இருக்கும்.

இந்தத் தேர்தலில்

சென்னை ராஜ்யத்தில் 7 கட்சிகள் இத்தடவை போட்டியிடுகின்றன. இவைகளில் 4 அகில இந்தியக் கட்சிகள்.

வாக்காளர் எண்ணிக்கை 19 கோடி. வோட்டுச் சாவடிகள் 200000-க்குமேல். வோட்டுச் சீட்டுகள் 51 கோடி. வோட் முடிவு தேதிமார்ச் 31.



கோல்ட் கோஸ்ட்

கோஸ்ட் கோள்டு, காமன் வெல்த்திற்குட்பட்ட சுதந்திரத்தை மார்ச் 6வ பெறலாமென்று பிரிட்டிஷ் சர்க்கார் தெரிவித்துள்ளனர். கோல்ட் கோஸ்டை சுதந்திரமடையும் நிலைக்குக் கொண்டு வந்தவர் அதன் பிரதமர் டாக்டர் குவாமே நிக்ருமாதான்.

மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள நான்கு பிரிட்டிஷ் காலனிகளில் ஒன்று கோல்ட் கோஸ்ட். நைஜீரியாவில் விஸ்தீரணத்திலும் ஜனத்தொகையிலும் இது இரண்டாவது ஸ்தானத்தைப் பெறுகிறது. செல்வம் கொழிக்கும் பிரதேசமும்கூட. இதன் ஜனத்தொகை 50 லக்ஷம்பேர். இதன் தலைநகர் அக்ரா. அங்கு இரண்டு லக்ஷம் ஜனங்கள் வசிக்கிறார்கள்.

4 பிராந்தியங்கள்

கோல்ட் கோஸ்டை நான்கு பிராந்தியங்களாகப் பிரிக்கலாம். காலனி, ஆஷந்தி, வட பிரதேசங்கள், டோகோலோந்து. டோகோலாந்துஐநா. தர்மகர்த்தாப்பொறுப்பில் இருந்து வருகிறது. சென்ற மே மாதத்தில் அங்கு நடைபெற்ற பொதுஜன வாக்கெடுப்பில் சுதந்திர கோல்ட் கோஸ்டுடன் வேறுபடுவதையே டாகோலாந்து மக்கள் ஆதரித்திருக்கிறார்கள். காலனிப்பகுதி கடற்கரையோரமாக உள்ளது. பசுமையான காடும் செம்மண் பூமியும் கொண்ட இப்பகுதி மிக வளம் பெற்றது.

ஆரம்ப நாட்களில் இங்கு

கோல்ட் கோஸ்டின் பிரதம மந்திரி நிக்ருமா

வட பிரதேசங்களில் பல தலைவர்கள் இருக்கிறார்கள்.

கோல்ட் கோஸ்டின் சுபிட்ச நிலை அதன் கோக்கோ உற்பத்தியைப் பொருத்ததேயாகும். அநேக வருஷங்களாக உலகிலேயே மிக அதிகமாக கோக்கோ உற்பத்தி செய்து வரும் நாடு கோல்ட் கோஸ்டுதான். கோக்கோ ஏற்றுமதியின் மூலம் கோல்ட் கோஸ்டுக்கு ரூ 130 கோடி வருமானம் கிடைக்கிறது. இதனால் திறமையான ஊழியர்களுக்கும் சாதாரண ஊழியர்களுக்கும் வேலை கிடைக்கிறது.

வியாபாரம் செய்ய வந்த ஐரோப்பியர்கள் கட்டிய கோட்டைகள் பல இங்கு உள்ளன.

ஆஷந்தியுடன் பழங்காலக் கலாச்சாரத் தொடர்பு இருந்து வருகிறது. இந்தப் பகுதியின் தலைவர் காலனியில் மிகவும் செல்வாக்கு உள்ளவர். நிக்ருமாவின் சுதந்திர திட்டம் இவருக்குப் பிடிக்கவில்லை. பெடரல் முறை ஆட்சியே தனக்கு பிடித்தமானது என்கிறார் இவர். ஆஷந்தியில் தேசிய விடுதலை இயக்கம் என்கிற புது ஸ்தாபனத்தை இவர் நடத்துகிறார்.

கோல்ட் கோஸ்டில் மக்களின் முக்கிய வேலை விவசாயமும் மீன் பிடித்தலும்தான்.

கோல்ட்கோஸ்ட் கைத்தொழில் துறையில் அதிகமாக முன்னேறாத காரணம் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாததே. இப்போது பெரும் ரஸ்தாக்கள் போடப்பட்டு வருகின்றன. டெமா என்ற துறைமுகம் பலப்படுத்தப்படுவதுடன் ஏற்கனவே யுள்ள தகோசாடி துறைமுகமும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

உலகின் சாக்கலெட் உற்பத்தியில் மூன்றில் ஒரு

பங்கு இங்கு நடைபெறுகிறது. கோக்கோவிலிருந்துதான் சாக்லெட் செய்யப்படுகிறது.

யார் இந்த நிக்ருமா ?

பிரதமர் பதவிக்கு வந்த முதல் ஆப்பிரிக்கரே நிக்ருமாதான். சிறையிலிருந்து நேரே பதவி வகிக்கச் சென்ருர் இவர். யுனைடெட் ஸ்டேட்ஸில் 10 வருஷ காலம் படித்துத் தேறியவர்.

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டவேண்டும் என்பதில் வெகு தீவிரமாக முனைந்தவர். அமெரிக்காவில் படிக்கும் போது இவர், அமெரிக்கர் ஒருவரை குடி தண்ணீர் எங்கு கிடைக்கும் என்று கேட்டாராம். அவர் ஒரு சாக்கடையைக் கூட்டினுராம். இதை அவரே ஒரு நிருபரிடம் சொல்லுகையில் சிறிதளவு ஆத்திரத்தையும் வெளிக் காட்டவில்லை.

ஆப்பிரிக்கா முழுவதுமே உள்ள கருப்பர்களும் வெள்ளையர்களுமே இவர் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். கோல்ட் கோஸ்டை இதர ஆப்பிரிக்க நாடுகளும் பின்பற்ற வேண்டியிருக்கும் என்றே சொல்லலாம்.

வெள்ளையர்களுடன் கோல்ட் கோஸ்டுக்குத்தொடர்பு ஏற்பட்டது மிகவும் பழமையானது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு பத்து வருஷங்களுக்கு முன்பு இங்கு தங்கி வசித்தவர் 1700 லிருந்தே வர்த்தகத் தொடர்ப்பு கோல்ட்கோஸ்டுடன் ஏற்பட்டு விட்டது.

கோல்ட் கோஸ்டிலுள்ள ஆப்பிரிக்கர்கள் எல்லாருமே முன்னேற்ற மடைந்தவர்கள். இவர்களில் பெரும்பாலோர்கள், பங்களாவுடன் மிகநாகரீக வாழ்க்கையை நடத்துகிருர்கள்.

தலைநகரான அக்ராவை எந்த நாகரீக நகரத்துடனும் ஒப்பிடலாம்.

சுதந்திரப் போராட்டம்

இந்தியா சுதந்திர மடைந்த பின்கோல்ட்கோஸ்டும் அதைப் பின்பற்றி சுதந்திரம் பெற வேண்டும் என்ற எண்ணம் இங்குள்ளவர்களுக்கு தோன்றியது. ஐக்ய கோல்ட் கோஸ்ட் கன்வென்ஷன் என்ற ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு, சுயாட்சி பெற முயற்சி துவங்கப்பட்டது. அப்போது நிக்ருமா லண்டனில்இருந்தார். அவர் வரவழைக்கப்பட்டு கட்சியின் காரியதரிசியாக அமர்த்தப்பட்டார்.

கோல்ட் கோஸ்டு ஸ்திரீ ஒருத்தி



பிரிட்டிஷ் கவர்னர் மாளிகை

தவன் என்று அர்த்த மாம். நிக்ருமா என்ருல் பதிமூன்ருவது குழந்தை என்று அர்த்தம். சிறுவயதிலேயே நிக்ருமா சிறந்த பேசும் வன்மை பெற்றிருந்தார், இவர் கப்பல் தளங்களில் வேலை செய்து வந்தவர். இவர் லண்டனில் நடத்திய 'நியூ ஆப்பிரிக்கன்'. என்ற சஞ்சிகை கோல்டு கோஸ்டில் தடை செய்யப்பட்டிருந்தது.

நிக்ருமா வந்த சில வாரங்களில் திடீரென்று கலவரங்கள் ஏற்பட்டன. கவர்னர் மாளிகை சுற்றி ஆர்பாட்டக்காரர்களின் கூட்டம். இதர காலனிகளிலிருந்து போலீஸ் படையும், துருப்புகளும் அழைக்கப்பட்டன. நிக்ருமாவை போலீஸ் கைது செய்தது.

நிக்ருமா அப்போது கம்யூனிஸ்டு கட்சியின் மெம்பராக இருந்தார். அவர் வசம் இருந்த ஒரு கார்டில் காணப்பட்டவை இவை :

''எந்த வேலை கொடுத்தாலும் செய்து முடிப்பேன். ஒவ்வொரு மாதமும் 21உ காலை முதல் அஸ்தமனம் வரை உண்ணுவிரதம் இருப்பேன்''

இதன்பின் ஏற்பட்ட ஒரு கமிஷனின் சிபார்சுப்படி கோல்ட் கோஸ்டு மக்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கிடைக்க ஏற்பாடாயிற்று. இதை நிக்ருமாவின் முயற்சிக்கு பெரும் வெற்றி என்று சொல்லலாம்.

குவாமே என்ருல் சனிக் கிழமை பிறந்

அக்ராவில் நிக்ருமாவை கடவுளாகக்கூட மக்கள் கருதி வருகிருர்கள். இன்று கோல்ட் கோஸ்டில் நீக்ரோ மந்திரியிடம் வெள்ளையர்கள் வேலை செய்கிருர்கள்.

1951-ல் நிக்ருமாவின் கட்சி பதவிக்கு வந்ததுமுதல் கல்வி வசதிகள் பெருக ஆரம்பித்தன. *6* வயது முதல் *12* வயதுவரை எந்தக் குழந்தையும் ஆரம்பக் கல்வியை இலவசமாகப் பெறலாம். சென்ற *5* வருஷங்களில் சுமார் *1000* புது ஆரம்ப, மத்ய தரப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டுள்ளன. தொழில் நுட்பக் கல்வி பள்ளிகள் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது.

தலைநகர் அக்ராவின் தோற்றம்

மண்ணுக்குள் முன்னோர்கள்

'மலர்மன்னன்'

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த சீரையும் சிறப்பினையும், பேரையும் புகழினையும் இன்றைக்கும் பறை சாற்றும் வண்ணம் அமைந்துள்ள புராதன கலைக்கூடங்களையும், கல்வெட்டுக்களையும் கண்ட வரலாற்று அறிஞர்கள், அக்கால நாடுகளையும், அவற்றின் திலகங்களாக இருந்த நகரங்களையும் நேரில் காண வேண்டும் என்று பேராவல் கொண்டார்கள். முப்பாட்டனார்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளப் பெரிதும் விழைந்தார்கள் முந்நாளில் சிறப்புற்றுத் திகழ்ந்த நகரங்களும் முன்னோரின் வாழ்க்கை முறைகளுக்கான ஆதாரங்களும் மண்ணுக்குள்ளேதான் புதைந்து போயிருக்க வேண்டுமென அவர்கள் நம்பினார்கள்.

அந்த நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்வதுபோல பாலஸ்தீனம், எகிப்து முதலிய பகுதிகளில் கிணறு தோண்டவும், குளம் வெட்டவும், கட்டிடம் கட்டவும் நிலத்தைத் தோண்டியபோது, பலவித மட்பாண்டங்களும் பொம்மைகளும், பலவித உலோகங்களாற் செய்யப்பட்ட கருவிகளும் கிடைத்தன. இதைக் கேள்வியுற்ற வரலாற்று அறிஞர்கள், முந்நாளைய நகரங்கள் எங்கெங்கே இருந்ததாகத் தாங்கள் கருதினார்களோ, அங்கேயெல்லாம் நிலத்தைக் தோண்டிப் பார்க்க, கையில் ஆயுதங்களை ஏந்தியவாறு கிளம்பினார்கள்.

நாமெல்லோரும் பண்டைய மக்களின் பெருமையை உணர்வதற்கு பொன்னால் செய்யப்பட்ட பொருள்கள்தான் துணை செய்வன என்று கருதி, அவற்றுக்குத்தான் முதலிடம் கொடுப்போமல்லவா? ஆனால், இந்த வரலாற்று அறிஞர்களெல்லோரும் மண்ணால் செய்யப்பட்ட பொருள்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள்! ஏன் தெரியுமா?

பொன்னாலும், பிறவற்றாலும் செய்யப்பட்ட பொருள்கள் மாற்றாரின் படையெடுப்பாலும் கள்வராலும் இடப்பெயர்ச்சி யடைந்துவிடக் கூடும்; அதாவது இடம் மாறி விடக்கூடும். ஆனால், மண்ணாற் செய்யப்பட்ட பொருள்களை எல்லோரும் துச்சமாகக் கருதும் காரணத்தால், எவராலும் கவரப்படாமல் வெகுநாட்கள் அழியாமல் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டிருக்குமல்லவா?

புதைபொருள் ஆராய்ச்சி, வரலாற்று அறிஞர்களுக்கு ஒரு வெற்றியாய் அமைந்தது. பாரசீகம், எகிப்து, இராக், பாலஸ்தீனம் என்று உலகில் எங்கு பார்த்தாலும் புதைபொருள் ஆராய்ச்சி நடைபெற்று, பல்லாயிரம் ஆண்டு

களுக்கு முன்பு விளங்கிய நகரங்கள் மண்ணுக்குள்ளே யிருந்து வெளியே வரலாயின.

இந்த ஆராய்ச்சி இந்தியாவில் சிந்துநதி பிரதேசத்திலும் நடைபெற்று, அதன் பயனாக மாபெரும் நகரங்கள் வெளிப்பட்டன. மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் வெட்டியெடுக்கப்பட்ட இந்த நகரங்களின் கட்டிட அமைப்புகளும், சாலை போன்ற நகர அமைப்புகளும் உலக நாகரீகங்களிலேயே மிகச் சிறந்த நாகரீகத்தை அந்நகரமக்கள் பெற்றிருந்தனர் என்பதை அறிவித்தன.

அந்த நகரமக்களால் எழுதப்பட்ட எழுத்துக்களை ஆராய்ந்து பார்த்த வரலாற்று அறிஞர்கள், அவை தமிழ் மொழியின் இனம் என்று முடிவு செய்தார்கள். எனவே அந்நகர மக்கள், தென்னாட்டு மக்கள் என்ற முடிவுக்கும் வந்தார்கள்.

சிந்துநதிச் சமவெளியின் நாகரீகத்தின்மீது அளவுக்கு மீறிய மோகம் வைத்த வரலாற்று அறிஞர்கள், அந்த நாகரீகத்தின் பிறப்பிடமான தமிழ் நாட்டிலும் புதைபொருள் ஆய்வு நடத்த எண்ணினர்கள்.

தமிழ்த்திருநாடு உலகில்வேறு எந்த நாடுகளுக்கும் எந்த விதத்திலும் சளைத்ததல்ல என்பதை, தமிழ் நாட்டில் நடைபெற்ற புதைபொருள் ஆய்வின் போது அறிந்துகொள்ள முடிந்தது.

தமிழகத்தில் நடை பெற்ற ஆய்வு, மிகவும் குறுகியது தானென்ருலும், அந்தக் குறுகிய ஆய்விற்குக் கிடைத்த வெற்றி மகத்தானதாகும்.

சென்னைக்கு அடுத்த பல்லாவரத்தில் களிமண்ணையும், மணலையும் கலந்து, அதனுற் செய்யப்பட்ட மனித உருவம் ஒன்று அகப்பட்டது. இதன் கால்கள் குட்டையாக இருந்தன. இங்கு, இறந்தோரை வைத்து அடக்கம் செய்வதற்கான தாழிகளும் அகப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் பலவகை மட் பாண்டங்களும், சிவப்பு மண்ணுலான பெண்ணுருவங்களும் கிடைத்தன. அந்தப் பெண்ணுருவங்களின் கூந்தல் அலங்காரம் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. கூந்தல் பல சுருள்களாகச் சுருட்டப்பட்டு, அச்சுருள்களின் மீது அழகான சீப்புகள் செருகப்பட்டிருந்தன. இம்மாதிரியான சிகை அலங்காரங்கள் கலைந்துவிடாமலிருக்க பெண்டிர் ஒருவகைக் கழுத்தணியை அணிந்துகொள்வதுவழக்கம். அத்தகைய கழுத்தணிகளில் ஒன்று மைசூர் பிரதேசத்தில் காவிரியாற்றின் கரையில் கண்டு பிடிக்கப்பட்டது. மேலேகூறிய கூந்தல் அலங்காரம் கொண்ட உருவச் சிலைகள் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் காணப்பட்டன.

இதே மாவட்டத்தில் பிணங்களை வைத்து அடக்கம் செய்வதற்கான குடிசை போன்ற பிணப்பெட்டிகளும் கண்டெடுக்கப்பட்டன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் செட்டிபாளையம் என்னும் ஊருக்கருகில் மட்பாண்டச் சிதைவுகளும், பலவகை உலோகங்களும் எலும்புகளும் காணப்பட்டன. அந்த இடத்தை மேலும் தோண்டிய பொழுது, கல்லாலான பிணக் கோயில் ஒன்று வெளிப்பட்டது. அதனுள்பலவகைப்பட்ட பொருள்கள் காணப்பட்டன.

வழவழப்பான கருநிற மட்பாண்டங்கள் சிதைவில்லாமல் நல்ல நிலைமையில் காணப்பட்டன. நீர் அருந்தும் கோப்பை ஒன்று இருந்தது. இன்னொரு கிண்ணமும் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு மானின் உருவமோ ஆட்டின் உருவமோ செதுக்கப்பட்டிருந்தது. இந்தப் பொருள்கள் யாவும் இறந்தவன் உபயோகித்த பொருள்கள் போலும். அக்காலத்தில் இறந்தவரை வைக்கும் தாழிகளில் அன்னார் உபயோகித்த பொருள்களையும் வைத்து அடக்கம் செய்து விடுவது வழக்கம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பல வகைப்பட்ட மட்பாண்டங்களும், புதிய கற்கால மக்கள் இறந்தோரைப் புதைக்கும் முறைகளைத் தெரிவிக்கும் தாழிகளும் கண்டெடுக்கப்பட்டன. புதியகற்காலத்தவர் தாழியில் இறந்தவரை உட்கார்த்தி, பாதியளவு மணலைப்போட்டு நிரப்பி, அதன்மீது அரிசி முதலிய கூலப் பொருள்களை ஒரு தட்டில் வைத்து, இறந்தோர் பயன் படுத்திய கருவிகளையும் வைத்து, மீண்டும் மணலைப் போட்டு பின்னர் அடக்கம் செய்தனர் என்பது அத்தாழிகளின் மூலம் தெரியவந்தது. இத்தாழிகள் பல்வேறு உருவமுடையவை. இந்த சமஸ்தானத்தில் இரும்புக்கால சவப்பெட்டிகளும் அகப்பட்டன. இப்பெட்டிகள் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒரு பாகத்தில் இறந்தவனையும் மறுபாகத்தில் அவன் பயன்படுத்திய பொருள்களையும் வைத்து அடக்கம் செய்யப்பட்டது அதன் வாயிலாகத் தெரியவந்தது.

திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களிலும் பல நிற மட்பாண்டங்களும் உலோகப் பொருள்களும் கண்டெடுக்கப்பட்டன.

சேரநாட்டில் புதிய கற்காலத்தவரும் இரும்புக் காலத்தவரும் பயன்படுத்திய பொருள்கள் அகப்பட்டன. இறந்தவனை வைக்கும் தாழியொன்றில் கருப்பும் சிவப்பும் கலந்த மண்ணால் செய்யப்பட்ட எட்டு சிறுதாழிகளும், உணவு உண்ணும் பாத்திரங்களும், நீரருந்தும் குடுவைகளும் ஜாடிகளும் சட்டிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஒரு மூலையில் சுமார் மூன்றடி நீளமுள்ள கைப்பிடியற்ற வாள் ஒன்றும், காம்பு இல்லாத ஈட்டி முனைகள் இரண்டும் இருந்தன.

பல்லாவரத்தில் கிடைத்த மனித உருவம், இராக்கில் பாக்தாத் நகரில் கிடைத்த உருவங்களைப்போல் இருக்கிறது. செட்டிபாளையத்திலே அகப்பட்ட மான் அல்லது ஆடு செதுக்கப்பட்ட பாண்டம், பாரசீகத்தில் லூரிஸ்தான் என்ற இடத்தில் கிடைத்த வெண்கலப்பாண்டங்களை ஒத்திருக்கிறது.

கிரேக்கம் முதலிய பிறநாடுகளின் நாணயங்கள் நம் நாட்டில்அகப்பட்டதைக்கொண்டு, நமது நாடு பிறநாடுகளோடு வாணிபத் துறையிலும் கலாச்சாரத் துறையிலும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது தெரிய வருகிறது.

வரலாற்று அறிஞர்கள் நம் நாட்டில் மூவேந்தர்களின் துறைமுகங்களையும் தலைநகரங்களையும் நல்ல முறையில் ஆராய்ச்சி செய்வார்களேயானால், நம் நாட்டின் பெருமையை உலகம் நன்கு உணரும் என்பதில் ஐயமில்லை. ★

இலக்கியத்தில் குடந்தை

எஸ். என்.

புராணங்களிலும் சரித்திரங்களிலும் புகழ்ந்துரைக்கப்பட்ட கும்பகோணம், தமிழ் இலக்கியத்திலும் வெகுவாகப் புகழப் பட்டிருக்கிறது.

எங்கே பார்த்தாலும் கோபுரங்கள், இடறி விழுந்தால் கோயில்கள். தமிழ் நாட்டில் கும்பகோணத்திலுள்ளது போன்ற அவ்வளவு கோயில்கள் வேறு எங்குமே கிடையாது என்று கூறலாம். இங்குள்ள சிவாலயங்கள் நாயன்மார்களின் பாடல் பெற்றவை. வைஷ்ணவ ஆலயங்கள், ஆழ்வார்களால் மங்கள சாஸனம் செய்யப்பட்டவை.

காதல் கனவு

நம்முடைய கோவில்களை நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற பக்த மணிகளின் காதல் கனவு என்றே சொல்ல வேண்டும். வானத்தை அளாவும் உயரத்தையும் அருமையான சிற்ப வேலைபாடுகளையுமுடைய கோவில்கள் மக்களிடையே பக்தியைத் தூண்டின. பக்திக் காதல்தான் இம்மாதிரி கோயில்களாகப் பரிணமித்தது.

ஆழ்வார், நாயன்மார் இவர்களின் பக்தி விசேஷம் சொல்லிலே கவிதையாகி, தேவாரமாகவும். திருவாசகமாகவும், திவ்யப் பிரபந்தமாகவும் விளங்கிற்றென்றால், அதே பக்தி கல்லிலும் கவிதையாகி,சிற்ப ஜாலங்களுடன் கூடிய கோவில்களாகப் பரிணமித்தன.

கல்லாலே பிறந்த கவிதைகளும் சொல்லாலே பிறந்த கவிதைகளும் நம் நாகரீகத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் முக்கிய அடிப்படையான கோட்பாடுகளை வகுப்பதாக இருக்கின்றன.

கோபுர தரிசனம்

'கோபுர தரிசனம், பாப விமோசனம்' என்பதை பக்தர்கள் நம்பினார்கள். ஆனால், தெய்வம் கோவிலுக்குள்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அப்படி என்றால் கோயில்கள் எதற்கு என்று கேட்கலாம். கோவிலுள்ள விக்ரகமும், சிற்ப வேலைப்பாடும் கடவுளாகிய காதலனை பக்தர்களுக்கு அறிமுகப்படுத்தவே. கோயில்கள் தமிழ் வளர்ப்புப் பண்ணையாகவும் கலா பீடங்களாகவும் இருந்து வந்திருக்கின்றன.

கோவில்களில் உள்ள இத்தகைய சிற்ப விசேஷங்களை தமிழ் நாடு தவிர, வேறு எங்கும் காண முடியாது. இத்தகைய அரிய செல்வத்தைப் பெற்றது குடந்தை மாநகர்.

ஔவையின் விஜயம்

சரஸ்வதிதேவியின் அவதாரம் என்று புகழப்படும் ஔவை பிராட்டி கும்பகோணத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

அக்காலத்தில் கும்பகோணத்தில் திருத்தங்கி என்ற லோபித்தனமுடைய செல்வந்தரும் மருத்தன் என்ற கொடைவள்ளலும் வசித்து வந்தார்களாம். இவர்களைக் குறித்து ஔவையார் இப்பாட்டைப் பாடியிருக்கிறார் :

''திருத்தங்கி தன்வாழை
தேம்பழுத்து நிற்கும்,
மருத்தன் திருக்குடந்தை
வாழை—குருத்தும்
இலையுமிலை, பூவுமிலை
காயுமிலை என்றும்
உலகில் வருவித்தோருண்டு''

இதில் ஔவையார் திருத்தங்கியைப் புகழ்வதுபோல இகழ்ந்தும், மருத்தனை இகழ்வது போலப் புகழ்ந்துமிருக்கிறார். அவருக்கு உதாரணம் காட்ட வாழைதான் அகப்பட்டது. காவிரிபாயும் பிரதேசத்தில் பச்சப்பசேல் என்று வளர்ந்துள்ள வாழை எப்படி ஔவையாரின் கவனத்தைக் கவராமல் இருக்க முடியும்?

சாஸனம் பெற்றது ஆராவமுதன் என்று போற்றப்படும் சாரங்கபாணி பெருமாள் கோவில்தான்.

திருமழிசை யாழ்வார் பலவருஷங்கள் இங்கு தங்கி தவம் செய்தாராம். திருமழிசை யாழ்வார் துதிக்கையில்,

''நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்குஞால மேனமாய்
கிடந்தமெய் குலுங்கவோ
இலங்குமால் வரைச் சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக்
கரைக் குடந்தையுட்
கிழந்த வாறெழுந்திருந்து
பேசுவாழி கேசனே''

என்று பாடினார். ஆழ்வார் விரும்பியபடியே பெருமாள் கிடந்த திருக்கோலமாக அமைந்து விட்டாராம். இதை உத்தான சயனம் என்று கூறுகிறார்கள். திருமூர்த்தி ஆழ்வாருக்கு இங்கு மூர்த்தி செட்டித் தெருவில் கோயில் இருக்கிறது.

நம்மாழ்வார் முதலிய 12 ஆழ்வார்களில் 7 ஆழ்வார்கள் இத்தலத்துடன் சம்பந்தப்பட்டிருப்பது மல்லாமல், ஏராளமான பாசுரங்களையும் பாடியிருக்கின்றனர். இந்த ஊரிலுள்ள எல்லா கோயில்களையும் விட அதிகமாக மங்கள



மகாமகக் குளமும் காசிவிஸ்வநாதர் கோயிலும்



சாரங்கபாணி கோவிலும் பொற்றாமரைக் குளமும்

கோயில்களுக்கு தேவாரம் உண்டு.

நாகேஸ்வரர் கோயிலை குடந்தை கீழ்கோட்டம் என்று தேவாரம் குறிப்பிடுகிறது. இக்கோயில் குறித்து ஞானசம்பந்தர் பாடிய பாசுரமாவது:

''பொன்நேர் தருமேனியனே
புரியும் மின்சேர் சடையாய்
விரைகாவிரியின்
நன்னீர் தயல் நாகேஸ்வர
நகரின்
மன்னே யெனவல்
வினை மாய்ந்தறுமே.''

திருமங்கை மன்னன் பூஜித்த ஸ்தலம்

திருமங்கை ஆழ்வார் அருளிய திருவெழுக் கூற்றிருக்கை இந்த ஆராவமுதனைப் பற்றியது தான். இதனால் இப்பெருமானுக்கு சித்திரத் தேருடையான் என்றும் அழைப்பதுண்டு. திருமங்கை யாழ்வார் முதன் முதலில் செய்த ''வாடினேன் வாடி வருந்தினேன்'' என்ற பாசுரம் இத்திவ்ய க்ஷேத்ர விஷயமானதே.

திருவாய் மொழியில் மொத்தம் எவ்வளவு பாசுரங்கள் இருக்கின்றன என்பது தெரியாத ஒருகாலம் இருந்தது. அப்போது இங்கு பாடப்பட்டுவந்த திருவாய்மொழி பாசுரம் ஒன்றில் ஆயிரத்துளிபத்தும் என்றிருப்பதினாலேயே திருவாய்மொழி ஆயிரம் என்று தெரிய வந்தது.

தேவாரம் பெற்ற ஸ்தலம்

இங்குள்ள கும்பேஸ்வரர், நாகேசுவரர், விசுவநாதஸ்வாமி

சிவ பெருமானை சிவநேசர்கள் வேடனாக இப்பதியில் கண்டு பரவச மடைந்திருக்கின்றனர். இவ்வேட உருவமுள்ள சிலை கும்பேஸ்வரர் ஆலயத்தில் உள்ளது.

''துறவி நெஞ்சினராகிய
தொண்டர்காள்
பிறவி நீக்க பிறற்றுமின்
பித்தராய்
மறவனாய் பார்த்தன்
மேற்சின தொட்டரவம்
குறவனா யுரையுங்குட
மூக்கிலே.''

என்று திருநாவுக்கரசர் பாடியிருக்கிறார்.

சிவபெருமான் வேடரூபத்தை நினைக்கும்போது அருச்சுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுக்குமுன் வேடனாக சிவபெருமான் தோன்றியது

அப்பர் சுவாமிகளுக்கு ஞாபகத்திற்கு வந்ததுபோலும்.

மூர்க்கநாயனார் இந்த ஸ்தலத்தில்தான் முக்தியடைந்தார்.

மகாமகத்தின்போது நதிகள் கன்னிகைகளாக இங்குவந்து இங்கேயே தங்குவதையும் திருநாவுக்கரசர் ஒரு பாசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

"தங்கை யாளுமை
　யாளுரை நாதனார்
அங்கை யாளொறுபதத்
　தாழ்சடைக்
கங்கை யானவள்
　கன்னி எனப்படும்
கொங்கையாள் உறை
　குடமூக்கிலே.
ஓதா நாவன்
　திறத்தை உரைத்திரேல்
ஏதானும் முனிதாகும்
　மியமுளே
சேதா ஏறுடையான்
　அமர்ந்தவிடம்
கோதாவிரியுறை
　யுங்குட மூக்கிலே.
காமியஞ்செய்து
　காலம் கழியாதே
ஓமியஞ் செய்தங
　குள்ளத்துணர்மினோ
சாமியோடு சரஸ்வதியவள்
　கோமியும் உறையுங்குடமூக்கிலே
ஏவி யிடர்க் கடலிடைப்பட்
　டிளைக்கின்றேனை
இப்பிறவியறுத்
　தேற வாங்கியாங்கே
கூவிஅம ருலகனைத்தும்
　உருவிப்போகக்
கோயில் அறு குணத்தாண்டு
　கொண்டார் போலும்
நாவிமுதல் காவிரிநல்
　யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரை
　புட்கரணி தெண்ணீர்க்
கோவியோடு குமரிவரு
　தீர்த்தஞ்சூழ்ந்த
குடநிறைக் கீழ்க்கோட்டத்
　தெங்கூத்தனாரே."

குறவஞ்சி நொண்டி நாடகம்

ஸ்ரீ பாபநாச முதலியார் கும்பேஸ்வரர் விஷயமாக ஒரு குறவஞ்சியை இயற்றியிருக்கிறார். இக் குறவஞ்சியில் இத்தலத்தின் சிறப்புகள் அடங்கியுள்ளன.

அரியலூர் சண்பக மன்னார் என்பவர் சாரங்கபாணி பெருமாள் மீது ஒரு நொண்டி நாடகத்தை இயற்றி யிருக்கிறார். நொண்டி நாடகம் என்பது போர்க்களத்தில் சென்ற ஒருவன் கால் வெட்டுண்டு பெருமாள் திருவருளால் கால் திரும்பப் பெற்ற வரலாற்றைச் சொல்லும் துறையில் அமைக்கப் படுவதாகும்.

கும்பகோணத்தைப் பற்றிய குறிப்புகள் 'தக்கயாகபரணி' ஏட்டுச் சுவடியிலும், யாப்பருங்கல் விருத்தியிலும் காணப்படுவதாக தமிழ்த் தாத்தா உ. வே. ஸ்வாமிநாதய்யர் தன் ஆராய்ச்சிகளில் கண்டுபிடித்திருக்கிறார். மகாமகக் குளத்தின் வடகரையிலுள்ள ஒரு வீரசைவ மடத்தின் மகிமையை "வீர சிங்காதன புராணம்" என்ற நூல் கூறுகிறது. ஒட்டக் கூத்தர் 'தக்கயாகபரணியை' இயற்றியதின் காரணம், இம்மடத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சிதான் என்று அப்புராணம் கூறுகிறது.

மகா வித்வான் திருசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இந்த ஸ்தலம் சம்பந்தமாக திருக்குடந்தை புராணம், மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், குடந்தை சிறப்பந்தாதி ஆகிய மூன்று நூல்களை இயற்றியிருக்கிறார்.

சென்ற வருஷமே மகாமகம் நடந்துவிட்டபோதிலும் இங்கு இவ்வருஷமும் மக உற்சவம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

சிவந்த கண்கள்

வே. கபிலன்

மலையைச் சார்ந்த இடத்தில் ஓர் அழகிய சோலை, அந்தச் சோலைக்கு அடுத்தாற்போல ஆறொன்று. அங்கே, பல நாளாய் இன்பந் துய்க்க வேண்டுமெனக் கருதிய இரு இளமை பூத்துக் குலுங்கும் எழில் உள்ளங்கள்.

அந்த இன்பக் கனவுக்கு முன்னே...! அதுதான் பெரிய வியப்பிற்குரிய செய்தி. கிழக்கிலிருந்து அவள் வந்தாள். மேற்கிலிருந்து அவன்வந்தான். கண்ணால் கண்டனர், கண்டவுடன் பேச முடியாத வண்ணம் பலநாள் வெட்கித் தலை குனிந்தனர். அதன் பின்னர், அவளை அடைய வேண்டுமெனக் கருதியவனுக்கு மட்டும் துணிவு பிறக்கிறது. நாணம் அவனைவிட்டு அகலுகிறது. அவளோடு வரும் தோழியிடம் முதன் முதலாகத் தன் எண்ணத்தை வெளிப்படுத்துகிறான். ''உன் தலைவிக்காக உயிரை வேண்டுமானாலும் கொடுக்கத் தயங்கமாட்டேன்.'' என்று உறுதி கொடுக்கிறான்.

நாள் ஆக ஆக, அவன் நிலையைக் கண்ட தோழி, தன் தலைவிக்கு, இச்செய்தியை மெல்ல மெல்ல வெளிப்படுத்துகிறாள். அவளோ, பற்றற்றவள்போல் நடிக்கிறாள்.

அந் நடிப்பை உணராதவளா தோழி! ஆகவே காலத்தை எதிர்நோக்கி கிடக்கிறாள். நடித்தவள் நயந்து கேட்கத் தலைப்படுகிறாள். ''அவனோடு என்னை பொருத்திவைத்துஅழகு பார்ப்பாயாக!'' என்று நயம்படச் சொல்கிறாள். தோழி அகமகிழ்கிறாள்.

அந்நிகழ்ச்சிக்குப் பிறகு இருவரையும் ஒன்று சேர்த்து வைத்துவிட்டு, அந்தச் சோலைக்கு அடுத்துள்ள ஆற்றங்கரைப் பக்கமாகச் சென்று விடுகிறாள். தோழியைப் பிரிந்த அன்னவள் பலவாறாக எண்ணிக் கொண்டும் காதலுக்குரிய வெட்கத்தோடும் சிந்தித்தவண்ணம் இருக்கிறாள்.

அவனது மெல்லிய விரல்கள் செங்காந்தள் மலர்போன்ற அவள் முகத்தைத் தூக்கி நிறுத்துகின்றன. அவள் கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தன.

அவள் உள்ளத்தை கொள்ளை கொண்டு அன்னவன் அவளை அணைத்து இன்பத்துளிகளைத் துடைக்கிருன்.

'கூடுவதெப்போது?'– என்று தம் மனத்திற்குள்ளேயே கேட்டுக் கிடந்த அவ்விருவர் அகமும் உணர்வால் ஒன்று சேருகின்றன. உடலாலும் அப்படியே....

உடலின் உறவு பிரிவு பெறுகின்றது. உள்ளத்தின் உணர்வு அவர்களைப் போகவிடாமல் ஒரு சேரப் பற்றி நிற்கின்றது. என்ருலும், உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டிய நிலைமை அவ்விருவர்களுக்கும் இருந்த காரணத்தால், பிரியா விடைபெற்று பிரிகின்றனர். அது வேளையில், அவளின் கண்கள் சிவந்து காணப்படுகின்றன. தலைவி வரும் சாயல் தெரிந்து, ஆற்றங்கரை விட்டு அவளோடு செல்கிருள் உயிர்த்தோழி.

அவளை வளர்த்த செவிலித் தாய், வீட்டின் வாயிற்படியிலேயே உட்கார்ந்து கொண்டிருக்கிருள். தலைவி ஒன்றும் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிருள். தோழி மட்டும் அதன் உட்பொருளைப் புரிந்து கொள்கிருள்.

''ஏண்டி! எங்கே போய் விட்டு இந்நேரத்திற்கு வருகிருய்?'' இதுதான் தலைவியைப் பார்த்து அவளின் வளர்ப்புத் தாய் கேட்ட முதற்கேள்வி. அவள் எதையும் சொல்ல முடியாதவண்ணம் விழிக்கிருள்.

''என்னடி! மௌனம் சாதிக்கிருய்? இதென்ன...கண்களெல்லாம் சிவந்து காணப்படுகின்றன?''...

ஆனல், தலைவியின் உள்ளுணர்வு தோழியின் வாக்கால் தனக்கு எத்தகைய விபரீதம் நிகழ விருக்கிறதோ என்று எண்ணி எண்ணித் துடித்துக் கொண்டிருந்தது. அவள் கூறும் பதில் தன் செவிலித் தாயின் உள்ளத்தில் எத்தகைய விபரீதக் கருத்தையும் உண்டாக்காமலிருக்க வேண்டுமே என்பதே அவள் இதயபூர்வ பிரார்த்தனை. நெடுநாளாகப் பழகிவரும் தோழி, தன் குறிப் புணர்ந்து இச்சந்தர்ப்பத்தில் நடந்து கொள்ளுவாளோ, இல்லை தன் அறிவிலிச் செய்கை மூலம் தன்னை ஆபத்திற்குள்ளாக்கி விடுவாளோ என்று துடிதுடித்தவாறு நிற்கிருள். அவள் தோழி அவளை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையின் போது தன் தலைவியின் முக அழகு, அவள் அகநிலையை அவளுக்குத் தெள்ளத்தெளிய உணர்த்தி விடவே, அவள் நிலையை உணர்ந்து கொண்டாள்.

அவள் விழிப்பற்ற நிலையை உணர்ந்த தோழி, அவளுக்குப் பரிந்து பேசத் தொடங்குகிருள்:

''அன்னையே! அவளொன்றும் தவறு செய்யவில்லை. நாங்கள் இருவரும் விளையாடுவதற்காக சோலைக்குச் சென்றிருந்தோம். அந்தச் சோலையின் பக்கத்திலே உள்ள அழகிய குன்ருென்றில்தேன் கலந்த நீர் வீழ்ச்சியில் தலைவி மூழ்கி விளையாடினுள். அதன் விளைவே, கண்கள் சிவப்புற்றிருப்பன. ஆகவே, எங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டாம்'' என்று தோழி குறிப்பிடுகிருள். செவிலியின் மனத்திலே எழுந்த ஐயம் அரை நொடியில் மறைகிறது. தலைவி, தன் தோழியின் திறனை வியந்து பாராட்டுகிருள்.

''காய்ந்தீயல் அன்னை! இவளோ
தவறிலள்
செங்கிய செந்நீர் இழிதரும்
கான்யாற்றுள்
தேம்கலந்து வந்த அருவி
குடைந்துஆட
தாம்சிவப் புற்றன கண்''.

—ஐந்திணை எழுபது.

ஓங்கிய—சிறப்பு வாய்ந்த; செந்நீர்—சிவப்புற்ற நீர்; கான் யாற்றுள்—மலையின் ஊடே செல்லக்கூடிய; அருவி—மலையின் வீழாறு; காய்ந்தீயல்—வீணைகச் சினந்து மொழிதல்.

இயற்றியவர் : மூவாதியார்
திணை : குறிஞ்சி
காலம் : பகற்குறி

செய்யுட் திறன் :

ஐந்திணை எழுபது, பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று. இந்நூலை இயற்றிய புலவரின் புலமைக்கு இஃதொன்றே சிறந்த எடுத்துக் காட்டாகும். நட்பின் செயலை வெளிப்படுத்தும் முகத்தாலும், காதலின் சக்தியை உணருவதற்கேற்றவாரும் அமைந்துள்ளது. இப்பாடல், இயற்கை அன்னையோடு இணைந்து காதற் காட்சியை வெளிப்படுத்தும் முறை சங்க காலப் புலவருக்கே உரியதாகும் என்பதை எடுத்துக் காட்டுகின்றன மேலுள்ள வரிகள். 'சிவப்புற்றன கண்' என்றுள்ள சொற்களும், காய்ந்தீயல் அன்னை' என்று தோழி வினவி நிற்பதும் எண்ணி எண்ணி மகிழத்தக்கனவற்றுள் ஒன்ருகும். அதன் சுவை, உணர்ந்தார்க்கே எளிதில் புலப்படும்.

மலரின் மணத்தை எடுத்துரைத்தால் அஃது சிறப்புப் பெருது. அந்த மணத்தை முகரும் போதுதான் அதன் தன்மையை உணருவதற்கு ஏதுவாகும். உணருங்கள்! முகருங்கள்! இன்ப மணம் பெற்று, இனிய கருத்தை உள்ளத்தில் ஏற்று மகிழுங்கள்.

காலம் வந்துவிட்டது!

அரசியலும், மதமும், பாஷையும் ஜனநாயக ஆவேசங் கொண்ட பொது மக்களுக்காகத்தான் இருக்கின்றன. ஒரு கூட்டத்தாரின் நன்மைக்காக, ஒரு கூட்டத்தார் அதிகாரம் செலுத்துவதற்காக இவை இல்லை.

தமிழ் ஜன சமூகத்தை அடியோடு புதுப்பித்து நிர்மாணம் செய்யவேண்டிய காலமும், தேவையும் வந்துவிட்டன. அந்தப் புதிய நிர்மாணத்திற்கு ஏற்றாற்போல பாஷையை அமைத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

அழகுடனும், வேளையுடனும் நிலைத்து நிற்பதுதான் தாய்மை கொண்டதாகும். மற்றயாவும் குட்டிச் சுவர்கள் அல்லது குட்டைப் பாசிகள்.

—வ. ரா.

சென்னைத் துறைமுகம்

1870—க்கு முன்னதாகவே சென்னை முக்கிய கடல் வியாபார ஸ்தலமாக இருந்திருக்கிறது. கப்பல்கள் மயிலாப்பூர் கடற்கரை யோரமாகக் காணப்பட்டதாகவும் அதில் அயல்தேசப்பொருள்கள் கொண்டு வரப்பட்டதாகவும் சான்றுகள் உள்ளன. சென்னையில் அப்போது துறைமுகம் இல்லாததால், கப்பல் நடுக் கடலிலிலேயே தங்கவேண்டியிருந்தது. 'மஸூலா' எனப்படும் படகுகள் மூலமே சாமான்களும் பிரயாணிகளும் கரைசேர வேண்டும். சில சமயங்களில் கடல் கொந்தளிப்பு அதிகமாக இருக்கும்போது, பொருள்கள் நாசமடைந்து போவதுண்டு. அக்காலத்திலிருந்த வியாபாரிகள் சர்க்காரை வற்புறுத்தி, துறைமுகம் ஒன்றைக் கட்டத் தூண்டினர். துறைமுக அமைப்பு 1876-ல் தான் துவங்கப்பட்டது. நேர் வடக்கு புறத்தில் முன்பு துறைமுக வாசல் இருந்தது. புயல் காலங்களில் அதிக தண்ணீர் உள்ளே புகுந்து, பெரும் சேதம் ஏற்பட்டதால் இந்த வழி மூடப்பட்டு, வட கிழக்கு மூலையில் துறைமுகத்திற்கு புதுவாயில் ஏற்படுத்தப்பட்டது. இந்த வேலை 1910-ல் ஆரம்பமாகி 1916-ல் முடிவுற்றது. பின்னர் சாமான்கள் இறங்குவதற்கான பல வசதிகள் செய்யப்பட்டன.

இப்போது துறைமுகத்தில் அதிக கப்பல்கள் வருவதற்கு இடமின்மையால் தெற்கு நோக்கி விஸ்தரிக்கும் ஏற்பாடு உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. இப்போது துறைமுகத்திற்குச் சென்றால் நம் நாட்டில் அதிக

1870ல் இப்போது துறைமுகம் உள்ள இடம்.

மாக இறக்குமதியாகும் பொருள் இரும்புதான் என்பதைச் சொல்லிவிடலாம். படமெடுக்கச் சென்றபோது ரயில் என்ஜின்கள் இறக்கப்பட்ட வண்ணமிருந்தன. எப்பேர்ப்பட்ட சாமான்களையும் அலட்சியமாகத் தூக்கி, இடமாற்றும் ராக்ஷஸ கிரேன்கள் பல சென்னைத் துறைமுகத்தில் இருக்கின்றன. வெடி மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதற்கு தனி இடம் உள்ளது. அக்கப்பல்கள் துறைமுகத்திற்குள் அனுமதிக்கப் படுவதில்லை. இந்த துறைமுகத்தின் நீளம் 3/5 மைல், அகலம் 3/5 மைல், ஆழம் 30 அடிக்குமேல். துறைமுக வாயிலின் அகலம் 400 அடி. புயல் அறிவிப்பு எச்சரிக்கை செய்யும் 'கண்ட்ரோல் டவர்' துறைமுக கட்டிடத்தின் உச்சியிலேயே இருக்கிறது. இந்த ஸிக்னல் ஸ்டேஷன் இரவு பகல் 24 மணிநேரமும் வேலை செய்கிறது.

மின்சாரத்தினுல் இயக்கும் 16 கிரேன்கள் இருக்கின்றன. யானைகள், என்ஜின்கள் போன்ற மிக கனமான பொருள்களை இறக்க 60 டன் கிரேன் இருக்கிறது. 13 கிடங்குகள் இருக்கின்றன. இவைகளில் மூன்று இரண்டடுக்கு மாடியுள்ளன. சிறு கப்பல்கள் ரிப்பேர் செய்வதற்கான 'டிரை டாக்' இருக்கிறது. துறைமுகத்தில் மதில் சுவர்கள் ஒரு ரஸ்தாமாதிரியே தோற்றமளிக்கிறது. அதில் தண்டவாளங்கள்போட்டு ரயிலும் ஓடுகிறது. சுவரின் வெளிப்புறம் அலைகளினுல் பழுதுபடாதிருக்க பெரும் பெரும் காங்க்ரீட் பாறைகளை போட்டு வைத்திருக்கிருர்கள்.

சுதந்திர இந்தியாவில் தற்போது கப்பல் போக்குவரத்துகள் அதிகரித்துள்ளன. கப்பல் வர்த்தகங்கள் இந்தியக் கப்பல் மூலமே நடைபெறுகின்றன. கடற்படையும் சிறுகச்சிறுகப் பெருக்கப்பட்டு வருகிறது.

தமிழர்கள் பாய்மரம் உபயோகித்து வந்த அக் காலத்திலேயே கடல் வாணிபம் செய்தவர்கள். ஆகவே தமிழர்கள் இன்றும் கப்பல்களைப் பயன்படுத்துவதில் பின்னடையவில்லை. துறைமுக விஸ்தரிப்பு வேலை அங்கங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவை பூர்த்தி பெற்ருல் துறைமுகத்திலுள்ள நெரிசல் குறையும். ★

இராமாயணத்தைக் கற்கும் முறைகள்

இராமாயணம் உலகத்தில் வழங்கும் சரித்திரங்களின் மிகப் பெருமையும் கௌரவமும் வாய்ந்தது. இதைப்பற்றி எழுந்த காவியங்கள் உலகப் பிரசித்தி வாய்ந்தன. இதனை நாம் கற்கும் முறைகள் பல. ஒருவர் படித்து பலர் கேட்கும் முறை; காலக்ஷேப முறை; பண்டித முறை; தர்க்க முறை; அலங்கார முறை; ஆராய்ச்சி முறை; இலக்கியமுறை; ரஸிகமுறை; வளநூல் முறை. இவற்றுள் சிறந்த முறைகள் அனைத்தையும் மேற்கொண்டு இராமாயணம் ஓர் இலக்கியம் என்பதை உணர வேண்டும்.

எஸ். வையாபுரி பிள்ளை



சென்னைத் துறைமுகம்

சென்னை நகரின் வளர்ச்சிக்கு அஸ்திவாரம் அதன் கடல் வர்த்தகமே. சில இடங்களிலுள்ளது போன்ற இயற்கைத் துறைமுகமல்ல இங்கிருப்பது. மிகக் கஷ்டப்டப்பட்டு கடலுக்குள் கால் எடுத்து. மதில் எழுப்பிக் கட்டப்பட்ட செயற்கைத் துறைமுகம் இது.

கப்பல்கள் வருவது அதிகரித்திருப்பதால். இட நெருக்கடி அதிகரித்துள்ளது. இதைச் சமாளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. துறைமுகத்தைத் தெற்கு நோக்கி விஸ்தரிக்கும் திட்டம் சீக்கிரமே மேற்கொள்ளப்பட விருக்கிறது.

போட்டோக்கள் : டி. ஐ. சந்தாமியான்.

துறைமுக வாயில்-கப்பல்கள் உள்ளேவரும் வழி; துறைமுக மதில் சுவர். சுவரின் அகலத்தைக் கவனிக்கவும். ஒரு ரஸ்தாவே அமைக்கப்பட்டிருக்கிறது.





சரக்குக் கப்பல் வந்துவிட்டது. சாமான்கள் இறங்கி விட்டன;
பெரும்பாலும் இரும்புச் சாமான்களே.





கோணி மூட்டைகள் கப்பலில் ஏற்றப்படுகின்றன. யானையைக் கூட கப்பலில் இம்மாதிரி ஏற்றலாம்.





பெரும் பளுவைத் தூக்கும் கிரேன்கள்.,
படகுகளிலேயும் கிரேன்கள் இருக்கின்றன.





பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்: கீழே காண்பது மோட்டார் லாஞ்ச். கப்பல் கரை ஓரம் வராவிட்டால் இதன் தயவு அவசியம்.





துறைமுகத்தின் மத்தியப் பகுதியிலிருந்து தோற்றம்.
மற்றொரு காட்சி.

கப்பல் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கிறது. அசையாமல் இருப்பதற்காக இந்த ஏற்பாடு.





ராக்ஷஸ கிரேன். 60 டன் எடை வரை தூக்குகிறது இதைத் தவிர மற்றொரு பெரிய கிரேன் உள்ளது. அது 30 டன் தான் தூக்க வல்லது.

மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு. சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

பயமும் பண்பும்

என் பக்கத்து வீட்டுக்கார அம்மாவிடம் பத்து ரூபாய் கை மாற்று கேட்டு வாங்கினேன். அந்த அம்மாள் புத்தம் புது ஒரு ரூபாய் நோட்டுகளாக என்னிடம் கொடுத்தாள். நான், வீட்டினுள் வந்து அதை எண்ணிப் பார்த்த போது, பதினொரு நோட்டுகள் இருந்ததைக் கண்டு, ஆச்சர்யமடைந்தேன். ஒரு வேளை என் குணத்தைக் கண்டறியவே அந்த அம்மாள் இப்படிச் செய்திருப்பாளோ என்றுகூட நினைத்தேன்.

மறுநாள் என் கணவர் வெளியூரிலிருந்து வந்தவுடன், அவரிடம் பணம் கேட்டு வாங்கினேன். நானும் ஒற்றை ரூபாய் நோட்டுளாக மாற்றி, அந்த அம்மாவிடம் கொடுத்து விட்டு வந்தேன்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு அந்த அம்மாள் என் வீட்டுக்கு வந்தாள். ''உன்னைப்போல் பைத்தியம் உண்டா? இப்படியா ஏமாந்து போவது? பத்து ரூபாய் கொடுக்க வந்து பதினொரு ரூபாயாகக் கொடுத்து விட்டாயே! வேறு யாராவதாக இருந்தால் உன்னிடம் திருப்பித் தருவார்களா?'' என்று சொல்லிக் கொண்டே ஒரு ரூபாயை என்னிடம் கொடுக்க வந்தாள்.

உடனே நான், ''ஏமாந்துபோய் உங்களிடம் நான் ரூபாய் கொடுத்துவிடவில்லை. நீங்கள் நேற்று எனக்கு பத்து ரூபாய் கொடுக்கும்போது தவறுதலாக அதிகமாக ஒரு ரூபாய் கொடுத்து விட்டீர்கள். ஆகவே நானும் நீங்கள் கொடுத்தபடியே திருப்பித் தந்தேன்''. என்று விளங்கச் சொன்னேன். அந்த அம்மாள் அன்பினால் என் கைகளைப் பற்றிக் கொண்டு, என் நேர்மையைப் பாராட்டினாள். என் வாழ்வில் சென்ற வாரம் நடந்த மறக்க முடியாத சம்பவம் இது.

கிருஷ்ணவேணி,

சென்னை-14.

பண்பு முக்கியம்

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் அப்பொழுதுதான் எஸ். எஸ். எல். சி. தேறியிருந்தேன். மேற்கொண்டு கல்லூரியில் சேர்ந்து படிக்க பல இடங்களுக்கு விண்ணப்பம் போட்டேன். ஆனால் என் துரதிஷ்டவசமாக எங்கும் இடம் கிடைக்கவில்லை. காரணம் நான் அதிகமான மார்க்குகள் வாங்கவில்லை. என்னை நானே நொந்து கொண்டேன். இறுதியில் ஒரு கல்லூரியிலிருந்து 'இண்டர்வியூ'க்கு வரும்படி கார்டு வந்தது. நானும் புறப்பட்டேன். என்னுடன் என் நண்பர்கள் மூன்று பேர் வந்தார்கள்.

அன்று பஸ்ஸில் ஒரே கூட்டம், எங்களுக்கு எப்படியோ உட்கார

இடம் கிடைத்தது. இரண்டு மூன்று ஸ்டாப்புகள் கடந்து பஸ் நின்றது. யாரோ ஒருவர் ஏறினர். அவருக்கு வயது ஐம்பது இருக்கும். பஸ்ஸில் ஏறியவுடன் சுற்று முற்றும் பார்த்தார். ஆனல், உட்கார இடமில்லை. என் நண்பர்களோ அரட்டையில் மூழ்கியிருந்தார்கள். எனக்கு அவரைப் பார்த்தவுடன் ஒரு மரியாதை உணர்ச்சி தோன்றியது. நான் எழுந்திருந்து அவருக்கு இடமளித்தேன். அவர் முதலில் மறுத்தாலும் நான் வற்புறுத்தியவுடன் நன்றியை அறிவித்து விட்டு அமர்ந்தார்.

கடைசியாக கல்லூரிக்கு எதிரில் பஸ் நின்றது. அந்த மனிதரும் எங்களுடன் இறங்கினர். நானும் என் நண்பர்களும் ஏற்கெனவே காத்து நின்ற வரிசையில் கடைசியில் போய் நின்ருேம். கடைசியாக என் முறை வந்தது. ஆனல், என்னைவிட அதிக மார்க்குகள் வாங்கிய என் நண்பர்கள், கவலையுடன் திரும்பிவிட்டார்கள். நான் மனமொடிந்து போனேன். 'தெய்வமே எனக்கும் அதே கதிதான?' படபடந்த நெஞ்சுடன் பிரின்ஸிபால் அறையில் நுழைந்தேன். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என் கண்களையே நம்பமுடியவில்லை! அங்கு அமர்ந்திருந்தவர் வேறு யாருமில்லை. நான் பஸ்ஸில் யாருக்கு இடம் அளித்து உதவினேனே அவரேதான். என்னைப் பார்த்தவுடன் புன்சிரிப்புடன் வரவேற்ருர். என் மார்க்குகளை அவர் பார்த்துவிட்டு. 'உனக்கு இந்தக் கல்லூரியில் இடமளித்து விட்டேன். ஆச்சர்யப்படாதே! எனக்குத் தேவையானது மார்க்குகள் அல்ல. பண்பு! அதுதான் முக்கியம்' என்ருர். நான் இந்நிகழ்ச்சியை இன்றுவரை மறக்கவில்லை.

க. தாமோதரசாமி.

கோவை.

கிணறுவெட்ட பூதம்!

ஆம், அப்போது நான் எட்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். அது சமயம் வகுப்புத் தலைவனுகவும் ஏற்படுத்தப்பட்டிருந்தேன். ஒருநாள் நான் வகுப்பிற்குள் நுழைந்தவுடன் என்னைக் கண்ட மாணவ மாணவிகள் காதோடுகாது ஏதோ பேசிக் கொண்டார்கள். வகுப்பு ஆரம்பித்தவுடன் தலைமையாசிரியர் வகுப்பிற்குள் வந்தார். வந்தவர் ''மானிட்டர், எழுந்திரு!'' என்று கூறவும் நான் எழுந்து நின்றேன். அவர் ஒரு தாளை என்னிடம் நீட்டி, ''இதை எழுதியது நீதானு?'' எனக்கேட்டார். நான் அதனை வாங்கிப் பார்த்துவிட்டு, ஆம் என்றேன். ''யாருக்கு இக்காதல் கடிதம்''? என்ருர் ஒருவருக்கும் இல்லை நான் ஒரு கதை எழுதினேன்; அதிலிருந்து யாரோ கிழித்துக் கொண்டு வந்திருக்கிருர்கள் என்று கூறியவுடன் மாணவர்கள் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள். எனக்கு அவமானம் தாங்க முடியவில்லை. ஆசிரியர் மாணவர்களை அதட்டிவிட்டு. இக்குற்றத்திற்கு தண்டனையாக நாளைக்காலை மாணவர்கள் கூடுமிடத்தில் இரண்டு ரூபாய் அபராதம், செலுத்தி மாணவர்கள் முன்னிலையில் மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக் கூறிச் சென்று விட்டார். இது எனக்கு விரோதமான ஓரிரு மாணவர்கள் செய்த விஷமம் என்பதை அறிந்தேன். அதிலிருந்த விபரம் இதுதான்:

''ஆருயிர் காதலிக்கு-உன்னைக் கனவிலும் மறவாத காதலன் எழுதியது.

உன்னுடன் பேசவேண்டும் என்று எனக்கு மிகவும் ஆசை ஆகவே நாம் சந்திக்கும் சந்தர்ப்பத்தையும், பேசும் சந்தர்ப்பத்தையும் எதிர் நோக்கியிருக்கிறேன்.

இப்படிக்கு
உன் காதலன்.''

இது எங்கள் வகுப்பு மாணவி ஒருத்திக்கு எழுதியதாக ஆசிரியர், மாணவர்களது அபிப்பிராயம். 'கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது' என்பதற் கொப்ப இச்சம்பவம் ஆகிவிடவே, இன்றுவரை நான் இதை மறக்கவில்லை.

வி. சேகு,

சிதம்பராபுரம்.

கனவு பலிதமானால்...?

ஸி. ராஜப்பா

கனவு கண்டு கண் விழித்தவுடன், கண்ட கனவின் அறிகுறி என்னவாக இருக்கும் என்ற ஆவல் யாருக்குத்தான் இல்லை? கனவின் பலன்களை விவரிக்கும் கட்டுரை இது.

கல்பூர்னியா கனவு கண்டாள்.

ஜூலியஸ் ஸீஸரின் மனைவி கல்பூர்னியா ஒரு பயங்கரக் கனவு கண்டாள். பேதையுள்ளம் படைத்த அவளால் அந்தக் கனவின் நிகழ்ச்சியைக் கூடச் சகித்துக் கொள்ள இயலவில்லை. கல்பூர்னியா, கதறியபடி கனவிலிருந்து விழிப்படைந்தாள்.

அவளது ஆருயிர் நாயகன் ஸீஸர், அவள் கூக்குரலிட்டபடி விழிப்படைந்ததைக்கண்டு, வியப்படைந்து விவரம் கேட்டான். ஸீஸரின் கரங்களைப் பற்றினாள் கல்பூர்னியா; தான் நனவுலகிலிருப்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பின்பே, நெடு மூச்செறிந்தவாறு ஸீஸரின் ஏந்திழை கல்பூர்னியா, பேசத் துவங்கினாள்.

ஸீஸர், பாம்பே குமாரர்களை வென்று, திரும்பியதும் அவன் நண்பர்களில் முக்கியமான இருவர் அவனது வெற்றிப் பெருமிதம் கண்டு, பொறாமை தாங்காமல், அவனை ஒழித்து அதிகாரத்தைத் தாங்கள் பெறச் சதி செய்யலாயினர். அவர்கள் முறையே புரூட்டஸ், காஷியஸ் என்னும் இருவராவர். நேர்மையாளன் ஸீஸர், நண்பர்களின் நயவஞ்சகத்தை யுணராமலிருந்து வரும் போது......

கல்பூர்னியா ஒரு பயங்கரக் கனவு கண்டாள். ரோமாபுரி மாவீரனும் தன் ஆருயிர்க் காதலனுமான ஸீஸரின் உயிருக்கு ஆபத்து நேரவிருப்பதாகக் கனவு கண்டு விட்டாள் கல்பூர்னியா. ஸீஸர் உடலினின்றும் ரத்தம் பீறிட்டுக் கொண்டு வருவதாகக் கனவு நிகழ்ச்சி சித்தரித்தது. பதறி எழுந்த அவள், தன் பதியிடம் தான் கண்ட கனவைக் கூறினாள். கனவின் நிகழ்ச்சிகளும், நடக்கவிருக்கும் சம்பவங்களும் ஒன்றுக்கொன்று இணையாக இருப்பதையுணர்ந்த அவள், மறு தினம் ரோமாபுரி ஸெனட்டுக்கு அதிகார பீட மேற்கும் விஷயமாகச் செல்லவிருக்கும் ஸீஸரை, போகாமலிருக்கும்படி வேண்டிக் கொண்டாள் மன்றாடிக் கேட்டாள். ஆனால், ஸீஸர்...?

ஸீஸர் அஞ்சா நெஞ்சம் படைத்தவன், தர்க்கவாதி. மூடநம்பிக்கைகளில் பற்றற்றவன். இத்தகையோனைக் கணவனாகப் பெற்ற கல்பூர்னியா, அவனுக்கு நேர் எதிரிடை. மிகவும் கோழை நெஞ்சம் படைத்தவள்; மெலிந்த சரீரம் உடையவள்; மிகவும் மென்மையான குரலைப் பெற்றவள். ஸீஸர் அவளைப் பெயரளவில் மனைவியாக எண்ணினானே யொழிய, அவன் வேறொரு பெண்ணின் மையலில் சிக்கியிருந்தான்.

கல்பூர்னியா கனவுகண்டு, கதிகலங்கிய வேளையில், அவள் கனவைக்கேட்ட ஸீஸர் பரிகசித்துப் பேசினான். அவள் பேதமை கண்டு அவளைக் கேலிசெய்தான். முடிவில், அவள் விருப்பப்படி தான் நடக்க



இயலாது என்று மறுத்துரைத்தும் விட்டான்.

கல்பூர்னியா கதறினாள்; பதறினாள்; துடிதுடித்தாள்; ஸீஸரின் பாதங்களைப் பற்றிக்கொண்டு மன்றாடினாள். அஞ்சா நெஞ்சனின் இரும்பு மனம், அணுவளவும் கரையவில்லை.

கல்பூர்னியாவைக் கதற விட்டு விட்டு, அவள் கனவை நையாண்டி செய்து கொண்டே, ரோமாபுரி ஸெனட்டுக்கு விரைந்தான் ஸீஸர்.

ஸீஸர்... வெற்றி வீரன்தான்! ஆனால், அன்று அவனை ஏனோ வெற்றித் தேவதை பின் தொடர மறுத்துவிட்டாள். பலம் மிகுந்த யானையும், வஞ்சகர் சூழ்ச்சியறியாமல், அவர்கள் வெட்டிய குழியில் விழுவதைப்போல், மாவீரன் ஸீஸரை, நண்பர்கள் உருவில் நடமாடியபுரூட்டஸும்-காஷியஸும்-நயவஞ்சகமாகத் தாக்கிக் கொன்றுவிட்டனர்! மரணத் தறுவாயில், மாவீரன் ஸீஸர், தன் நண்பனாகஇருந்து, நயவஞ்சகனாக மாறிய புரூட்டஸைக் கேட்ட கேள்வி, அந்தப் பதவிப் பித்தனின் நெஞ்சிலும் ஓரளவு பரிதாபத்தை உண்டாக்கியிருக்க வேண்டும். ''புரூட்டஸ்! நீயுமா இந்த மிருக வெறிக்குப் பலியானாய்?...'' புரூட்டஸ் ஒரு விநாடி பேதலித்து நின்றான்.

கனவு கண்டே கதிகலங்கிக் கதறின கல்பூர்னியா. இந்த நிஜ நிகழ்ச்சியைக் கேட்டபின் எவ்வாறு துடித்திருப்பாள் என்பதை மனித நெஞ்சு படைத்த எவருக்கும் விவரிக்கத் தேவையில்லை.

கல்பூர்னியா கண்ட கொடிய கனவு, பயங்கரக் கனவு முடிவில் பலித்தே விட்டது.

ரோமாபுரி சரித்திரத்தில் கனவுக்குக் கொடுக்கப் பட்டுள்ள மகாத்மியத்தை, மகாகவி ஷேக்ஸ்பியர், தன் நாடகமான 'ஜூலியஸ் ஸீஸ'ரில் இத்தனை அழகுற விளக்கியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களில் 'ஐம்பெருங் காப்பியங்கள்' என்னும் தொகுப்பைச் சேர்ந்தது 'ஜீவக சிந்தாமணி.'

'ஜீவகசிந்தாமணி' ஆசிரியர் திருத்தக்கதேவர் அதன் கதாநாயகனை சச்சந்த மன்னனையும், அவன் மனைவியையும், ஸீஸர்-கல்பூர்னியா போன்றே சிருஷ்டித்துள்ளார்.

சச்சந்தனின் மனைவியும் கல்பூர்னியா கண்ட பயங்கரக் கனவு போல் ஒரு கனவு கண்டாள் பல கிளைகளுடன் கூடிய மாபெரும் மரம் ஒன்று வேரற்று விழுவது போல் அவள் கனவு கண்ட நிகழ்ச்சியைத் தன் கணவனிடம், மெய்சிலிர்க்க விவரித்தாள். சச்சந்தன், ரோமாபுரி வீரன் ஸீஸரைப் போல், அலட்சிய மனோபாவம் கொண்டவனல்ல. ஆகவே தன் துணைவி கண்ட கனவின் விபரீதக் கருத்தை உணர்ந்த அவன், கர்ப்பவதியான அவளைத் தக்கபடி பாதுகாக்க விரும்பி, மயிற்பொறி ஒன்றமைத்து அதன் மூலம் அவளை எவ்வித ஆபத்துக்கும் உள்ளாகாமல் இருக்க ஏற்பாடு செய்தான்.

இதிலிருந்து 'கனவு' பலிதமானால் அதன் விபரீதத் தன்மையிலிருந்து விடுபட, முன்னேற்பாடாகச் சில முறைகளைக் கையாளும் பழக்கம் பண்டைக்காலம் தொட்டு இருந்து வருவதை நாம் கண்டுவருகிறோம்.

ரஷ்ய இலக்கியமேதை டால்ஸ்டாய் 'கனவின் பயங்கரத்தன்மை'யைத் தன் சிறுகதை ஒன்றின் மூலம் எத்துணை அழகுற விளக்குகிறார்!

ஒரு வியாபாரி; அவன் வாரந்தோறும் தன் நகரை அடுத்த ஊரி

லுள்ள சந்தைக்கு வியாபார நிமித்தம்சென்றுவருவதுவழக்கம். அதேபோல், ஒருநாள் அவன் கிளம்ப விருக்கும்போது, அவன் மனைவி அவனைப் போகவிடாமல் தடுத்தாள்.

வியாபாரி, தன் மனைவியிடம் தன்னை அவள் தடுப்பதன் காரணம் கேட்டான். அதற்கு அவள், ''நீங்கள் சந்தைக்குக் கிளம்பும் போது தற்போது இருப்பதைப் போல் இளம் வயதாகவே காணப்படுகிறீர்கள். ஆனால், சந்தையிலிருந்து திரும்பும்போது தலை நரைத்த கிழவனாகக் காட்சியளிக்கிறீர்கள். இப்படி நான் ஒரு பயங்கரக் கனவு கண்டேன். ஆகவே நீங்கள் வியாபாரத்திற்கு இன்று வெளியூர் போக வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டாள்.

ஸீஸரைப் போல் இந்த வியாபாரி தன் இல்லாளின் கனவை முழுதும் அலட்சியப்படுத்திப் பேசி விடவில்லை. ஆனால், அதே சமயம் சச்சந்த மன்னனைப் போல் அவள் கனவுக்கு அதி முக்கியத்துவம் கொடுத்து விடவுமில்லை.

மனைவியின் இன்முகம் நோக்கி, அவளைக் கலங்காதிருக்கும்படி கூறி, வீண் பிரமை கொள்ள வேண்டாம் என்றான். அதன் பின்பு வியாபார நிமித்தம் வெளியூர் கிளம்பினான். அவன் மனைவி அவனுக்குப் பிரியாவிடை கொடுத்தனுப்பினாள்.

'கெட்ட கனவுகள், நடக்கவிருக்கும் துக்க நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்பு' என்பதை மேதை டால்ஸ்டாய் இங்கு நன்கு விளக்குகிறார்.

வியாபார நிமித்தம் சென்ற வியாபாரி, வழியில் களைப்பாறும் பொருட்டு ஒரு சத்திரத்தில் தங்குகின்றான். களைப்பால் கண்ணயர்ந்த வியாபாரியை விழிப்புறச் செய்கின்றனர் சிலர். விழிப்படைந்த வியாபாரி விஷயம் அறிந்தவுடன், திகைத்து நிற்கிறான்.

அதே சத்திரத்தில் உறங்கிய ஒரு செல்வந்தனை, யாரோ விஷமிகள் கொலை செய்துவிட்டு, ரத்தம் தோய்ந்த கத்தியை, நிரபராதியான இந்த வியாபாரியின் மூட்டைகளில் மறைத்து விட்டனர். வியாபாரியைச் சோதனையிட்ட போது, சந்தர்ப்ப சாட்சியங்கள் ஒத்து வரவே, சட்டம் அவனைக் குற்றவாளியாக்கி, ஜன்ம தண்டனை விதித்து விடுகிறது.

நிரபராதியான வியாபாரி, தன் மனைவி கண்ட துன்பகரமான கனவை நினைவுபடுத்திக் கொண்டு புலம்பினான்.

சிறைவாசம் முடிவடைந்து அவன் வெளிவரும்போது, அவன் இளமை மறைந்து, முதுமை எய்தி, தலைநரைத்துக் காணப்பட்டான். தன் மனைவியையும் குழந்தைகளையும் காண ஓடோடியும் சென்ற அவன் உருவத்தை நினைக்கும் போது, 'சந்தையிலிருந்து திரும்புகையில் வயோதிகனாகத் தலை நரைத்துக் காணப்பட்டதாக', அவன் மனைவி கண்ட விபரீதக் கனவையும் நம்மால் நினைக்காமலிருக்க முடியவில்லை.

இதைப்போல் 'கனவு' நிகழ்ச்சிகளுக்கு முக்யத்துவம் அளித்து, 'கனவு நூல்' என்ற தலைப்பில் ஒவ்வொரு நாட்டிலும் நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ் இலக்கியத்தில் 'கனவுநூல்' தனிச்சிறப்பு



பெற்றுள்ளது. ஆங்கில இலக்கியத்திலும் கனவு நூலுக்குப் பஞ்சமில்லை. மகாகவி ஷேக்ஸ்பியர் தன் ‘ஹாம்லட்’ நாடகத்தில் ஹாம்லட்டின் தந்தை கோரக் கொலை செய்யப்பட்ட விவரத்தை கனவு போன்ற நிகழ்ச்சி ஒன்றைச் சித்தரித்து, அதனை கனவா நினைவா என்று சந்தேகிக்கும்படி ஆவிரூபமாக சிருஷ்டித்து ஹாம்லட்டைத் தவிக்க விடுகிறார்.

இத்தகைய கனவுகள் எப்படிச் சம்பவிக்கின்றன என்பதை ஆராய முற்பட்டால், அனுபவ வாயிலாகக் கூறும் உண்மைகளும், மனோ தத்துவ முறைப்படி கூறும் உண்மைகளும் அதிக முரண்பாடுகளின்றி, ஒன்றுக்கொன்று ஒற்றுமையாகவே இருந்து வருகின்றன.

எண்ணத்தின் பிறப்பிடம் மனம். இந்த மனத்தின்கண் எழும் எண்ணமே பிறகு செயலாகப் பரிணமிக்கிறது. உள் மனத்தின்கண் உறையும் எண்ணங்கள், மனத்திலேயே சரியாகப் பக்குவமடையாமல் இருக்கும் நிலையில் தான் மனக்குழப்பம் உண்டாகிறது என்பதை அனுபவ பூர்வமாகவும், ஆராய்ச்சி மூலமும் கண்டறிந்து கூறுகிறார் பிரபல உளநூல் வல்லுநர் பிராக்ஸி ஸெலோன் என்னும் ஜெர்மானியர்.

‘‘இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் மன நிம்மதியுடனும், மனதில் எத்தகைய எண்ணங்களுக்கும் இடமளிக்காமல் இருக்கவும் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். உணவு உட்கொண்டவுடன் படுக்கைக்குச் சென்றால், உணவு சரிவர ஜீரணிக்கப்படாததால், கனவுகள் தோன்றலாம். அவை கூடிய மட்டும் பயங்கரச் சொப்பனங்களாகவே இருந்து வருகின்றன. இரவில் படுக்கைக்குச் செல்லும்போது அளவுக்குமேல் நீர் அருந்துதல் கூடாது. சிறந்த அறிஞர்களின் உயர்ந்த கருத்தடங்கிய நூல்களைப் படித்தபின், தூக்கம் வரும்போது படுக்கைக்குச் சென்றால், நிச்சயம் துர்ச் சொப்பனங்களைத் தவிர்க்கலாம். நான் கூறுவது யாவும் என் அனுபவம் மூலம் நான் கண்ட உண்மைகள்’’ என்று ஜப்பானியப் பெண்மணி ஒருத்தி ‘ஜப்பான் டைஜஸ்ட்’ என்னும் பத்திரிகையில் குறிப்பிடுகிறாள். அவள் கூறும் உண்மைகள் கருத்துக்குப் பொருத்தமானவையே. இவற்றை நாமும் அனுபவ வாயிலாக அறிந்து வருகிறோம்.

இனி நாம் கண்டு வரும் கனவுகளையும் அவற்றின் இயற்கைத் தன்மைகளையும், அவை முன்னறிவிப்பாகக் கூறும் உண்மைகளையும் ஓரளவு ஆராய முற்படுவோம்.

கனவு சம்பந்தமாக நடத்தப்பட்ட சிறந்த ஆராய்ச்சிகளுக்குப் பின்பே இந்த உண்மைகளை ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். அவரவர்கள் அன்றாடம் கண்டு வரும் கனவுகளுக்கோ, அல்லது அவ்வப்போது காணும் விசித்திரக் கனவுகளுக்கோ உரிய விளக்கங்களை இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ள குறிப்புகளிலிருந்து கண்டறியலாம்.

ஸீஸரின் முடிவை, கல்பூர்னியாவின் கனவு உடனே பிரதிபலித்து விட்டது. ஆனால், அதே போல் முதல் நாள் இரவு காணும் கனவு, மறு நாள் காலைக்குள் பலித்தேயாக வேண்டும் என்ற நிச்சயம் கிடையாது.

நாம் காணும் கனவுகள் பலிதமானால், அக்கனவுகளின் பலன்கள் என்னவாக இருக்கலாம் என்பது பற்றி ஓரளவு இங்கு குறிப்பிடப்படுகிறது.

நீங்கள் இத்தகைய கனவு கண்டால்...பலன்கள்?

ஓடும் ரயில்:— வாழ்வில் முன்னேற்றம்.

ஆடைகள்:— புதியனவாயின் உத்தியோக உயர்வு, பழையவையாயின் உத்தியோகத்தில் குழப்பமான நிலை.

மணல்:—தெளிவற்ற மனோபாவம்.

நாணயங்கள்:— காதல் நினைவுகளில் வெற்றி.

குதிரை அல்லது எருது:— எதிரியின சூழ்ச்சிக்கு அஞ்சாமல் தப்பிவிடுதல்.

அழகிய பெண்:— தயாள குணம் காரணமாக வெற்றி.

அழகிய ஆண்:— நண்பர்கள் ஆதரவு.

வயது முதிர்ந்த கிழவன்:—பெரியோர் புத்திமதிக்கு மதிப்பு வைக்கவேண்டும்.

திருடன் அல்லது எதிரி:—தம் குணமும், செயலும் பிறரால் விரும்பப்படாதவை.

போலீஸ்காரன்:— தன் செயலில் தனக்கே ஒருவித வெறுப்பு.

நாய்கள்:— அடக்கியாளுவதைவிட அன்பினால் ஆளுதல் சிறந்தது என்பதை விவரிக்கிறது.

ஜன்னல்:— சுய முயற்சியால் வெற்றி பெறலாம்.

பாம்புகள்:—வியாதி குணமாவதன் அறிகுறி.

ஜலம்:— உணர்ச்சி வசப்படும் சுபாவத்தால் விளையும் நன்மை தீமைகள்

மரம்:— நிலைபெற்றிருந்தால் தீர்க்கமான அறிவு. விழுவதுபோல் காட்சி தந்தால், வாழ்வில் ஒரு திருப்பம்.

இவ்விதக் கனவுகளை அர்த்தமற்றவை என்று கூறுவோரும் உண்டு. ஆனால், இவற்றைச் சிறந்த அறிகுறிகளாகக் கொண்டு, பலனடைந்தவர்களைப்பற்றி விவரிப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

பழங்காலங்களில் புதியநாடுகள் கண்டு பிடிப்பதிலும், பிறநாடுகளின் மேல்படையெடுத்துச் செல்வதிலும், விஞ்ஞான ரீதியான புதிய ஆராய்ச்சிகளுக்கும் கனவில் காணும் சம்பவங்களையே உருவகப் படுத்தி, அவற்றையே அறிகுறிகளாகக்கொண்டு, செயலாற்றி வந்தனர். சித்திரக்காரர்களுள் மிகச் சிறந்தவரான லியனர்டோடாவின்ஸியும் மகாகவி மில்டனும் கனவு நிகழ்ச்சிகளை முறையே ஓவியமாகவும், கவிதைகள் நாடகமாகவும் தீட்டி மகிழ்ந்தவர்களாம். பணம் கிடைப்பதாகக் கனவு காண்பது ஒருநல்ல அறிகுறி. மிகுந்த உழைப்பின்றி, எளிய முறையில் பணம் கிடைக்க மார்க்கமிருப்பதைக் காட்டும் அறிகுறியாகும் இக்கனவு ஆனால், கையிலிருந்த பணத்தை இழந்துவிட்டதாகக் காணும்கனவு ஒரு துர்ச்சகுனம் என்று கருதப் படுகிறது.

நாம் தனித்திருந்து உணவு உண்பதாகக் கனவு கண்டால், நம்மிடையே பரிதாபப்படும் தன்மை குறைவு என்பதை இக்கனவு பிரதிபலிக்கிறதெனலாம். கனவில்,பால் அருந்துவதாகத் தோன்றினால், முக்கிய விஷயமாக ஈடுபட்டிருப்பதில் வெற்றி நிச்சயம் என்பதே அறிகுறி.

இயற்கைக் காட்சிகள் கனவில் தோன்றுவதுண்டு. அழகிய நந்தவனம், கண்கவர் காட்சிகளாகத் தோன்றினால், அடுத்து வரவிருக்கும் திருமணம், உல்லாசப் பிரயாணம் போன்ற சந்தோஷகரமான நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்பாகும் இருளடைந்த காடுகள், மயானம் போன்ற பகுதிகள் கனவில் தோன்றினால், அவை நடக்க விருக்கும் துக்க நிகழ்ச்சிகளின் அறிகுறியாகும். மலைகள் கனவில் தோன்றினால், மிகப்பெரிய கஷ்டமொன்றை நாம் சமாளித்தாக வேண்டும் என்பதையே குறிக்கிறது.

பாலங்கள் கனவில் தோன்றுவதை எகிப்தியர்களும் இந்தியர்களும் ஒரேமாதிரி கருதுகிறார்கள். தான் ஈடுபட்டுள்ள முக்கிய விஷயமொன்றில் மிகுந்த முன் ஜாக்கிரதை தேவை என்பதையே இந்தக் கனவு வலிவுறுத்துகிறது. புதிய நபருடன் வியாபார விஷயமாகத் தொடர்பு கொள்ளவும், தொலைவிலுள்ள நபருடன் தொடர்பு கொள்ளவும் சந்தர்ப்பம் வரவிருப்பதையும் குறிக்கிறது இக்கனவு.

கனவில் பிரயாண நிகழ்ச்சிகள் தோன்றுவதுண்டு. மனதின் கண்ணுறையும் எண்ணங்களே கனவாகத் தோன்றுகிறது என்ற உண்மை அடிப்படையாக இருந்து வருவதால், பொதுவாக ரயில் பிரயாண நிகழ்ச்சிகள் சர்வசாதாரணமாகக் கனவில் தோன்றலாம்.

ஓடும்ரயிலில்பிரயாணம்செய்வது வெற்றிப் பாதையில் நாம் செல்லுகிறோம் - ஆகவே ஈடுபட்டுள்ள முக்கிய விஷயத்தில் வெற்றி கிட்டும் என்பதே இதன் அறிகுறி. ரயிலைத் தவற விட்டதாகக் கனவு கண்டால், தனக்கு கிட்டிய சிறந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் நழுவ விட்டு விட்டதையே இது குறிப்பிடுகிறது.

கனவில் கப்பல் பிரயாணம் நல்லதென்றே கருதப்படுகிறது. விமானம் மூலம் பிரயாணம் செய்வதாகக் கனவு கண்டால், முக்கிய பிரச்னை ஒன்றுக்கு முடிவு தெரியாத நிலையிலிருந்து, அதி விரைவில் அந்தப் பிரச்னை சாதகமாக முடிய விருப்பதையே குறிக்கிறது.

கனவில் வர்ணங்கள் பிரதிபலிப்பதுண்டு. சிவப்பு வர்ணம் அன்பு, கருணையுள்ளம் இவற்றையும், கருநீலம் தெளிவான சிந்தனையையும் ஆராயும் திறனையும், வெளிர் நீலம் சமாதான மனோபாவத்தையும், மஞ்சள் நிறம் பொறுமையுள்ளத்தையும், வெண்மை நேர்மையுள்ளத்தையும், கருமை நிறம் வெறுப்பு, துக்கம், நேர்மையற்ற தன்மையையும்பிரதிபலிக்கின்றன

வீடுமாற்றுவதாக கனவு கண்டால் பிடிவாத அபிப்பிராயம் ஒன்றை நாம், சந்தர்ப்பத்திற்கேற்ப மாற்றிக் கொள்ளுவதையே குறிப்பிடுகிறது இக்கனவு.

கனவில் சிங்கம் தோன்றினால் திடச்சித்தம், எதிரிக்கு அஞ்சாத் தன்மையையும், கரடி தென்பட்டால் பெண் உறவையும் குறிப்பிடுகிறது.

கனவில் ரத்தவெறி மிகுந்த புலி பதுங்கி வருவதுபோல் கண்டால், நயவஞ்சகர்கள் நம்மைத்தாக்க சந்தர்ப்பம் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் என்பதையே காட்டுகிறது. யானை, சிங்க சொப்பனம் கண்டால் இறந்து விடும் என்று நம்பப்படுகிறது.

பறவைகள் கனவில் தோன்றுவதுண்டு. ஒருபறவை வீட்டினுள் அகப்பட்டுக் கொண்டு, போகவழி தெரியாமல் தவிப்பதாகக் கனவு கண்டால், நாம் ஒரு குழப்பமான நிலையில் சிக்கிக்கொண்டுள்ளதையே பிரதிபலிக்கிறது இக்கனவு.

கனவில் ஒரு பிணம் தென்பட்டால்நெருங்கிய உறவோ,நட்போ துண்டிக்கப்பட விருப்பதையே இது குறிக்கிறது. இவ்வாறு கனவு சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேனாட்டு அறிஞரான ஜி. டிரென்டின்ஜர் பாகுபடுத்தி, கூடியமட்டும் எளிதான விளக்கங்களுடன் குறிப்பிட்டிருப்பதை ஆதாரமாகக் கொண்டே இக்கட்டுரையில் அவற்றின் சாராம்சம் கொடுக்கப்பட்டுள்ளது.

தவிர, மனதிலுள்ள அபிலாஷை பூர்த்தி பெற வேண்டுமானால், அதையும் நாம் குறிப்பிடும்போது, ‘என் கனவு பலிதமாக வேண்டும்’ என்று குறிப்பிடுகிறோம்.

இந்தியா சுதந்திர நாடாக மாற வேண்டும் என்பது தேசப்பிதா காந்திஜியின் நெடுநாளைய கனவாக இருந்து, அவர் வாழ்விலே பலித்தும் விட்டது.

‘புவனம் வியந்திட அமுதத் தமிழினில் நவ நவமாய்க் கவி அருளிய புனிதனான பாரதியின் தவமும்பலித்து, கனவும் தற்போது பலித்துவிட்டது. ஆம், பாரதபூமி அடிமைத் தளையிலிருந்து விடுபட்டிருப்பதையே இங்கு குறிப்பிடப்படுகிறது. ★



தாஜ் மஹால்

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸ்

தாஜ் மஹால் என்னும் பதம், 'அரண்மனைகளுக்கு ஒரு கிரீடம்' என்று பொருள்படும். உலகத்திலுள்ள அரசமாளிகைகள், கூட கோபுரங்கள் எல்லாவற்றிலும் மிகவும் சிறந்ததாய் ஆக்ரா நகரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஓர் அலங்கார மண்டபமாகும் அது. அம்மண்டபமானது, ஷாஜஹான் என்னும் மொகலாயச் சக்கரவர்த்தியின் மனைவியான மும்தாஜின் கோரியாகும்.

மும்தாஜ் செமானி என்பவள், பெயர்பெற்ற நூர்ஜஹானின் சகோதரனான அஸப்கானுடைய மகள். அவள் தனது அத்தையைப்போல், பெருங் கீர்த்தி பெற்றவள் அல்லள், ஆயினும், அழகிலும் நாகரீகத்திலும் அவளிலும் குறைந்தவள் அல்லள். 'தன் காலத்தில் மிகுந்த பெருமை வாய்ந்தவள்' என்பது அவள் நாமத்திற்குப் பொருள். அவளுக்கு, ''மும்தசா மஹால்'' (அரண்மனையில் மிகச் சிறந்தவள்) எனவும் ஒரு பெயர் உண்டு. அரசாங்க விஷயங்களில் பிரவேசியாமல் இருந்தாலும், அவள் தன் நாயகனை முற்றிலும் தன் வசப்படுத்திக் கொண்டிருந்தாள். அவளை

யன்றி ஷாஜஹான் வேறொரு பெண்ணையும் மணம் செய்து கொள்ளாமையே அதற்குத் தக்க ஆதாரமாகும். மற்ற மொகலாய அரசர்கள் யாவரும் மகா சக்கரவர்த்தியாகிய அக்பரும், அநேக மனைவியரை விவாகம் செய்துகொண்டவர்கள். ஆனால், ஷாஜஹானோ, தமது அன்பிற்குரிய அரசியைத்தவிர, வேறொரு மனைவியை அவள் காலத்தும் அவளுக்குப் பின்னும் மணந்து கொள்ளவில்லை என்பது வெள்ளிடைமலை.

ஷாஜஹான் மும்தாஜ் செமானியைத் தாம் சக்ரவர்த்தியாகு முன்னரே மணந்திருந்தார். அவள் பெயரை மும்தாஜ் மஹால் என்று மாற்றி, டில்லி மகா சக்ரவர்த்தி யானவுடன், மிக்க ஆடம்பரத்துடன் தம் விவாக உற்சவத்தை நிறைவேற்றினார். பதினன்கு வருஷ காலம் அவள் அவரிடம் மிகுந்த பக்தியுடன் வாழ்ந்திருந்தாள். கீர்த்தியிற் சிறந்தவளான நூர்ஜஹானைப்போல், அரசியல் நடத்த அவளுக்குத் திறமையுமில்லை; அதில அவ்வளவு விருப்பமுமில்லை. ஆயினும் அவள் குடும்பத்திலும் அரண்மனையிலுமுள்ள அனைவரும், அவளது குணத்தினல் அவளிடத்தில் அதிக அன்புள்ளவர்களாய் இருந்தனர். எல்லோரும் அவளைப் புகழ்ந்து பாடினர்கள்.

மும்தாஜ் மஹாலுக்கு தாரா, ஷூஜா, ஔரங்கசீப், முராத் என்னும் நான்கு புத்திரர்களும் இரண்டு புத்திரிகளும் பிறந்தார்கள். அழகிற் சிறந்த ரூபவதியும் மிக்க திறமைசாலியுமான மும்தாஜ் மஹால் இறக்கும்போது, ஷாஜஹானைத் தன் பக்கத்தில் அழைத்து, "நான் உம்மைப் பிரியுங்காலம் நெருங்கி விட்டது. சாகுமுன் உம்மிடம் இரண்டு வரங்கள் கேட்கிறேன். நீர் வேறு விவாகம் செய்து கொள்ளலாகாது என்பது ஒன்று; என் காலத்தில் என்னிடம் மிகவும் அன்பாக இருந்தீர், அதுபோல, நான் இறந்த பிறகும் அப்படியே உமது அன்பு என்மேல் இருக்க வேண்டும். மற்றொரு வரமாவது, என் பெயர் இப் பாரத பூமியில் என்றும் நிலை பெற்றிருக்கும்படி என் பிரேதக் குழியின்மேல் அலங்காரமான கோரியொன்று கட்ட வேண்டும் என்பதே! இவை இரண்டுமே நான் விரும்பும் வரங்கள்" என்று கூறினள். ஷாஜஹான் அவள் கேட்டபடி செய்வதாக வாக்களித்தது மன்றி, அவ்வாக்கையும் அன்புடனே நிறைவேற்றினர். அவளுக்குப் பின் அவர் வேறு விவாகம் செய்துகொள்ளவில்லை. அயலிடத்து ஸதிரீயைக் கண்ணல் பார்த்ததுமில்லை. மறுவிவாகமென்ற சிந்தனையே அவருக்கு இல்லாமற் போயிற்று. "ஆன்மாவுக்கு ஒரே கடவுள்; சூரியனுக்கு ஒரே சந்திரன்; ஷாஜஹானுக்கு ஒரே மனைவி" என்று அவர் அடிக்கடி தன் மந்திரி பிரதானிகளிடம் சொல்லிக்கொள்வார்.

இந்த அழகிய தாஜ் மஹாலைக் கட்டும் பணியில் ஈடுபட்டு, சிறந்த முறையில் இதனை அமைத்தவர்கள் பெயர் சரித்திர ஆசிரியர்களால் இன்னும் தீர்மானிக்கப் படவில்லை. ஜெரோனிமோ விரோனியோ, ஆஸ்டின் டிபார்டெக்ஸ், ஹுஸ்தாத் இஸா என்னும் பலருடைய வேலைத்திறனக இருக்கக் கூடும் என்றே நம்பப்படுகிறது.

ஆஸ்டின் டிபார்டெக்ஸ் சிறந்த பிரஞ்சு பொற்கொல்லன். அவனுடைய முழுத் திறமையை ஷாஜஹானின் மயிலாசனம் நமக்கு நிரூபிப்பதால், அவனை தாஜ் மஹால் கட்டிட வேலையிலும் ஈடுபடுத்தியிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

தாஜ் மஹாலின் உச்சியிலுள்ள கும்பம் போன்ற பகுதி மிகுந்த வேலைப்பாடமைந்தது. அதை அமைக்கும் பொறுப்பை ஷாஜஹான் பார்டெக்ஸிடம் தான் விட்டிருந்தாராம். அவன் ஏற்கனவே தயாரித்திருந்த மயிலாசனத்தின் மூலம் தன் திறமையை நிரூபித்திருக்கவே, ஷாஜஹன் அவனை ஒரு சிறந்த கட்டிட நிர்மாணக் கலைஞன் என்ற அளவில் வெகுவாக கௌரவித்து வந்தார்.

ஹுஸ்தாத் இஸா என்பவரின் வேலைத்திறனும் தாஜ் மஹாலில் வெகுவாகக் காணப்படுவதால், இந்தியாவிலும் இத்தகைய கட்டிட நிர்மாணக்கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இருந்திருப்பதை விளக்குகிறது.

மனைவி இறந்த துக்கம் மாறியவுடன், பாரதத்தில் 'இதற்கு இணையானதும், இவ்வளவு பணச்சிலவு பிடித்ததுமாக வேறொன்று இல்லை' என்று சொல்லத்தக்க பெருமை வாய்ந்த கோரியைத் தமது மேற்பார்வையிலேயே கட்டுவித்தார் ஷாஜஹான். தாஜ் மஹால் அதி விசித்திர வேலைப்பாடுள்ளது. வெண்மையான கல்லினால் அமைந்தது. பார்வைக்கு யாதொரு குறைவு மின்மையால், இன்றைக்கும் அது நேற்றே கட்டி முடிந்தது போலத் தோன்றும். வெண்கல் ஊற்றுக்கள் சூழ்ந்த நந்தவனங்களின் நடுவிலே, அது, ஷாஜஹான் பெருமைக்கும், அவர் மும்தாஜ் மஹாலிடத்தில் வைத்திருந்த அன்பிற்கும், பேரறிகுறியாய் நிலவுகின்றது. எங்கே கொஞ்சம் அருகிலிருக்கும் எழில் வாய்ந்த தாஜ் மஹால் படத்தைப் பாருங்கள்; இருபதினாயிரம் வேலைக்காரர்கள் நின்று, பதினேழு வருஷ காலம் அதனைக்கட்டி முடித்தார்களாம்! அதற்குச் செலவான பணம் மூன்று கோடி வெண் பொற்காசுகள் என்பர், அந்தக்கோரியிலேயே ஷாஜஹானது பிரேதமும் அடக்கஞ் செய்யப்பட்டது. ஷாஜஹானும் மும்தாஜ் மஹாலும் புதைக்கப்பட்ட இடங்களில் விளக்குகள் இடைவிடாமல் எரிந்து கொண்டிருக்கும். இதில் காணப்படும் சித்திர வேலைப்பாடுகளும் சிற்பக்கலை எளிய நுட்பங்களும் இன்றைய என்ஜினியர்களை மலைக்க வைக்கின்றன; மேனாட்டாரோ வெனில் மூக்கில் விரலை வைக்கின்றனர்; நீங்கள் டில்லி சென்றால், அவசியம் ஆக்ரா சென்று கண் கவரும் இக்கோரியைக் கண்டு களியுங்கள்.

யமுனை நதி தீரத்தில் அழகுற விளங்கும் இந்த தாஜ் மஹால், உலகத்தின் ஏழு அதிசயங்களுள் ஒன்றெனக் கருதப்படுகிறது. ஷாஜஹான் ஆடம்பரப் பிரியர்; அத்துடன் அதன் பொருட்டு அவர் செலவிட்ட பொருள்கள், அவரது முன்னோர்கள் எவரும் செலவிடாத தொகையாகும். மயிலாசனமும், தாஜ் மஹாலும் அவரது ஆடம்பர குணத்தை இன்று வரை பிரதிபலிக்கின்றன.

பௌர்ணமியன்று தாஜ் மஹாலின் அழகைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். ★

கடல் தரும் செல்வம்

எம். கே. ஸ்ரீனிவாஸன்

ஆழ்கடல் தன்னை நம்பி வாழ்வோருக்கு அளித்து வரும் செல்வங்களுள் ஒன்றான முத்தின் சிறப்பியல்பு இக்கட்டுரை வாயிலாக விளக்கப்படுகிறது. இந்திய முத்துக்களை ரோமர்கள் வெகுவாக மதித்து வந்துள்ளனர்.

நீலக்கடல் நமக்கு அளித்து வரும் செல்வங்களில் முத்தும் ஒன்று. முத்தின் மறு பெயர்கள், தரளம், மௌத்திகம், நாவி, திரட்சி, மணி, முத்தாபலம், ஆரம், நித்திலம், முத்தம் என்பனவேயாம். முத்து, நவரத்தினங்களில் சேர்ந்ததாயினும், பவளம் தவிர, மீதி ஏனைய ஏழு இரத்தினங்களைப் போல், சுரங்கங்களினின்றும் வெட்டி எடுக்கப்படும் கல் அன்று. இஃதொரு கடற்படு திரவியம் என்பது "திரைகடற் படுவஉப்பு, செய்ய வெண் பவளம்வெண் முத்திரைத்தெழும் சங்கக் கோலை இவ் வைந்தும் என்னலாமே" என்பதால் உணரலாம்.

ஆயினும் பரஞ்சோதி முனிவர், "முத்து தலசம் (நிலத்திற் பிறப்பது) என்றும், சலசம் (நீரிற் பிறப்பது) என்றும் இரு வகையாக்கி, சங்கு, மேகம், மூங்கில், பாம்பின் தலை, பன்றிக் கொம்பு, யாளி அல்லது சிங்கத்தின் புயம், பதிவிரதைகளின் கழுத்து, கொக்கின் கழுத்து, சிப்பி, மீன் தலை இவ்விடங்களில் முத்து பிறக்கிறதென்று, திருவிளையாடற் புராணத்தில் கூறியிருக்கிறார்.

இவற்றுள் சிப்பி, சங்கு, முகில், மீன் இவற்றினின்றும் உண்டாவன, நீரின் சம்பந்தமுடையன. மற்றவை தலசமாகும். சிப்பியினின்றும் முத்து எடுக்கப்படுவதே பண்டிதர், பாமரர் பலர், கேள்வி மூலமாகவும், நேரிலும் அறிந்த விஷயமாதலின், சிப்பி முத்தைப் பற்றியே இப்பொழுது ஆராய்வோம்.

'சிப்பி' என்பது முத்துச் சிப்பி என்று கூறப்படும் ஒரு வகை ஜலசரம். இச்சிப்பிகளின் சரீரத்தினிடையில் மிருதுவான தோல் இருக்கும். இத்தோலைச் சுற்றி இருமருங்கிலும் மெல்லிய தோலுக்கும் கடினமான ஓட்டுக்கும் இடையே ஒரு வகைப் பொடி மணல் புகுந்து அவற்றை உபத்திவரப் படுத்தும். அப்பொழுது அவை எரிச்சல் பொறுமல் அப்படியும் இப்படியும் புரளும். அவ்வாறு புரளுகையில் சுண்ணும்புத் தன்மையுள்ள ஒரு வகை நீர் வெளிப்பட்டு, முற்கூறிய நுண் மணலை கலந்து கொள்ள, அதுவே முத்தாகும் என்பர். இம்மர்மத்தை சீனர்களே முதல் முதல் அறிந்தவர்களென்றும், முத்து அகப்படாத காலங்களில் கூட, அவர்கள் சிப்பிகளைப் பிடித்து, மணலை அவற்றின் மெல்லிய தோலுக்கும் ஓட்டுக்கும் இடையே புகுத்தி, அவற்றிற்கு எரிச்சல் உண்டாக்கி, முத்தினச் செய்து, பெருத்த லாபம் அடைந்து வந்தார்களாம்.

சிப்பிகளின் சரீரத்தின்றும் அவற்றின் முட்டைகள் வெளிப்படாக் காலத்து, அம்முட்டைகளும் மேலே கூறிய கசியும் நீரால் மூடப்பட்டு, முத்தாக மாறுவதுண்டு.

வெண் முத்தீனும் சிப்பிகள் விசேஷமாய் இலங்கையில் மன்னார் குடாவிலும், இந்தியாவில் தூத்துக்குடி அருகிலும், அரேபியாவில் பாரசீகக் கடலிலும், போர்னியூவுக்கடுத்த ஸூலு தீவுகளிலும், கருமுத்தீனும் சிப்பிகள் கலிபோர்னியாவிலும், மஞ்சள் முத்தீனும் சிப்பிகள் பனமாக் கால்வாயிலும், கபில நிற முத்தீனும் சிப்பிகள் மெக்ஸிகோவிலும் காணப்படுகின்றன.

கடலில் மிக்க ஆழத்தில் முத்துச் சிப்பிகள் கூட்டங் கூட்டமாகப் பாறைகளில் தொத்திக் கொண்டிருக்கும் முத்துக்குளிப்பவர்கள் கரைக்கு எட்டுமைல் தூரம் வரை படகுகளில் கூட்டம் கூட்டமாகச்செல்வார்கள். ஒவ்வொரு படகிலும் மாலுமியைத்தவிர, இருபது பேர்கள் இருப்பார்கள். இவ் விருபது பேர்களில், பத்து மனிதர்கள் படகு ஓட்டவும், முழுகுவோரைக் குறித்த காலத்தில் தூக்கியெடுக்கவும் நியமிக்கப் பட்டவர்கள். எஞ்சிய பதின்மரும் குளிக்காரர்கள். இவர்கள் ஐவர் ஐவராக மாறிமாறி வேலை செய்வார்கள். முழுகுவோர் உடம்பில் விளக்கெண்ணெயைப் பூசிக் கொண்டு, கோவணம் தரித்துக் கொண்டு இறங்குவார்கள். இவர்கள், தாம் எளிதில் இறங்கிச் செல்வதற்கு உதவியாய் நாற்பது இராத்தலுக்குக்குறையாத பெருங்கற்களை உபயோகிக்கின்றனர். ஒவ்வொரு படகிலும் கனமுடைய ஐந்தாறு கற்களேனும் இருக்கும். இக்கற்கள் அடி பரந்தும், நுனி குவிந்தும் கயிறுகள் கோர்க்கத் துவாரங்கள் கொண்டும் இருக்கும். பிறைச் சந்திரன் போல் செதுக்கப்பட்ட கற்களும் உபயோகப்படுவதுண்டு. முழுகும்பொழுது முழுகுவோன், கல் லிற்கட்டப் பட்டிருக்கும் கயிற்றை வலதுகால் விரலினால் பிடித்துக்கொண்டு, இடதுகால் விரலால் தான் எடுக்கும் சிப்பிகளைப் போட்டுக் கொள்ள ஒருவகைவலைப்பையை இறுகப் பிடித்துக் கொள்வான். பின்பு அவன் கல்லில் கட்டப்படாத மற்றொரு கயிற்றையும், கல் கயிற்றையும் தனது வலது கையாற் பற்றிக் கொண்டும், காதில் மெழுகு திணித்துக் கொண்டும், நாசித் துவாரங்களை இடது கைவிரல்களால் இறுக அடைத்துக் கொண்டும் தண்ணீருக்குள் சில சமயங்களில் 100 அடி ஆழம்வரைகூட முழுகுவான். முழுகி அடியிற் சென்றதும், காலில் மாட்டிய வலையை எடுத்து, கழுத்தில் மாட்டிக் கொண்டு, விரைவாகவும், சாதுரியமாகவும் எவ்வளவு சிப்பிகள் அள்ளக்கூடுமோ அவ்வளவையும் அதனுள் அள்ளிப் போடுவான். தடவைக்கு 100 சிப்பிகளுக்குக் குறையாமல் அள்ளுவானும்! அவன் நீரில் மூழ்கி நிற்பதெல்லாம் 120 வினாடி யிருக்கும். மூன்று அல்லது நான்குநிமிஷத்திற்குமேல் யாராலும் நீரில் அழுந்தி யிருக்க முடியாது. மூச்சுத்திணறும் சமயத்தில் அவன் தான் இறங்கிய கல்லின் பேரில் மீண்டும் ஏறிக்கொள்ளாமல் கீழே நின்றபடியே வலது கைக் கயிறுகளை மட்டும் இழுத்து அசைத்து ஆட்டுவான். இதுவே அவன் தன்னை வெளியில் தூக்குமாறு அறிவிக்கும் அடையாளமாகும். இக்குறிப்

பைப் படகோட்டிகள் அறிந்து, படகில் அமைக்கப்பட்டிருக்கும் இராட்டினத்தின் வழியாய் கல்லில் கட்டப்படாதிருக்கும் கயிற்றை இழுத்து, அவனை மேலே தூக்கித் கொண்டு வந்து விடுவார்கள். பிறகு அவன் விட்டு வந்த கல்லை அதன் கயிற்ருல் மேலே இழுத்து விடுவார்கள்.

சிலோன் வாசிகள் முத்துக்களைத் துளையிடுவதிலும். மாலை யாகக்கோர்த்துக்கட்டுவதிலும் கைதேர்ந்தவர்கள்.

முத்தின் பரிமாணம் அது பக்குவமாக்கச்செல்லும் காலத்திற்கேற்ப மாறுபடும். சாதாரணமாகச் சிப்பிகள் பருவமடைய நான்கு வருடங்களும் பூரண பக்குவமுற ஏழு வருடங்களுமாகும். உஷ்ணப் பிரதேசங்களில் காணப்படும் முத்துக்களே நேர்த்தியாயும் பருமனுயும் விலை மிகுந்தனவாயும் இருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களில் காணப்படும் முத்துக்கள் சிறியவையாய் இருக்கின்றன.

நக்ஷத்திரங்கள் போல் ஒளியும் உருட்சியும் குற்றமில்லாமையும், கையினுல் எடுத்தால் கெட்டியாயும் கண்ணுக்கு நன்ருக இருத்தலும், ஸ்படிகம் போல் இருத்தலும் உயர்ந்த நல் முத்தின் குணங்களாகும். ஏறக்குறைய ஒரு அங்குல கனமும் இரண்டங்குலத்திற்கு அதிகமான நீளமும் உள்ள முத்தொன்று அரேபியாவில் பல வருடங்களுக்கு முன்பு, பதினுன்கு லக்ஷ ரூபாய்களுக்கு வாங்கப்பட்டதாம். சர்வ லக்ஷணங்களும் முழுதும் அமைந்தது இந்திய முத்தே எனத் தெரிய வருகிறது.

ஆடவர், பெண்டிர், இளையோர், முதியோர், ஏழைகள், செல்வந்தர்கள் என்ற ஏற்றத் தாழ்வின்றி, இதனை இந்தியர்களும், ஏனைய சிலரும் மாலையாகக் கோர்த்தும், நகைகளிற்பதித்தும் அணிகின்றனர். இது ஒரு வியாபாரச் சரக்காயிருப்பதுடன் மருந்துச் சரக்காயும் இருக்கிறது. எகிப்தியரும், பிரான்சியரும், பவளத்தை உபயோகித்தது போலவே, முத்தையும் தங்கள் சிரோகவசத்திற்கும், யுத்தாயுதங்களுக்கும் சிறந்த அணிகலனுகக் கொண்டனர் என்று தெரிய வருகிறது. மேற்றிசையோர் பலர் முத்துமாலையை மலடு நீக்கவும், திருஷ்டி கழியச் செய்யவும் கூடிய ஒரு ரக்ஷையாகக் கருதி, உபயோகிக்கின்றனர். பயனற்ற முத்துக்களும். சிப்பிகளும் நீக்கப்பட்டு சுண்ணும்பாக உபயோகிக்கப்பட்டு வருகின்றன. முத்துச் சிப்பிகள் பொத்தான் செய்யவும் அநேக விதமான அலங்கார வேலைகள் செய்யவும் உபயோகமாகும்.

சமுத்திரத்தில் பார்ப்போர் கண்ணுக்கு எளிதில் தென்படுவன அதில் மிதக்கும் சிறு துரும்புகளே. அதுபோல ஒருவனுடைய தவறுகளே மேலெழுந்த பார்வையுடன் நோக்குவோர் கண்ணுக்குப் புலப்படும். ஆனுல், அதில் முத்தை நாடுவோன், அச்சிறு துரும்புகளைப் புறம்பே தள்ளி, அடியில் ஆழ்ந்து நோக்கல்போல் நோக்கினுல்தான், அவனுடைய நற்குணங்கள் நன்கு விளங்கும்—என்பதற்கு முத்து உதாரணமாக இருந்து வருகின்றது. விலையேறப் பெற்ற நன் முத்து உவர்நீரும், புலால் நாற்றமும் கொண்ட கடலில் சிப்பி வயிற்றில் தோன்றுவது போலவே, நற்குண நற்செய்கையுடைய பெரியோர் இழி குலத்திலும் தோன்றுதல் இயல்பு. ★

நாடித்துடிப்பு

கே. சீனிவாசன்

உடல்நலக் குறைவுள்ளஒருவர் ஒருநாட்டு வைத்தியரிடமோ அல்லது ஆங்கில முறை மருத்துவரிடமோ செல்வா ராயின், அம் மருத்துவர் முத லாவதாக அங் நோயாளியின் நாடியையே பிடித்துப் பார்ப் பார். இம்முறை, வைத்தியப் பரிசோதனையின் முக்கியமான செயல்களில் ஒன்ருகும். வைத்தியர்கள் இம் முறையை வெகுகாலமாகக் கையாண்டு வந்திருக்கிருர்கள். இக்காலத் திலும் இம்முறை சிறந்ததாகக் கருதப் படுகின்றது.

மனிதஉடம்பின் நாடித்துடிப் பின் வேகம் கிருஸ்து சகாப்தத் திற்கு 400 ஆண்டுகட்குமுன்பே அறியப்பட்டது. எனினும் வில்லியம் ஹார்வி William Harvey எனும் மேல்நாட்டு வைத்தியர் மனித தேகத்தின் ரத்த ஓட்டத்தை அறிந்த பின்பே வைத்தியப் பரிசோதனை யில் நாடித் துடிப்பு ஒரு முக் கிய செயல் முறையாகக் கையாளப்பட்டது என்கிருர்.

நாடித்துடிப்பின் வேகம் சில காரணங்களால் மாறுதலடை கிறது. மனித உடம்பில் நாடித் துடிப்பின் சாதாரண வேகம் நிமிடத்திற்கு சுமார் 70 முதல் 90 வரை இருக்கும். ஆனல், மிருகங்களைப் பொருத்த மட் டில் இந்நாடித் துடிப்பின் வேகம் மிகவும். மாறுத லடை கிறது. பருத்த தேகமுள்ள மிரு கங்களின் நாடித் துடிப்பின் வேகம் குறைந்தும், சிறுத்த மிருகங்களின் நாடித் துப்பின் வேகம் அதிகமாயும் உள்ளது. உதாரணமாக யானையின் நாடித் துடிப்பின் வேகம் நிமிடத்திற்கு 24 முதல் 28 வரை இருக்கும். ஆனல், எலியின் நாடித்துடிப்பின் வேகம் நிமி டத்திற்கு 700 ஆகும். நாடித் துடிப்பின் வேகம் தேகக் கட்டு உள்ளவர்களிலும், வயதுக்குத் தகுந்தபடியும், பாலுக்குத்தகுந் தவாறும், ஓடும் பொழுதும் நிற்கும் பொழுதும், உணர்ச்சி வயப்பட்ட வேளைகளிலும், வெப்ப தட்ப நிலைக்குத் தகுந்த வாறும் மிகவும் மாறுதலடை கிறது.

சிறியவர்களின் நாடித்துடிப் பின் வேகம் முதியவர்களைக் காட்டிலும் அதிகம். வயது ஏற ஏற நாடித் துடிப்பின் வேகம் குறைகிறது. இது 25 வயது வரை நிகழ்கிறது. மேலும் நாடித்துடிப்பின் வேகக் குறை வால் மனித உடம்பில் இரத்த அழுத்தம் Blood Pressure) அதிகரிக்கின்றது. சிலருடைய உடம்பில் நாடித் துடிப்பின் வேகம் 45 வயதுக்குப் பின்பும் சிறிது அதிகரிக்கின்றது.

பொதுவாகப் பெண்களின் நாடித்துடிப்பின் வேகம், ஆண் களைவிட அதிகம். அவர்களு டைய சாதாரண தேகக்கட்டே இதற்குக் காரணம் ஆகும். எனினும் பருத்த தேகமுடைய பெண்களின் நாடித்துடிப்பின் வேகம் குறைவாகவேஉள்ளது.

ஆரோக்கியமுள்ள ஒரு மனித னின் இருதயம் பலவிதமாறுதல்

களால் தாக்கப்படுகிறது. குளிர்ந்த காற்று ஒருவன் மேல் படும் பொழுது, அம்மனிதனின் நாடித்துடிப்பின் வேகம் சிறிது குறைகிறது. கனத்த ஆடைகள் அணிந்த ஒருவனின் நாடித் துடிப்பின் வேகம் சிறிது அதிகரிக்கின்றது. மெல்ல நடக்கும் பொழுது நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 60 முதல் 100 வரையும், வேகமாக நடக்கும் பொழுது 140 ஆகவும் ஓடும் பொழுது150ஆகவும் இருக்கும்.

நாடித்துடிப்பின் வேகம் காலையைவிட மாலையில் அதிகரிக்கின்றது. உணவு உண்ட பின்பு இதன் வேகம் சிறிது அதிகரிக்கின்றது. ஏனெனில் நமது தேகம் உண்ட உணவிலிருந்து வெப்பத்தை எடுத்துக் கொள்கிறது.

நாடித் துடிப்பின் வேகம் இனத்துக்குத் தகுந்தவாறும் மாறுதலடைகிறது. உதாரணமாகக் கட்டுமஸ்தான தேகமுடைய சிவப்பு இந்தியர்களின் நாடித் துடிப்பின் வேகம் வெள்ளையர்களை விடக் குறைந்தது. ஆப்பிரிக்க நீக்ரோக்களின் நாடித் துடிப்பின் வேகம் வெள்ளையர்களைக் காட்டிலும் அதிகம்.

நாடித் துடிப்பின் வேகம் வெப்பதட்ப நிலைக்குத் தகுந்தவாறும் மாறுதலடைகின்றது. உதாரணமாக நாடித் துடிப்பின் வேகம் மார்ச்சு மாதம் 74·6 ஆகவும் ஜூலையில் 74.2 ஆகவும் டிசம்பரில் 74.8 ஆகவும் இருக்கும். சாதாரண மனிதனின் நாடித் துடிப்பின் வேகம் நாளுக்கு நாள் மாறுதலடைகிறது. இம்மாறுதல் நிமிடத்திற்கு சுமார் 10 முதல் 15 துடிப்புகள் வரை இருக்கும். நாடித் துடிப்பின் வேகம் எடைக்குத் தகுந்தவாறும் மாறுதலடைகிறது. ஒரே உயரமுள்ள ஆனால், எடை மாறுதலுள்ள மனிதர்களிடை நாடித் துடிப்பின் வேகம் எடை அதிகரிக்க அதிகரிக்கக் குறைகின்றது. உதாரணமாக 35 பவுண்டு எடை அதிகரிப்பின் நாடித் துடிப்பு நிமிடத்திற்கு 2·5 வீதம் குறைகிறது.

சாதாரண சூழ்நிலையில் உடற்பயிற்சி செய்யும் பொழுது. முதல் நான்கு வாரங்களில் நாடித் துடிப்பின் வேகம் நிமிடத்திற்கு 80-லிருந்து 45 ஆகக் குறைகிறது. இப்பொழுது ரத்த அழுத்தம் 160-லிருந்து 185 ஆக அதிகரிக்கின்றது. அதிகப் பளுவுள்ள வேலை செய்யும் பொழுது நாடித் துடிப்பின் வேகம் நிமிடத்திற்கு 90 முதல் 100 வரை அதிகரிக்கின்றது. அப்பொழுது இரத்த அழுத்தம் 160 ஆகக் குறைகின்றது. ஆதலால் அதிக இரத்த அழுத்தமும் நல்ல நாடித் துடிப்புபு நலமுள்ள ஒரு தேகத்தையும், குறைந்த ரத்த அழுத்தமும் மோசமான நாடித் துடிப்பும் நலக்குறைவுள்ள ஒரு தேகத்தையும் குறிக்கின்றன.

நாடித் துடிப்பின் வேகம் நிமிடத்திற்கு 90-க்கும் அதிகமாயிருப்பின் இது க்ஷயரோகத்தையும் சிறுநீர் சம்பந்தமுள்ள வியாதியையும் குறிக்கும். நீர் அதிகமாகக் குடிப்பதாலும் புகை பிடிப்பதாலும் நிகழ்கின்றது. நாடித் துடிப்பின் வேகம் 50-க்கும் குறைந்தால் இருதய சம்பந்தமுள்ள வியாதிகளைக் குறிக்கும்.

நாடித் துடிப்பு மிகவும் முக்கியமானதாகும். வைத்தியர்கள் நாடித் துடிப்பை நன்கு பயன்படுத்துகின்றனர். எனினும் நாடித் துடிப்பை மட்டும் கொண்டு ஒருவனது உடல் நலத்தை அறிவதில் அவர்கள் திருப்தியடைவதில்லை. ஆனால், அவர்கள் சோதனையின் முதல் படி நாடித் துடிப்புதான். ★



ஒரு கண்ணாடித் தொழிற்சாலையின் வெளித்தோற்றம்.

★கிருஸ்துவுக்கு முன்பே உலகில் தோன்றிய கண்ணாடி எப்படித் தோன்றியது?

கண்ணாடி செய்தல்

கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி

இன்றைக்கு 4500 வருஷங்களுக்கு முன்பே கண்ணாடியைப் பற்றிய அறிவு உலகில் உலவி வந்துள்ளதாகத் தெரிகிறது. ஆனால், எத்தேசத்தினர் முதன் முதலில் இதைக் கண்டு பிடித்தனர், எந்த சந்தர்ப்பத்தில் கண்ணாடி செய்வது புலனாயிற்று என்பவை போன்ற விஷயங்களில் ஆராய்ச்சியாளரிடம் ஏகோபித்த அபிப்பிராயம் தென்படவில்லை. கிருஸ்து பிறப்பதற்குச் சுமார் 2500 வருஷங்களுக்கு முன்பிருந்தே கண்ணாடி புழக்கத்தில் இருந்து வந்திருப்பதாக ஆராய்ச்சியாளர் கூறி வருகின்றனர். ஆரம்பத்தில் அலங்காரப் பொருளாக ஆரம்பித்து, உபயோகப் பண்டமாக உருமாறி, இன்று நம் வாழ்க்கையில் இன்றியமையாத வஸ்துவாயிருப்பதை நாம் பார்த்து வருகிறோம்.

கீழே விழுந்தால் சுலபமாக உடைந்து விடும் தன்மை கொண்ட கண்ணாடி, இன்று துப்பாக்கிக் குண்டையும் எதிர்த்து நிற்கும் தன்மை வாய்ந்ததாக மாறியுள்ளது. இப்பொழுதெல்லாம் அமெரிக்காவில் சில கட்டிடங்கள் கண்ணாடியாலான கற்களைக் கொண்டு கட்டப்படுவதாக அமெரிக்கச் செய்திகள் கூறியவண்ணம் இருக்கின்றன. கண்ணாடியினால் மெல்லிய நூல்களும் நீச்சலுக்கு உதவும் உடைகள் முதலியனவும்கூடச் செய்யப்பட்டு வருவதாக அறிகிறோம். உடைக்க முடியாக் கண்ணாடி, கனத்தைத் தாங்கி நிற்கும் கண்ணாடி ஆகியவை நம் நூற்றாண்டின் அதிசயங்களில் ஒன்றாகும்.

இவ்வளவு பெருமை வாய்ந்த கண்ணாடியின் மூலப் பொருள் ஒரு வகையான நல்ல வெள்ளை நிறம் பொருந்திய மணலையாகும். இதை ஸிலிகா மணல் என்றும் குவார்ட்ஸ் என்றும் சொல்லுவார்கள். இம்மாதிரியான வெள்ளை மணல் இந்தியாவில் ஹைதராபாத்துக்கு சிறிது மேற்கிலும், பூனாவுக்கு அருகாமையிலும், தென் இந்தியாவில் சில இடங்களிலும், வட இந்தியாவிலும் கிடைத்து வருகிறது.

கண்ணாடி செய்வதற்கு முதலில் இந்த மணலை உருக்கியாக வேண்டும். இது எளிதில் செய்யக்கூடிய வேலையல்ல. மணல் லகுவில் உருகுமா? அதற்காக இத்துடன் சில ரஸாயனப் பொருள்களையும் சேர்த்தாக வேண்டும். பின்பு, தட்டான் பவுனை குகையில் போட்டு, நெருப்புச் சட்டியில் வைத்து உருக்குவது போல உருக்கியாக வேண்டும்.

இவ்விதம் மணலை உருக்குவதற்கென்றே தனியாக உருக்கடுப்பு ஒன்று கட்டப்பட வேண்டும். இதன் உருவம், உயரம், சுற்றளவு இவைகளெல்லாம் தொழிற்சாலை

நானுவித கண்ணுடிப் பாத்திரங்கள்

மேலே கூறிய ஸிலிகா மணல், சோடா, சுண்ணும்பு முதலியவற்றை, அதற்கென்றே செய்யப்பட்ட சந்து வழியாக உள்ளே கொட்டுவார்கள்.

அடுப்பு, நிலக்கரி வாயுவினுல் சூடேற்றப்படுகிறது. சுமார் 1400 (சென்டிகிரேடு) டிகிரியாவது குறைந்த பக்ஷம் சூடு கொடுக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் ஸிலிகா என்ற மணல் உருகாது. உருகின பிறகும் அதன் சூட்டை நீடிக்கச் செய்துகொண்டே இருக்க வேண்டும். ஏனென்ருல் சூடு சற்று குறைந்து விட்டால் இந்தக் கூழ் இறுகி கெட்டியாகி விடும். இந்த உருகிய ஸிலிகா மணலின் கூழிலிருந்து செய்யப்படுவதுதான் கண்ணுடியாகும்.

யின் தன்மையையும் அதன் திட்டத்தையும் பொருத்தது. இந்த அடுப்பின் சுவர் முழுவதும் இதற்கென்றே பிரத்தியேகமாகச் செய்யப்படும் ஒரு வகை கற்களினுல் எழுப்பப்படுவதாகும். இக்கற்களுக்குச் சூடு தாங்கும் கற்கள் எனப் பெயர். பெரும்பாலும் வெளி தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும். இவை விலை உயர்ந்தவை. இந்த அடுப்பானது சக்கர வடிவமாக கிணற்றின் கைப்பிடிச் சுவரைப் போல எழுப்பப்பட்டு, நடுநடுவே அவற்றில் தேவைக்கும் சௌகரியத்துக்கும் ஒத்தவாறு, சந்துகள் செய்யப்பட்டிருக்கும். அடுப்பு மேலே மூடப்பட்டு விடும். அதிக செலவில் கட்டப்பட்டாலும், இந்த அடுப்பை ஒரு வருஷத்துக்கு மேல் உபயோகிக்கக் கூடாது. அடுப்பின் உட்புறம் சாந்து போன்ற வஸ்து கனமாகப் பூசப்பட்டிருக்கும். வெளிப்புறம் அடுப்பைச் சுற்றிலும் சக்கரமான உயர்ந்த மேடை கட்டப்பட்டிருக்கும். இதில் நின்றவாறுதான் தொழிலாளிகள், உருக்கடுப்பில் உருகியிருக்கும் கண்ணுடிக் கூழை வெளியில் எடுப்பார்கள். அடுப்புக்குள் பெரிய குகை ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். அதில்தான்

அடுப்பின் மேடைக்கு அடியில் அடுப்பைச் சுற்றிலும் 'போல்டு' எனப்படும் அச்சுருளையை வைத்துக்கொண்டு வேலை ஆட்கள் உட்கார்ந்திருப்பர். மேடையின் மேலே எடுப்பவர்கள் (Gatherers) என்று சொல்லப்படுபவர்கள் அடுப்பைச் சுற்றி நிற்பார்கள். இவர்களிடம் இரும்பினுலான நீண்ட குழாய்கள் இருக்கும். இதனுல்தான் குகையில் உருக்கப்பட்டிருக்கும் கண்ணுடிக் கூழை வெளியில் எடுப்பார்கள்.

கண்ணுடிச் சாமான்கள் செய்வதற்கு, அதாவது டம்ளர்கள் புட்டிகள், குளோப், ஜாடிபோன்றவைகள் செய்வதற்கு இருமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஒன்று, குழாயின் மூலமாய் வாயினுல் ஊதி, சாமான்கள் செய்யப்படுவது. இரண்டாவது, மிஷின் அதாவது யந்திரத்தின் உதவியால் காற்றுவிடப்பட்டு சாமான்கள் செய்யப்படுவது. முதல் முறைக்கு

படங்களின் விளக்கம்: (1) 17ம் நூற்றுண்டில் வெனீஸ் நகரில் செய்யப்பட்ட ஜாடி. (2) 18ம் நூற்றுண்டில் பொஹீமியாவில் செய்யப்பட்ட ஜாடி. (3) 16ம் நூற்றுண்டில் ஜெர்மனியில் செய்யப்பட்ட 'பீக்கர்'. (4-7) இரண்டும் இங்கிலாந்தில் 18ம் நூற்றுண்டில் செய்யப்பட்ட மதுக்கிண்ணங்கள். (5) 15ம் நூற்றுண்டில் சிரியா நாட்டின் மதுக்கிண்ணம். (6) கி. பி. 400ல் கோலோன் நகர கண்ணுடிக்கோப்பை. (8) 18ம் நூற்றுண்டு ஜெர்மானிய மதுக்கிண்ணம். (9) 13ம் நூற்றுண்டு சிரியா நாட்டு மதுக்கிண்ணம். (10) 17ம் நூற்றுண்டில் டச்சிலிருந்த மதுக்கிண்ணம்.

ஆங்கிலத்தில் (Mouth Blowing) என்றும் இரண்டாம் முறைக்கு (Machine Blowing) என்றும் சொல்லுவார்கள். தட்டைக் கண்ணுடி செய்யப்படுவது வேறு விதம். அதற்கு ஏற்ற யந்திர சாதனமும் வேறுவிதமாகும்.

முதலில் எடுப்பவர்கள் தங்களிடம் உள்ள நீண்ட இரும்புக் குழாயை அடுப்பின் சந்து வழியாக உள்ளே நுழைத்து, செய்யப்படும் சாமானுக்கு வேண்டிய அளவு மாத்திரமே உருக்கிய கூழ் குழாயின் நுனியில் ஒட்டிக் கொள்ளும்படிசெய்து, குழாயை வெளியில் எடுப்பர். இதுதான் இவர்கள் வேலை. இதற்கு அடுத்தாற்போல சூடாற்றுபவர்கள் என்று சிலர் உண்டு. இவர்கள் வெளியில் எடுக்கப்பட்ட உருகிய கூழை, குழாயைப் பிடித்தவாறு அங்குமிங்கும் ஆட்டி, சற்று சூடாற்றி, தங்கள் பக்கத்தில் இருக்கும் ஊதுபவர்களிடம்கொடுப்பர். 'பப்ளர்ஸ்' எனப்படும் ஊதுபவர்கள் குழாயின் வழியாகச் சற்று ஊதி, கூழைச் சற்றுப் பெரிதாக்கி தம் அருகில் இருக்கும் 'வாயால் ஊதுபவர்களி'டம் கொடுப்பார்கள். இவர்கள் பெரிதாக்கப்பட்ட இக் கூழை, கீழே தயாராகத் திறந்து வைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் அச்சுக்குள் செலுத்தி, அச்சு மூடப் பட்டவுடன், தங்கள் வாயால் குழாய் வழியாகப் பலமாக ஊதி, சற்று நேரத்துக் கெல்லாம் குழாயைமட்டும் வெளியில் எடுத்து விடுவார்கள். உடனே அச்சும் திறக்கப்பட்டுவிடும்.

குகையிலிருந்து வெளியில் எடுக்கப்படும்போது, கூழானது ஆரஞ்சு நிறமாக இருக்கும். சாமானுக உருவாகி கிடுக்கியால் வெளியில் எடுக்கையில் பளபளப்பாகவும்,

கண்ணுடியின் இயற்கைத் தன்மையுடனும் காட்சியளிக்கும். பிறகு இவை மறுபடியும் 'கிளன்' எனக் கூறப்படும் அடுப்பு ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்படும். இதில் நிலக்கரி போடப்பட்டு எரிந்து கொண்டே இருக்கும். சாமான்களாகச் செய்யப்பட்ட கண்ணுடியை உடனேயே குளிர்ச்சியாகச் செய்யக்கூடாது! செய்தால் அவை சீக்கிரத்தில் உடைந்துவிடும். ஆகையால். அவற்றை மறுபடியும் மெதுவாக, வேண்டிய அளவு உஷ்ணப்படுத்த வேண்டும் பிறகு மெதுவாகச் சூடாற்றி வெளிப்படுத்த வேண்டும். இப்படிப் புதிதாகச் செய்யப்பட்ட கண்ணுடிச் சாமான்களை உடனேயே திரும்பவும் சூடேற்றி, சாவதானமாக சூடாற்றி, அவற்றை வெளிப்படுத்தும் முறையை ஆங்கிலத்தில் 'அந்நீலிங்' என்று குறிப்பிடுவார்கள். இந்த 'அந்நீலிங்' செய்முறையை கண்ணுடிச் சாமான்கள் தயாரிப்பில் ஒரு முக்கியமான கட்டம் என்றே கூறி விடலாம்.

பிறகு, குறித்த சாமான்கள், மெருகு கூட்டுவதற்கும், ஓரங்கள் தேய்க்கப்பட்டு உபயோகத்திற்கு ஏற்றதாகவும் செய்யப்படுவதற்கு, இதற்கென்றே உள்ள பிரத்தியேகப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு இவைகள் நன்கு பரிசோதிக்கப்பட்டு, உபயோகத்துக்கு ஏற்றதான சாமான்கள் பொறுக்கி எடுக்கப்பட்டு, விற்பனைக்கு அனுப்பப்படும். இவ்விதம் தான் நாம் அன்றாடம் உபயோகிக்கும் கண்ணுடிச் சாமான்கள் செய்யப்படுகின்றன.

18ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் மது அருந்துவதற்கும், காபி, தேனீர் அருந்துவதற்கும் கண்கவர் கண்ணுடிக் கோப்பைகளையே பயன்படுத்தி வந்தனர். இக்கோப்பைகள் சிறந்த வேலைப்பாடுகளுடன் விளங்கின. அவற்றை இன்னும் சிறந்த உதாரணங்களாகக் கொண்டு 20ம் நூற்றாண்டு கண்ணுடித் தொழிற் சாலையாளர்கள் கோப்பைகளைச் செய்து வருகின்றனர். ★

எழுத்தும் எழுத்தாளரும்

உங்கள் வாழ்வில் எழுதுவதைத் தொழிலாக நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்களா? ஒருவன் எப்படி எழுதுகிருன்? இதற்கு இதோ மிகத் தெளிவான, அதிசயிக்கத் தக்கதோர் பரிகாரம் இருப்பதாக இளைஞர்களுக்குத் தோன்றலாம். ஆனல், எழுதுவதென்பது மிகக் கடினமான ஒரு வேலை என்பதும், அதே சமயத்தில் நிலையானதோர் ஆனந்தத்தை அளிக்கும் வேலை யென்பதும், இலக்கிய மேதைகளுக்குத்தான் நன்கு தெரியும்.

ஒரு எழுத்தாளன், வாழ்க்கையிலிருந்து, போராட்டத்திலிருந்து ஒதுங்கி நிற்க முடியாது. முதலாளித்துவ விஞ்ஞானிகள் சிலரைப் போன்று, தன் ஆராய்ச்சிக் கூடத்தில் அமர்ந்து கொண்டு எழுத்தின் இரசாயன மாறுதலை நடத்திக் கொண்டிருக்க இயலாது. அக்கறையில்லாத வெறும் பார்வையாளனுக எழுத்தாளன் இருக்க முடியாது. எப்போதும் அவன் சிந்தித்தபடி இருக்கிருனே என்று பொறுமைப்படுவதில் அர்த்தமில்லை!

— ஆஸ்ட்ராவ்ஸ்கி.

ஜகத்தினை அழித்திடுவோம்!

'மழலை'

பாதத்தில் தொடர்ந்து, படிப்படியாய் உயர்ந்து, உச்சம் பெற்று விட்டான் ஏழரை நாட்டான். அலைச்சல் திரிச்சல், அகால போஜனம். சாடி சண்டைகள், பலவகை மோசடி, பந்துக்கள் விரோதம் இவைதான் அவன் ஆட்சியின் மாட்சிமையாகும். அரசன் முதல் ஆண்டி வரை...ஏன், கடவுள் என்றாலும் கருணை காட்டுவதே கிடையாது, காகம் ஏறும் கலித்தேவன்; கடவுளினத்தில் ஒருவன். ஒன்பது கடவுளின் கூட்டணியில் (நவக்கிரகங்களில்) ஒரு அங்கத்தினன். இவனுக்கு ஆலயம் உண்டு. அபிடேக ஆராதனை உண்டு. பெயர் சனிபகவான். இது வேதாந்திகளின் விருத்தாந்தம் என இழித்துரைப்பாரும் உண்டு. ஆயினும் பாமர பாணியிலே சொல்லப் போனால், இதே சனியனின் மறுபெயர் தான் ''வறுமை'' என்பது.

இவ்வறுமை ஒருவனிடத்தில் வாழுங்கால், அவனை பொறுமை இழந்து, பெருமையில்லாப் பாதையிலே நடக்கவும் துணிகிறான். அந்த முரண்பாட்டைக் காண வேண்டின், வறுமை வாழ் வட்டாரங்களுக்குச் சென்று, அங்கே சிறுமையால் சிதைவுண்ட சிகரங்கள்பால் சிந்தனையைச் செலுத்த வேண்டும்.

அதோ! மூங்கிற் காட்டருகே தேங்கி நிற்கும் மடுவின் கரையில், ஓங்கி நிற்கும் புற்று மேடு. தரையில் பச்சை நிறப் பாய் விரித்து, அதில் பல நிறப் பூக்கள் வாரி சொரிந்தாற் போன்ற பாங்கான தோற்றம் அந்த அரங்கினை அழகு செய்வது போல், ஒரு இளைஞன் பாம்பொன்றை ஆலிங்கனம் செய்து, காளிங்க நடனத்தை பாவ நளினங்களோடு, அபிநயித்துக் கொண்டிருந்தான். கண்ணனின் திருவிளையாடலைக் கண் முன்னே காணும் பாக்கியம் கிட்டி விட்டதே என்று, நான் அவனை நெருங்கினேன். ஆனால், கண்டது விஷ்ணு லீலா இல்லை!....வீரமிக்கச் செயல்!! வில்வி யொருவன் நாகப்பாம்பின் தலையை ஒரு கையால் பிடித்து, வாலை ஒரு காலால் மிதித்து, மற்றொரு காலால் நடு உடலை உதைத்தவாறு மற்றொரு கையால், பாம்பின் உடல் நெளிய நெளிய, உதிரம் சொரியச் சொரிய அதன் தோலை உரித்துக் கொண்டிருந்தான்.

ஆ!....என்ன வீரம்!....'பாம் பென்றால் படையே நடுங்கும். ஆனால், இவன் பாம்பையே நடுங்க வைக்கிறானே! இத்தனை துணிவு எப்படி வந்தது இவனுக்கு!....ஆம் வறுமை தந்த வலிமையல்லவா அது! சீரான வாழ்வில் அவன் சிக்கிவிட்டிருந்தால், அந்தச் சீறும் பாம்பைக் கண்டு நடுங்கித்தானிருப்பான் அவன்.

பஞ்சடைந்த கண்களோடு நெஞ்சுலர்ந்த மக்கள், அவற்றின் பசி போக்க வழியின்றிப் பரிதவிக்கும் மனைவி, இந்தப் பாழான சூழ்நிலையைப் பார்த்த பின்னும்,....சீறும் பாம்பைக் கண்டு சோர்வடைவானா என்ன! நஞ்சுக்கும் அஞ்சாத அளவிற்கு பஞ்சம் அவனைப் பக்குவப்படுத்தி விட்டது..... பாதை கிடைத்து விட்டது. பாம்புத் தோலிற்கும் பணம் கிடைக்கிறது.

பஞ்சம் போக்க வழியின்றி நெஞ்சம் குமுறும் நேரத்தில், தஞ்சமளித்த இத்தொழிலை அவன் வாழ்த்துகிறன், வணங்குகிறன், இதுமட்டுமா?

மனத்தின் அருவருப்பையும் சகித்துக் கொண்டு, வயிற்றை நிரப்ப வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக மனித இனம் எத்துணையோவித தொழில்களில் ஈடுபடுவதை நாம் நன்கறிவோம்.

நாடாண்ட மன்னன்தான்; காட்டிலே, கல்லிலும் முள்ளிலும் கண் மூடியலைகிறன். காரணம், வேட்டையாடவுமல்ல, காட்டைக் காணவுமல்ல! தம்பி செய்த சூழ்ச்சியால் தலைமறைந்து திரிகிறன். வாரி வாரிக் கொடுத்த வடுவு மிருக்கிறது கையில்; வள்ளல் குமணனை வாழ்த்தாதாரில்லை. ஆனல், இவனின் இப்போதைய நிலையோ?....ஓடம் போன ஆறுதான்! அடி சுடுகிறது, உலர்ந்த மணல் மேலே, எனினும் ஊற்றுப் புனல் உள்ளே உண்டு. ஈரமுள்ள நெஞ்சுதான், சாரமில்லை கையில். இந்நிலையிலும் இரப்போரைக் கண்டால், மறுக்கத்தான் மாட்டான். இரப்பவர் எனினும் இதயம் உண்டல்லவா அவர்களுக்கும்? அவர்கள் குமணனை நெருங்குவதில்லை இப்போதெல்லாம்! ''இலையுதிர்ந்த மரம், நீர் வற்றிய குளம், இங்கே, எந்த உயிர் நெருங்கும்?'' என இந்த வரிசையில் எண்ணிவிடாதீர்கள்! ''இந்தச் சூழ்நிலையிலும் குமணன் வறுமையாளரைக் கண்டால், கொடுக்கப் பொருளில்லையே என வருந்துவானே!'' என்றுதான் இரப்பவர் அவனை நெருங்குவதில்லை.

ஆனலும் அதோ ஒரு புலவன்; பேசாத பொருள் எல்லாம் பேசுவதாய் வைத்துப் பெருங் காவியமே தீட்டும் பேரறிவாளி. மக்களுக்கு மாண்பு கற்பிக்கும், மணிமுடிகளுக்கும் நெறியுணர்த்தும், நெறியுணர்ந்த நல்ல மனிதன். ஒப்பிலா மணிப் புலவன் நெருங்கினன் குமணனிடம். சாதாரண மனிதனும் செய்ய மனமில்லா அச்செயலை அவன் செய்யத் துணிந்துவிட்டான். ..ஆம் குமணனிடம் பரிசிலை எதிர்பார்க்கிறன். ''என்ன இதயமற்ற செயல் என்கிறீர்களா?'' அவன் நிலையைச் சொல்கிறன் கேளுங்கள்.

''என் இச்சைக்கேற்றப் பச்சைக் குழந்தை, தாயின் வறண்ட தனம் பற்றி சுவைத்துச் சுவைத்தும் பால் வராமையால், வெறுத்து, தாயின் (அவன் மனைவியின்) முகத்தைப் பார்த்தது! விம்மி யழவும் திறம் கெட்ட குழந்தையின் வேதனைச் சதிராடும் முகம் கண்ட அவள், ''வேறு வழி என்ன?'' என்ற வினுக்குறியுடன் என் முகம் பார்த்தாள். இந்நிலையில் என் இதயம் இரும்பானது. மாற்றுர் மன வேதனையை உணராத மனத்தினன் ஆனேன். ஓடி வந்தேன் உன் முகம் நோக்கி குமணு!'' என்றுன். கவித்தேவனல் கொடுமை செய்யப் பட்ட கவிதா மன்னனைக் கண்டான் குமணன்.

சிந்தித்தான் வள்ளல், தன்னைச் சந்தித்த புலவனை நிந்திக்கவில்லை. நொந்துதான் தன்பால் வந்திருக்கிறன். தந்துதான் காக்க வேண்டும்...ஆனல், தரப் பொருள்?.... அந்த நாள் — அரச பீடத்திலிருந்த போது வந்திருந்தாலும் பரிசல் தந்திருக்கலாம்: இப்போது வந்தால் எதைக் கொடுப்பது?— இப்படி ஒரு நீண்ட சிந்தனைக்குப் பின், ''ஏனில்லை'' என தானே ஒரு முடிவுக்கு வந்தான். ''என் தலைக்கு விலை கொடுக்க தம்பியிருக்கிறன். அந்த விலையால் இவன் நிலை உயர வழியிருக்கிறது'' என எண்ணி, புலவனை நோக்கி, ''பாடிப் பரிசல் பெறும் பைந்தமிழ்ப்பாவல! வாடி வந்த உன் வருத்தம் தீர்க்க வழியில்லையே என்று தவித்தேன். ஆயினும் என் தம்பியின் நற்செயலாற் அவ்வருத்தம் மறைந்து விட்டது. இதோ, என் தலையைப் பரிசாகப் பெற்றுக் கொள், அதற்குப் பரிசாகப் பொன் தருவான் என் தம்பி!'' என்றுன் குமணன்.

இச்சொற் கேட்ட அப்புலவன், கல்லாக நின்றுன் கண நேரம். உணர்விழந்து நின்ற அவன் உள்

ளத்திலே, "சரியென்று சொன்னால், மறுக்கணமே நம் கையில் குமணன் தலை—இல்லை, கோடி பொன். பிறகு குமணன்? ஆ!.... குமணன்....நெடுவழியின் நடுவினிலே நிழல் தரும் ஒரே மரம்; வெயிலிலே வழி நடந்து களைப் போடு வருவோர்க்கு, களைப்பு நீங்க நிழல் தரும்மடல் விரிந்த மரத்தை விறுக்கென வெட்டி சாய்க்கப்படுவது போல், குமணன் மாய்க்கப்படுவதா?!...அந்தோ! குமணனை இந்நிலையில் நாம் வந்து கண்டது என்ன இதயமற்ற செயல்! இத்தனைக்கும் காரணம். என் வறுமை வறுமை" எனத் தோன்றவே இப்படிக் கதறுகிறான்.

இவன் என்ன? இதனினும் மோசமானவன், மேதை படிக்காசுப் புலவன், வாய்விட்டுப் பாடுகிறான் கேளுங்கள்—இல்லை தாய் மொழியைச் சாடுகிறான் பாருங்கள்.

"பிழைக்கத் தொழில் பல பெருகிக் கிடந்தும், பெருமையானது கல்விதான், ...கல்விதான் என்று அறிவில்லாமல் கற்று விட்டேன். அதோ! நாட்டியக் கலையாம் நட்டுவனார் உடனிருக்க ஆடுகிறாள். அபிநயம் பிடித்து அச்சம் சிறிதுமின்றி, அங்கங்களை அசைக்கிறாள்; அந்தச் சதிராட்டம் காணத் திரளான மக்கள்! அவள் பாதத்தில் பொன்னைக் குவிக்க காத்திருக்கிறது ஒரு கும்பல்! ரசித்து லயித்த அவர்கள் வாரி இறைக்கும் பொருள்!....அப்பப்பா!! கொஞ்ச நஞ்சமல்ல!!!..கோடி கோடியாய் செல்வம் தேடி வந்து குவிகிறது.

"இதோ வீதியிலே கழி ஒன்று நட்டு, அதனுச்சியில் கண்கவர் ஜாலம் பல செய்கிறான் கழைக்கூத்தாடி. செப்பிடு வித்தைகள் செய்வதைக் கண்ணுற்ற மக்கள், அவன் ஜீவிக்க கருணை காட்டுகிறார்கள், பொருள் தந்து உதவுகிறார்கள்.

"இந்த வரிசையில் ஒருவனாக நான் பிறந்திருக்கக் கூடாதா! அதுதான் இல்லையெனினும் வேறெந்தத் தொழிலையாவது கற்றிருக்கக்கூடாதா! இது போன்ற நல்ல வருவாயுள்ள தொழில் பல இருந்தும், இரந்து பிழைக்குமளவிற்கு கொண்டு வந்து விட்ட இந்தச் சனியான தமிழை ஏன் கற்றேன்!" என்று பிதற்றுகிறான் பேதை. படிக்காசுப் புலவன்.

"பேதையல்ல தம்பி, அவன் மேதை" என்று சொல்கிறார் மற்றொருதமிழ்ப்புலவர்அவரைப்பற்றி தொடர்ந்தும்சொல்லிக் கொண்டே போகிறார், "படிக்காச னுரைத் தமிழ்வரைந்தஏட்டை,பாட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும், தொட்டாலும கை மணக்கும், சொன்னாலும் வாய் மணக்கும், துய்யசேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடும்." அப்படிப் பட்ட நளினங்கள் நிறைந்த செந்தமிழ்க் கவிபாடும் பைந்தமிழ் பாவலன், தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்த தனயன். தமிழ் சேயை ஊட்டி வளர்த்த தந்தை." என்கிறார்.

"ஏன் தம்பி வினாக்குறி யாகிவிட்டாய்.?"

"எப்படிதமிழுக்குதனயனும்,தந்தையுமாய் இருந்தவன் இழிவான தொழிலுக்குபுகழ்மாலைபாடுகிறான்? இனிதான தமிழன்னையை இழிவுரையால் சாடுகிறானே ஏன்?" இதுதானே உன்கேள்வி, சொல்கிறேன் கேள். "சுண்டியபால் சுவைமிளிரும்என்பார்கள்.ஆனால், கசந்தது. சுட்டாலும் வெண்மை தரும் சங்கும் கருகியது. நடக்காததுதான்... நடந்து விட்டது. "நெற்றிக் கண்ணைக் காட்டினும், குற்றம் குற்றமே," என்று நெகிழாது நெறிநின்ற நக்கீரன் வழி தோன்றிய தமிழன், மலை குலுங்கினும் மனம் குலுங்காத மரபில் வந்த மாணிக்கம், குணம் மாறிவிட்டதன்காரணம்?...அவன் வாழ்வை வறுமை முற்றுகையிட்டு விட்டது. மனம் வெதும்பும் அவ்வேளையில் அவன் மனைவி ஈன்றெடுத்த செல்வத்திற்குப் பால்போதவில்லை. பால் இரந்துவர சிற்றூளுமில்லை. கஞ்சி குடிக்கும் திறனில்லாப் பிஞ்சுக் குழந்தை, அதன்பசி போக்கவும் வழியில்லை. பொருள் தேடப் புறப்பட்டான். கற்றாரைக் கற்றாரே

காமுறுவர், என்றபடி கற்ற அவனுக்கு கற்றவர் ஆதரவு மில்லை. ஆனால், பொருள்திரட்டும் பலரைக் காண்கிறான். அவர்கள் தொழிலிலுள்ள குறைபாடுகளும் அவனுக்குத் தெரிகிறது.

இருந்தும் நேர்மை நெறி பற்றி நடந்தால் மட்டும். சீரும் செல்வமும் குவிகிறதாஎன்ன? இல்லையே! இவன் வருவாயால் பிழைக்க வேண்டிய, இவன் குடும்பம் இவன் வரவை வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்திருக்குமே. என நினைக்கிறான்... இதயம் எரிமலையானது. ஏங்கிய அவன் உள்ளத்தில் தேங்கிய எண்ணங்கள் பீறிட்டு வெளிக்கிளம்பி விட்டன. பழிக்கு வசை பாடும் அவன் வாய், வழுக்கி திசை மாறிச் சென்றது, ''சனியான தமிழ்,'' என்று சலித்துச் சொன்னான். காரணம் வறுமை யன்றோ!

இது மட்டுமா... அதோ வீதியில் ஒற்றைச் சிலம்பை கையில் வைத்துக் கொண்டு, ''சிலம்போ சிலம்பு'' என்று கூவித்திரிகிறான் விதி தவறாமல். ஒற்றன் போல் ஓர் பொற்கொல்லன் உற்றுப் பார்க்கிறான். அவனையும் சிலம்பையுந்தான். பின் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல், கொற்றம் நோக்கி விரைகிறான். கொஞ்ச நேரத்தில் அரண்மனை ஊழியர் சிலர்வந்து, அரசன் ஆணை என்று சொல்லி அவனைச் சிலம்புடன் அழைத்துச் சென்றனர்.

''ஆ!... அவனுக்கு கொலை தண்டனையாம். அவன் திருடனாம்.'' ''செய்துதானிருப்பான். அவனைப் பார்த்தாலே தெரிகிறதே! ஒற்றைச் சிலம்பு வேறு எப்படிக் கிடைக்கும் அவனுக்கு?''—இப்படிச் சிலரும், ''என்ன துணிவு!..., திருட்டுச் சிலம்பைத் தெருவில் விற்க வந்துவிட்டான். நெஞ்சழுத்தக்காரன் தான். இல்லையென்றால். இதே ஊரில்... அதுவும் கோலோச்சு மன்னனின் மனைவி, கொலுத்தேவிராணி அவர்களுடைய சிலம்பைத்திருடி தெருவிற்கு கொண்டுவந்து விற்கத் துணிவானா? திருடன், தப்பவே முடியாது!'' இப்படி ஒரு சிலரும் பலவாறு அவனைப்பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

பின்னர் நடந்தது? ''குற்றவாளி அவனில்லையாம், அரசன்தானாம்! கொலையுண்டவன் பெயர் கோவலனாம். அவன் மனைவியாம் கண்ணகி, அவளின் சிலம்புதானாம் அது! அவளே சிலம்பை உடைத்தாள். சிதறிய மணிகளைக்கண்டு பதறினான் மன்னன். நீதிமுறிந்து விட்டதே என்று நீர் வடித்தான் கண்களிலே. நீதியையே உயிராய் வைத்திருந்த மன்னன், நீதியழிந்து விட்டபின்? உயிர்போன உடல் பிணம்தானே?...ஆம், பிணமானான் வேந்தன். மறுகணமே அவன் மனைவியும்—மன்னனின் துணைவியன்றோ அவள்!—துணையானாள் அவனுக்கு. அருமை கணவனைப் பறிகொடுத்தகண்ணகி, தேவி பொறி பறக்க கனல் கக்குகிறாள். அநீதி!...அநீதி!! என்று அலறுகிறாள். அழகு மதுரையே அனல் வீசுகிறது. மகரக்கொடி பறந்த நகரத்தில் உயரக் கொழுந்து விட்டெறிந்தது கூடலைத்தீ!.. நீதி நெளிந்து வளைந்ததால்; நிரபராதிக் கோவலன் நெறிதவறா மதுரைக் காவலன், பதிக்கென உயிர் வாழ்ந்த பாவை கோப்பெருந்தேவி...மூன்று ஒளிச் சுடர்கள், முத்தமிழன்னையின் செல்வங்கள் மூன்றும் செத்து மடிந்தன. ஐயகோ!...கேவலம ஒரு சிலம்பல்லவா இத்தனைக்கும் காரணம் என்பர் பலர். ஆயினும் அதற்கும் கோவலன் வறுமை தானே காரணம்?

வறுமை வாழ்வட்டாரம் நோக்கி வந்து கொண்டிருந்த பட்டினத்தார், ஒரு ஏழையின் வீட்டில் ஏழெட்டு குழந்தைகளைக் கண்டார். இதைக்கண்ட பட்டினத்தார் புகழ்ந்தாரா?! இல்லை ''பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல் போல, புலபுலென கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்.'' என இகழ்கிறார். போற்ற வேண்டிய செயலைத் தூற்றுகிறார். புற்றென்னும் நரகம் கிடைக்காதிருக்க வேண்டின், புத்திரரைப் பெறுவீர், என போதிக்க வேண்டிய

அவரே முரணுக பேதலித்துப் பேசுகிருர். புகழ வேண்டியதை இகழ்கிருரே! ஒரு வகைப்பைத்தியமோ?...இல்லை அந்த ஏழையின் குடிசையில் ஏழெட்டுப் பிள்ளைகள்; வாழ்வை வளம்படுத்த வக்கு இல்லை, இவனுக்கேன் இத்தனைப் பிள்ளைகளென நினைக்கிருர். மீண்டும் சொல்கிருர், ''மக்களைக் காப்பாற்ற வழியில்லை. மனையாளைச் சேராமல் இருப்பதுமில்லை, சீ... சீசீ...இது ஒரு பிழைப்பா?'' என்கிருர். இவர் கூற்றைக் கேட்டீர்களா? சம்பாத்தியமில்லாத ஒருவனுக்கு தாம்பத்திய உறவு கூட அவசியமில்லை. என்பது தானே பொருள்? இயற்கையே தரும் இன்பம் இல்லற இன்பம், பருவம் பயக்கின்ற பணச்செலவு இல்லாத மகிழ்ச்சி. இதற்குமோர் தடை பார்த்தீர்களா, வறுமை வாழ்வட்டாரத்தின் சட்ட திட்டங்களை!

இப்படி கொடுமை பல செய்து வாழ்ந்த வறுமை, இன்றும் வாழுகின்ற வறுமை இனியும் வாழாதிருக்க வேண்டின், ஒவ்வொரு தனி மனிதனும் இவ்வறுமை எங்கே பிறந்து, எப்படி வளர்ந்து, இப்படி கொடுமை செய்கிறதென்று சிந்திந்துச் செயலாற்றத் தொடங்கவேண்டும். மனிதன் 'விலையில்லாமாணிக்கம்'. இயற்கையோடு போராடி அங்கே பதுங்கிக் கிடக்கும் அநேக சக்திகளைப் பயன்படுத்தி பரமானந்தம் அடைகிருன். ஆனுல், வறுமையாளர் இதைப் பாராட்ட மறுக்கின்றனர். அவர்கள் எழுப்பும் குரல்: வானிலே வட்டமிடும் பறவைகள், வையத்தில் உலவுகின்ற மனிதனைப்பார்த்து,''இங்கேஉலவ உன்னுல் முடியுமா?'' என ஏளனம் செய்தன ஓர் நாள். அன்று மனிதன், ''இயற்கை உனக்களித்த ஈடில்லா சக்தியல்லவா அது. என்னுல் எப்படி முடியும்?'' என்று சொல்லி ஏங்கி நின்ருன். ''நிலத்திலே கிடக்கும் மனிதா, இந்த நீரை நீ கடக்கமுடியுமா?'' என நீர் வாழும் உயிர்கள் கேட்டு கேலி செய்தன ஒருநாள். அன்று மனிதன்,''உனக்குள்ள அந்தசக்தி எனக்கேது?'' என்றுஒத்துக்கொண்டான். நாளும் கோளும், ''நாங்கள் யார் தெரியுமா?'' எனறு கேட்டன. அன்று மனிதன் ''நானறியேன்'' என்று நாணித் தலை குனிந்தான்.

''உலகம் பெரியது. உன்னுல் இதை அசைக்கவும் முடியாது. இங்கே காற்றுண்டு, நீருண்டு, கண்டு வியக்கும் செயல்கள பல உண்டு. இதைக் கண்டுணரும் திறனுண்டா உனக்கு'' என்று கேட்டு இறுமாந்திருந்தாள் இயற்கையன்னை. அன்று மனிதன், ''உனது விந்தையை உணரும் திறன் எனக்கேது தாயே!'' என்றுஅஞ்சலிசெய்தான்.

அதன்பின் மனிதன் கல்லையெடுத்தான் கையில்? இதுபயன்படுமா எனச் சிந்தித்தான்; செயலாற்றத் தொடங்கினுன்.

அவன் சிந்தனையால் உருவான எண்ணங்கள் செயலாகி வருவதைக் கண்டு இன்று இயற்கையன்னையே வியப்படைகிருள்! இத்தனை அற்புதங்களை செய்கின்ற மனிதன் ஒன்றையட்டும், மறந்தே போய்விட்டான். மகத்தானசாதனைகள், மகிழ்ச்சிக் குரியவைதான். ஆனுல், பசித்தவன் கையில் சந்தனத்தைக் கொடுத்தால் பாராட்ட மாட்டான். புசித்தவன் அதைக் கண்டு பூரிப்பான், வாரிப் பூசிக் கொள்வான். பசித்தவன் பழிப்பான், இந்திர போகம்தான். இருந்தும் என்னபயன்? இங்கே வறுமை வாட்டுகிறதே!

ஆகையால் மனிதன் இதுவரை சாதித்துள்ளவை மகத்தான சாதனைகள் அல்ல. மனிதன் மனிதனுக வாழ, புனிதமானபோர் ஒன்று இருக்கிறது அந்தப் புரட்சியைத் துவக்கு! வறுமைக்கு சமாதிகட்டு. அதுதான் மனிதன், மனிதனுக்குச் செய்ய வேண்டிய மகத்தான சாதனை.'' இதுதான் வறுமை வாழ் வட்டாரத்தினர் எழுப்பும் இதய ஒலி.

'தனி ஒருவனுக்குணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரதிவாக்கை மெய்யாக்க என்று மனிதன் துணிகிருனே, அன்றே அவன் வாழ்வு மலர்கிறது. ★

சலனப்படம்

எம். நாகராஜன்



பொழுது போக்கிற்காக நாம் சலனப்படங்களைப் பார்த்து விட்டு, சந்தோஷமாக வீடு திரும்புகிறோம். ஆனால், அதைக் கண்டு பிடிப்பதில் உள்ள சிரமத்தை நாம் அறிய வேண்டும்.

மனிதனின் கண்களுக்கு, ஒரு பொருளைப் பார்த்ததும் அதை அப்படியே மனத்திரையில் 1/16 வினாடிகள் வைத்துக் கொள்ளும் சக்தி உண்டு என்பதை விஞ்ஞானிகள் அறிந்தனர். இதைப் ''பார்வையின் தீக்ஷண்யம்'' (Persis tance of Vision) எனக் கூறுகிறோம். உதாரணமாக ஒரு நள்ளிரவில் பிரகாசமான ஒரு ஒளியைக் கண்டதும் கண்களை மூடிக் கொண்டால், அவ்வொளி நம் கண் முன்னாலேயே சில வினாடிகள் உள்ளது. நெருப்புப் பந்தத்தைக் கையில் வைத்துக் கொண்டு சுற்றினால், அது வட்ட வடிவமாகக் காட்சியளிப்பதும் இதனால்தான். இதை அடிப்படையாகக் கொண்டு, 1825-ம் ஆண்டு ஸர் ஜான் ஹர்ஷெல் என்பவர் ஒரு விருந்தில், ஒரு காசின் இருபுறங்களை எப்படி ஒரே சமயத்தில் காணலாம் எனக்கேட்டார். ஒருவருக்கும் தெரியாமல் போகவே, அந்தக் காசைச் சுண்டிவிட்டு இருபுறமும் ஒரே சமயத்தில் தெரியும்படி செய்தார்.

இந்த யோசனையைக் கிரகித்துக் கொண்டு, டாக்டர் ஃபின்டன் (Finton) என்பவர் ஒரு சிறிய விளையாட்டுக் கருவியை அமைத்தார்.

ஒரு வட்ட வடிவமான அட்டையில் ஒரு புறம் கிளியையும், மறுபுறம் ஒரு கூண்டையும் வரைந்தார். அட்டையின் இரு கோடிகளில் மெல்லிய கயிற்றைக் கட்டிச் சுழற்றவே கிளி, கூண்டிற்குள் இருப்பது போல் காட்சியளித்தது. இம்முறை'' தாமாதுரோப்'' (Thaumathrope) என அழைக்கப்பட்டது.

பிளாட்டோ என்பவர் 1849-ம் ஆண்டில் பல ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் அறிக்கை விடுத்தார். அதாவது,'' கண்களின் தீக்ஷண்ய சக்தி ஒளியின் பலத்தைப் பொருத்தது. அதிக ஒளி அதிக நேரம் கண்ணின் திரையில் நிற்கும். சிறிய ஒளி சிறிது நேரமே நிற்கும். இவற்றை ஆராயுங்கால், சராசரி 1/30 வினாடிகள் கண்களில் ஓர் ஒளி நிற்கும்'' என்றார்.

இம்மேற்கண்ட ஆராய்ச்சியை செய்கையில் கொண்டு

வரப் பலரும் முற்பட்டனர். அதாவது ஓடும் குதிரை ஒன்றின் படத்தை ஒரே இடத்தில் பல கோணங்களில் காமிராக்களை வைத்துப் படம் பிடித்தனர். ஒவ்வொரு படமும் அதன் முற்பட்ட படத்தைக் காட்டிலும் சிறிது மாறிய சலனத்தைப் இப்படங்களைக் கண்கள் வேகமாகப் பிரதிபலித்தது. ஒன்றன்பின் ஒன்ருகப் பார்க்க இயலுமானுல், குதிரை ஓடுவது தெரியும் என்பது நிச்சயிக்கப் பட்டது.

1851-ம் ஆண்டில் ஜூல்ஸ் டுபாஸ்க் (Jules Dubosque என்பவர் ஒரு கருவி தயாரித்தார். இதுவே ''பயாஸ்கோப்'' (Bioscope) எனப்பட்டது. இக் கருவியின் மூலம் முதன் முதலில் ஜனங்கள் சலனப்படங்களைக் கண்டனர்.

1872-ம் ஆண்டில் எட்வர்ட் ஜே. மேபிரிட்ஜ் (Edward J Maybridge) தமது ஆராய்ச்சி சலனப்படங்களையும் அதை நோக்க ''ஸூ பிராக்ஸினே ஸ்கோப்'' (Zoo Proxinos cope) என்ற கருவியையும் கண்டு பிடித்து *1879*-ம் ஆண்டில் பேடண்ட் (Patent) வாங்கினுர்.

வட்ட வடிவமுள்ள ஒரு தொட்டியில் சிறு துவாரங்களை ஏற்படுத்தி, தொட்டிக்கு உட்புறத்தில் துவாரங்களுக்கு இடையில்படங்களை ஒட்டினுர். இப்படங்கள் ஓடும் குதிரை ஒன்றின் படமோ, அல்லது ஒரு நாட்டியத்தின் படமாகவோ இருக்கும். இத்தொட்டியை விசையாகச்சுற்றி, துவாரங்களின் வழியாகப் படங்களை நோக்கினுல் படங்கள் சலனத்தை வெளிப்படுத்தின.

1882-ம் ஆண்டில் டாக்டர் மாரே (Dr, E. J. Marey) வரிசைக்கிரமமாக படம் எடுக்கும் ஒரு கருவியைக் கண்டு பிடித்தார். இதில் ஒரு வினுடிக்கு *12* படமே எடுக்க முடிந்தது. *1889*-ம் ஆண்டில் இவர் பாரீஸ் நகர விழாவில் தெருக் காட்சிகளை தமது கருவியால் பிடித்து, ஜனங்களுக்குக் காட்டினுர். டாக்டர் மாரேவுடன் உதவக்கு இருந்த ஜார்ஜஸ் டெமனி (Georges Demery). இக் கருவியில் பல முன்னேற்றங்களை உண்டாக்கி, அவற்றைச் செய்யும் பொறுப்பை காமண்ட் (Gaument) என்பவரிடம் *1893*-ம் ஆண்டில் ஒப்படைத்தார். *1855*-ம் ஆண்டிலேயே அலெக்ஸாண்டர் பார்க்கர் என்பவர் ''பார்க்கஸீன்'' (Parkesine) என்ற ''ஸெலுலாய்ட்''க்கு ஒப்பான ஒரு ஒளிப் பதிவு செய்யும் வஸ்துவைக் கண்டு பிடித்து விட்டார். ஆனுல், *1887*-ம் ஆண்டில் இதுகை விடப்பட்டு, 'ஸெல்யூலாய்'டே எடுத்துக் கொள்ளப் பட்டது.

1889-ம் ஆண்டில் (Friese Greene) பிரீஸ் கிரீன் என்பவர் முற்றிலும் முதிர்ந்த ஒரு சினிமாக் கருவியை அமைத்தார். அச்சமயத்திலேயே தாமஸ் ஆல்வா எடிஸனும் ''கினிடோகிராப்'' (''Kinetograph'') என்னும் கருவியைக்கண்டு பிடித்தார். இக்கருவியின் மூலம் பிடித்த படங்களை ''கினிடாஸ்கோப்''(Kinetoscone) என்ற கருவியின் மூலம் காட்டினுர். *1895*-ம் ஆண்டில் ''அர்மா'' (Armat) என்றவர் (''Biograph Projeetor'') 'பயோகிராப்ப்ரொஜெக்டர்'' என்பதைச் செய்தார்.

இம்மாதிரி பல சிறிய கருவிகள் மூலம் முன்னேற்றப்பட்டு *1895*-ம் ஆண்டு டிஸம்பர் *28*-ம்



'தாமாதுரோப்'

ஜனங்களுக்குப் பாரிஸ் நகரில் சலனப்படம் காட்டப்பட்டது.

ஒரு விஞடிக்குப் பதினறு படங்கள் வீதம் பதிவு செய்யப் பட்டன. இப்படங்கள் இதே வேகத்தில் திரையில் காட்டப் பட்டன. உதாரணமாக ஒரு வன் கையை அசைக்கிருன் என வைத்துக் கொள்வோம். இவ்வசைப்பு பதினுருகப் படம் பிடிக்கப் பட்டது. முதல் படத் தில் கை கீழேயிருந்தால் அதே கை, கடைசிப் படத்தில் மேலே யிருக்கும். திரையில், முதல் படம் 1/16 விஞடிக்குக் காட்டப்படும். பிறகு இரண் டாவது படம் மற்ருெரு 1/16 விஞடிக்குக் காட்டப்படும். இம்மாதிரி 1 விஞடிக்குள் 16 படங்கள் திரையில் தோன்றித் தோன்றி மறையும். முதல் படத்தைப் பார்த்த கண், அப் படத்தை மூளைத் திரையில் சில சமயம் தாங்கி நிற்கிறது. அதற் குள் இரண்டாவது படம் திரை யில் தோன்றி விடுகிறது. இம் மாதிரியே 16 படங்களும் மனத் திரையில் இருந்து விட்டுப் போவதால், முழு சலனத்தை யும் பார்ப்பதாக ஒரு பிரமை ஏற்படுகிறது. ஆயினும் நாம் திரையில் உண்மையாகக் காண்பது முழு சலனத்தில் கிட்டத்தட்ட 1/32 பங்கே. படங்கள் திரையில் தோன்றித் தோன்றி மறைவதால்தான் இப்படங்களை நாம் கொட்ட கைக்குள் படமெடுக்க முடிவ தில்லை.

பேசாப் படங்களின் வேகம் 1 விஞடிக்குப்பதினறுபடங்கள் அல்லது 1 அடி. இப்பதினறு படங்களுக்குள் ஒருவன் ஏதா வது பேசுகின்ருன் எனக் கொள்வோம். இவன் பேச்சை ஒளி மூலம் அதே பிலிமில் பதிவு செய்ய இயலவில்லை. ஏனெனில் இப்பதினறு படங்களுக்கு உரிய ஒலி அலைகளை அதே நீளப் படங்களுக்குள் பதிவு செய்ய இயலாது. இக்குறையைப் போக்க, அறிஞர்கள், படத்தின் வேகத்தை விஞடிக்கு 24 ஆக்கி ஞர்கள். அப்படி யென்ருல், முன்பு 16 படங்களுக்குள் அடக்கப்பட்ட ஒரு சலனம் தற் போது 24 படங்களுக்குள் அடக்கப்பட்டது.

ஒரு அடி நீள பிலிமில் 16 படங் கள் உள்ளன. $1\frac{1}{2}$ அடியில் 24 படங்கள் உள்ளன. ஆகையால் பேசாப்படத்தில் ஒரு சலனம் ஒரு அடியில் எடுக்கப்படு மாஞல், பேசும் படத்தில் அதே சலனம் $1\frac{1}{2}$ அடியில் எடுக்கப் படும்.

தற்போதைய பேசும் படங் கள் 1 விஞடிக்கு 24 வீதம் எடுக்கப்பட்டு, அதே வேகத்தில் தான் திரையில் காட்டப்படும். காட்டப்படும் இயந்திரம்

(Projector) ஒரே வேகத்தி லேயே ஓடும். அதன் வேகத்தைக் குறைக்கவோ அதிகரிக்கவோ இயலாது. திரையில் நாம் சில சமயங்களில் காணும் "மெதுவான சலனங்கள்" (Slow motion) காமிராவில் செய்யப்படுகின்ற தந்திரங்களால்தான்.

பிலிம் சுருள் காமிராவில் ஓடும்பொழுது, அதன் பக்கங்களில் உள்ள துவாரங்களை இரு பற்கள் இழுக்கின்றன. பிறகு பற்கள் துவாரங்களினின்றும் விடுபடுகின்றன. இச்சமயத்தில் பிலிம் லென்சுக்கு எதிராக அசையாமல் நிற்கிறது. இது நடக்க 1/48 வினாடிகள் ஆகின்றன. நின்ற பிலிமில், ஒரு சட்டம் (Frame) படம் பதிவு செய்யப்படுகின்றது. பதிவு செய்யப்படும் நேரம் 1/48 வினாடி. ஆக மொத்தம், ஒரு சட்ட நீளம் பிலிம் இழுக்கப்பட்டு, படம் பதிவு செய்ய $1/48 + 1/48 = 1/24$ வினாடி ஆகின்றது. ஆகையால் 1 வினாடிக்கு மொத்தம் 24 சட்டங்கள் பதிவாகின்றன. படம் பதிவு செய்யப்படும் போதே அதற்கு உண்டான ஒலியும் அதே வேகத்தில் "ஸவுண்ட் ரிகார்டிங்" கருவியில் பிரத்யேகமாக மற்றொரு பிலிம் சுருளில் பதிவாகிறது. ஆக மொத்தம் படத்தின் நீளத்திற்குத் தக்க ஒலியும் அதே நீளத்தில் மற்றொரு சுருளில் தனியாகப் பதிப்பிக்கப்படுகிறது.

பிறகு, படத்தின் "நெகடிவ்"வும் அதன் ஒலியின் 'நெகடிவ்'வும் ஒரே சுருளில் (Positive) பதிவு செய்யப்படும்.

இதே படம் காட்டும் கருவியில் (Projector) ஓட்டப்படும் போது, ஒவ்வொரு சட்டமும் 1/48 வினாடிகளுக்குள் இழுக்கப்பட்டு, 1/48 வினாடிகள் அசையாமல் திரையில் காட்டப்படுகின்றன. படம் இழுப்பது, திரையில் தெரியாதிருக்கும் பொருட்டு, ஒரு சுழலும் தடுப்பு (Shutter) இக்கருவியில் உண்டு. இத்தடுப்பு, படம் லென்சுக்கு எதிராக இழுக்கப்படும்போது ஒளியைத் தடுத்து விடும். அப்போது திரையில் படமே காணப்படாது. படம் லென்சுக்கு அருகில் நின்றவுடன், இது ஒளியை அனுப்பும். படம் திரையில் தெரியும் நேரம் 1/48 வினாடி.

இப்படியாகப் படம், திரையில் வினாடிக்கு 24 ஆகத் தோன்றித் தோன்றி மறைவது வெகு வேகமாதலால் நம் கண்ணால் அதைக் கண்டு பிடிக்க இயலவில்லை. ஒரே படம்தான் திரையில் தோன்றுவதாக நினைத்துக் கொள்ளுகிறோம்.

படத்தின் ஓரத்தில் இருக்கும் ஒலிச்சுவடுகளினின்றும் மறுபடியும், பிரத்யேகக் கருவியால் ஒலி உண்டாக்கப்படுகிறது. இவ்வொலி, திரையின் பின்னால் மறைந்திருக்கும் ஒலி பெருக்கியின் மூலம் கிடைக்கிறது.

படத்துறையில் பிறகு ஏற்பட்ட முன்னேற்றம், வர்ணம். இவைகளுள் பல ரகங்கள் உண்டு. கேவாகலர், ஈஸ்ட்மன் கலர், வார்னர் கலர், ட்ரூ கலர், ஆன்ஸ்கோ கலர், டெக்னிகலர், ஸினிகலர், சூபர் ஃஸினிகலர், பெர்ரானியாகலர் முதலியவைகளே பழக்கத்தி லுள்ளன. இவற்றுள் தலை சிறந்தது டெக்னிகலரே. மற்றைய எல்லாக் கலர் படங்களும் ஒரே பிலிமில் பதிவு செய்யப்படும். ஆனால், டெக்னி கலர் படம் மாத்திரம் மூன்று

நெகடிவ்களில் பதிவு செய்யப்படும். அதாவது சிவப்பு, நீலம், பச்சை ஆகிய மூன்று வர்ணங்களைத் தனித்தனியே மூன்று பிலிம்கள் பதிவு செய்கின்றன. இதில் ஒரு நன்மையும் உண்டு. அதாவது வர்ணப்பாகுபாடு (Colour Composition) நமது இஷ்டப்படி செய்து கொள்ளலாம். மற்றைய வர்ணங்களில் இது முடியாத காரியமாகும். மேலும் ''பாஸிடிவ்'' தயார் செய்வது ரஸாயன முறையல்ல. அது அச்சு வேலையே.

டெக்னிகலர் படங்களை ரசித்த ஜனங்கள், ''இனி படங்களின் முன்னேற்றத்திற்கு எல்லை ஏற்பட்டது விட்டது'' என நினைத்தனர். அது தவறாயிற்று. ஐந்து வருஷங்களுக்குப் பின்னல் பிரஞ்சு விஞ்ஞானிகள் ''மூன்று புறப்''படங்களை (Three Diamension) ஜனங்களுக்குக் காட்டினர். அத்துடன்கூட ''மூன்றுபுறசத்தங்களை''யும் (Stereoponic Sound) இணைத்தனர்.

இதன் சூக்ஷ்மத்தை கவனிப்போம். நமது ஒவ்வொரு கண்ணும் ஒரு பொருளை இருவிதமாகக் காண்கின்றன. வலது கண் காணும் விதம் இடது கண் காண்பதைக் காட்டிலும் சற்று வித்தியாசமானது. அதாவது இரு கண்களும் ஒரே சமயத்தில் ஒரே பொருளை இருவிதமாகக் கண்டால், அப்பொருளுடைய ''ஆழம்'' (Depth) தெரியும். இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒரு காமிரா அமைக்கப்பட்டு, அதில் இரு லென்சுகளும் விலகி அமைக்கப்பட்டன. லென்சுகளின் விலகு தூரம் கண்களின் விலகு தூரத்திற்கு ஒப்பானது. அது சுமார் 2½ அங்குலங்கள் ஆகும். இவ்விரண்டு லென்சுகளாலும் இரு படங்கள் பிடிக்கப்பட்டு, திரையிலும் இரு படங்கள் காட்டப்பட்டன. இவ்விரு படங்களும் ஒரே சமயத்தில், சற்றுப் பிரிந்து காணப்படும். இதைப் பார்க்க ஒரு பிரத்யேகக்கண்ணாடி உபயோகிக்கப்பட்டது. அவை ''போலராய்ட்'' கண்ணாடிகள் (Poloroid Viewers) என அழைக்கப்பட்டன. இக்கண்ணாடிகளின் உதவியால் இரு படங்களும் ஒன்று சேர்க்கப்பட்டு, அதில் ''ஆழமும்'' (Depth) தெரிந்தது. காட்சிகள் தத்ரூப மளித்தன. ரயில் நம்மை நோக்கி வருவது போலவும், சிங்கம் பாய்வது, கட்டிடம் இடிந்து விழுவது முதலிய பயங்கரக் காட்சிகள் நம்மை திகைக்க வைத்தன.

இதன் பிறகு தோன்றியதே ''ஸினிமாஸ்கோப்'' (Cinemascope) இம்முறையில் பரந்த காட்சிகள் (Wide angle) பக்கவாட்டில் அமுக்கப்பட்டு ஒளிப்பதிவு செய்யப்பட்டன. அதைத் திரையில் காட்டப்படும்போது பக்க அமுக்கம் மட்டிலும் விரித்துக் காட்டப்பட்டது. இதற்காக உடயோகப்படுத்தப்பட்ட தனி லென்சுக்கு ''அனமார்பிக்'' (''Anamorphic'') லென்சு எனப்பெயர். இதேபோல் ''பாரமவுண்ட்'' கம்பெனியார் தங்களுக்கென ஒரு தனிமுறையை ஏற்படுத்திக் கொண்டனர். இம்முறையே ''விஸ்டா விஷன்'' (Vista Vision) ஆகும்.

சினிமாக்கலை நாளுக்குநாள் முன்னேறி வருகிறது. பேசாப் படங்களிலிருந்து, முப்புறக் கலர்ப்படங்கள் வரை பார்த்து விட்டோம். இவ்வருஷம் நாம் ''ஸினிமாஸ்கோப் 55'' என்ற புது முறையையும் பார்த்து விட்டோம். இன்னம் என்னென்ன விந்தைகளைக் காணப்போகிறோமோ? ★

உப்பு

எஸ். மகாலிங்கம்

இந்திய சர்க்காரின் பிலிம் டிவிஷனில் ''உப்பின் கதை'' என்ற டாகுமெண்டரி படத்தை நான் சமீபத்தில் பார்க்க நேரிட்டது. அதில் உப்பின்வரலாற்றையும், பல வகையான உப்புக்களையும், அவைகளின் தன்மைகளையும், அவைகள் எங்கெங்கு காணப்படுகின்றன. எப்படியெப்படி எடுக்கின்றார்கள், அவைகளுக்கு என்னென்ன உபயோகங்கள் என்பதைப்பற்றி காட்டி, 'உப்பே உயிரின் ஜீவநாடி' என்று சித்தரிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்த பொழுது 1954-ம் ஆண்டில் பிரபல 'ஹிந்து'ப் பத்திரிகையின் ஞாயிறு பதிப்பில் எட்மண்ட் ராபர்ட்ஸ் என்ற ஆங்கிலேயர் உப்பைப் பற்றியும், அதன் விசேஷ குணங்களைப் பற்றி எழுதியிருந்ததும், அதைத் தொடர்ந்து ''ஹிந்து'' வாசகர்கள் சரமாரியாக ஆசிரியருக்கு கடிதங்கள் எழுதியதும், கடைசியாக ஆசிரியர், ''இந்த விஷயத்தைப் பற்றிய கடிதங்கள் இத்துடன் முடிவு பெறும்'' என்று குறிப்பிட்டதும் என் நினைவுக்கு வந்தன.

எட்மண்ட் ராபர்ட்ஸ் எழுதியிருந்த கட்டுரையின் சாராம்சம் பின் வருமாறு: உப்பு பழைய காலத்திலிருந்தே மனிதனுக்குத் தெரிந்த பொருள். உப்பு இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது. உப்பே உயிர் நாடி. உப்பே நாகரீகத்தின் அடையாளம். உப்பு இல்லாவிட்டால், நாகரீகமுள்ள மனிதன் நாலே நாளில் நாறிப் போய்விடுவான்.''

இந்தக் கட்டுரையைப் பார்த்தவுடன் தெஹிரான் சர்வகலாசாலையில் தொண்டாற்றி வந்த பிரபல பேராசிரியர் டாக்டர் குன்ஹன் ராஜா ''ஹிந்து'' ஆசிரியருக்கு ஒரு கடிதத்தை வரைந்து தள்ளிவிட்டார்: ''உப்பில்லா விட்டால் உயிர் போய்விடுமாமே! இது சுத்தத் தவறு. மகா அபத்தம். உயிர் வாழ்வதற்கு உப்பு அவசியம் என்பதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. சமீப காலமாகத்தான் உப்பை உணவோடு கலந்து உட்கொள்வது பழக்கத்தில் இருந்து வருகின்றது. இந்தியர்களும், இரானியர்களும் உப்பைப் பற்றி முன்பே அறிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு புராணங்களிலோ அல்லது வேதங்களிலோ ஆதாரமோ, சான்றோ கிடையவே கிடையாது. இந்து முறைப்படி சிரார்த்த காலங்களில் கடவுளுக்கும், நம் மூதாதையர்களுக்கும் உப்பை நைவேத்யம் செய்வதில்லை. மலபார் ஜில்லா பூராவிலும் குருவாயூர் கோயில் ஒன்றைத் தவிர, மற்ற கோவில்களில் உப்பிட்ட உணவுப் பொருள்களை நைவேத்யம் செய்வதில்லை. ஆயுர்வேத முறையில் மந்தமான சூலை, அசுத்த இரத்தம் போன்ற பல வியாதிகளுக்கு உப்பில்லா உணவைத்தான் கொடுக்கிறார்கள். நான் பல முறை உப்பில்லாமல் இருந்திருக்கின்றேன். ஏன், கடந்த 18 மாதங்களாக உப்பில்லாத உணவைத்தான் உட்கொண்டு உயிருடன் இருக்கின்றேன். உடம்பு அதனால் பாதிக்கப்படவில்லை. உடம்பில் ஒருவிதமான கோளாறோ, வியாதியோ ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக உப்பில்லா ஆகாரத்தினால் உடம்புவலுவடைந்து மிகவும் சுறுசுறுப்பாக இருக்கின்றேன். மஞ்சக்காமாலையினால் கஷ்டப்படும் பொழுது உப்பில்லா ஆகாரமில்லாமல் சில மாதங்கள் இருந்தேன். பூரண குணம் கிட்டிவிட்டது. ஆரோக்கியத்தற்கும், வாழ்க்கைக்கும் உப்பு அவசியம்தானா என்று அலசி, ஆராய்ந்து பார்ப்பதற்குரிய விஷயம்''.

இதைத் தொடர்ந்து இன்னொருவர் குன்ஹன் ராஜா கடிதத்துக்கு பதில் எழுதினார்: குன்ஹன் ராஜா எழுதியிருந்ததைப் படித்தேன். மிகவும் வியப்படைகின்றேன். அவரா வேதங்களில் உப்பைப் பற்றிக் குறிப்பில்லை என்று சொல்

னுகிறார்? இதோ இருக்கிறது, பாருங்கள்.

"'சாண்டோக்ய உபநிஷத்தில்' உத்தாலகா, ஸ்வதகேதுவுக்கு கட்டளையிடும்பொழுது லவணத்தைப் (உப்பைப்) பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதுமட்டுமா, கடவுளுக்கும் நம் மூதாதையருக்கும் உப்பு நைவேத்யம் கிடையாதா என்ன? இது சுத்த அபத்தம். மலபார் ஜில்லாவில் இல்லாவிட்டால் என்ன? தமிழ் நாட்டைப் பாருங்கள். உப்பிலியப்பன் கோவில் தவிர, பாக்கி எல்லா கோயில்களிலும் உப்பிட்ட உணவைத்தான் கடவுளுக்கு அர்ப்பணிக்கிறார்கள். பிரசித்திபெற்ற திருப்பதி, ஸ்ரீரங்கம் கோவில்களில் கடவுளுக்கு உப்பில்லா பத்தியம் கிடையாது."

மறுநாள் இதைத் தொடர்ந்து மற்றொருவர் எழுதினார்: "சாண்டோக்ய உபநிஷத்தில் ஏதோ ஒரு வரியைத்தானே நேற்று எழுதினவர் சுட்டிக் காட்டினார். அதில் போகிற போக்கில் உப்பைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இதோ பாருங்கள் உபநிஷத் காலங்களில் மட்டுமல்ல, உபநிஷத் காலத்துக்கு முன்பே 'ஸதாப்த பிரஹ்மணாவில்' "உப்பு மூட்டைகளாகவே அவனிடம் எறிந்தார்கள்" என்ற குறிப்பு இருக்கின்றது. இன்றும் அநேக இடங்களில் உப்பைப்பற்றிய அநேக குறிப்புகள் இருக்கின்றன. அது மட்டுமா? இந்த உப்பு ஒரு புனிதமான பொருள்; பூஜிக்கத் தகுந்தபொருள் பழைய காலத்தில் முன்னோர்கள் உப்பிட்ட உணவைச் சாப்பிடுவதினால் அந்நியோன்ய உறவும், பரஸ்பர நம்பிக்கையும் உண்டாகிறதென்று எண்ணினார்கள். இதோ இருக்கிறது சான்று" என்று பல மேற்கோள்களை எடுத்துக்காட்டியிருந்தார்.

இப்படியாக உப்பைப்பற்றிய கடிதங்கள் வந்த வண்ணமாக இருந்தன. மலபாரில் ஒரு "உப்புச் சாமியும்", தமிழ் நாட்டில் ஒரு "உப்பில்லா சாமியும்" இருக்கின்றனவே? ஒருவர் சொல்லும் அபிப்பிராயத்துக்கு விதி விலக்காக இந்த சுவாமிகள் அமைந்திருக்கின்றனவே? இந்த உப்பில்லா சாமியை மலபாருக்கு அனுப்பி விட்டு, அந்த குருவாயூர் உப்புச் சுவாமியை தமிழ் நாட்டிற்கு கொண்டு வந்து விட்டால் என்ன வென்று தோன்றிற்று. ஒருவர் உப்பில்லாவிட்டால் உயிர்போய் விடுமென்கிறார். மற்றொருவர் உப்பில்லாமல் லக்கஞ்சி குடிக்கலாம் என்கிறார். கடவுள் உப்பை விரும்புகிறார் என்று ஒரு கட்சி; கடவுள் உப்பை வெறுக்கின்றார் என்று மற்றொரு கட்சி.

"நெய்யில்லா உண்டி பாழ்" என்ற வசனம் இருந்தாலும், நெய்யில்லாமல் எண்ணெய்யையோ அல்லது வனஸ்பதியையோ ஆகாரத்தில்விட்டுக்கொண்டால், உண்டி பாழாகாமல் உள்ளே சென்று விடும். ஆனால், "உப்பில்லா உண்டி பாழ்" என்று சொல்லுவதுதான் முற்றிலும் பொருந்தும். இது அனுபவம் கண்டறிந்த உண்மை. பருப்பில் உப்பு போடாமல் என்னதான் அப்போதே காய்ச்சிய வெண்ணெயிலிருந்து கிடைக்கும் மணமுள்ள நெய்யை ஊற்றிக் கொண்டாலும், உப்பில்லாத அச்சோறு ஒரு சோறு அல்லது அது தான் உள்ளே செல்லுமா? அதே போல்தான் உப்பில்லாத மற்ற எல்லா பண்டங்களும். ஆகையினால்தான் "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்று சொல்லுகிறார்கள்.

உப்பின் சிறப்பை இலக்கியவாயிலாகவும் நாம் எடுத்துக்கூற தமிழ் மூதாட்டி ஒளவையே ஒரு செய்யுள் இயற்றியிருக்கிறாள். 'ஒப்புடன் முகமலர்ந்து, உபசரித்து, உண்மை பேசி உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே அமிர்தமாகும்.' 'உணவிற்கு மிக முக்கியமான உப்பு, உணவில் சேராவிடினும் பாதகமில்லை. ஆனால் முகங்கடுத்து உணவு பரிமாறாதே!' என்பதே பொருள். உப்பின் சிறப்பை உணர்த்த இன்னும்வேறு உதாரணம் வேண்டுமா? ★



சுவாமிமலை

என். வி. ஆர். சாமி

முருகப் பெருமான். சூரபத்மன் மேல் படையெடுத்துச் செல்லுகையில் தங்கிச் சென்ற திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, அழகர் கோவில் என்ற ஆறுபடை வீடுகளில் இது நான்காவதாகும்.

இந்த ஸ்தலம் மாயவரம்-தஞ்சை ரயில் பாதையில் கும்பகோணத்திலிருந்து ஐந்து மைல் தூரத்தில் இருக்கிறது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து கோயில் இருப்பிடம் சுமார் 6 பர்லாங்கு தூரம் இருக்கிறது. நடுவில் அரசலாறு, காவிரி இரு நதிகளையும் கடந்து செல்ல வேண்டும். கும்பகோணம்–திருவையாறு பஸ்ஸில் சென்றால், நேராக கோயில் வாசலிலேயே இறங்கலாம்.

பிருகு முனிவர் இட்ட சாபத்தால் பிரணவ மந்திரத்தை மறந்த சிவ பெருமான், தன் குமாரன் முருகனி



சிற்ப வேலைப்பாடமைந்த ராஜகோபுரம்.

டம் உபதேசம் கேட்டார். அவ்விதமே குமரனும் தன் தந்தைக்கு உபதேசித்தார். "நீதான் எனக்கு சாமி. ஆதலால் இந்த ஸ்தலம் சுவாமிமலை என்று வழங்குக" என்று சிவபெருமான் ஆணையிட, அன்றுமுதல் இது சுவாமிமலை என்று வழங்கி வருகிறது. "திருவேரகம்," "குருமலை" என்ற இதர பெயர்களும் உண்டு. தகப்பனாரான சிவன் சிஷ்யராகவும், அவரது குமாரன் முருகன் (சுப்ரமண்யம்) குருவாகவும் இருந்தமையால், இங்கு சிவன் விக்ரகம் கீழேயும், சுப்ரமணியர் விக்ரகம் மலைமீதும் காணப்படுகிறது.

கோயிலின் பொதுத்தோற்றம்.

கிழக்கோபுரமும், மேலக்கோபுரமும் தலையீடில்லாமல் இருந்த போதிலும், தெற்குப்புறத்தில்இருக்கும் ராஜகோபுரம், ஐந்து நிலை



கோயிலின் உட்புறமுள்ள புஷ்கரணி.

களுடன் மிகப்பெரியதாக இருக்கிறது. அடிவாரத்தில் முதல் பிரகாரமும், நடுவில் இரண்டாவது பிரகாரமும், மலையுச்சியில் சுவாமிநாதஸ்வாமியைச் சுற்றி மூன்றாவது பிரகாரமும் அமைந்திருக்கின்றன.

முதல் பிரகாரத்தில் கணபதி, சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, வள்ளி தெய்வானை சமேதருடன் முருகப் பெருமான் வீற்றிருக்கிறார். மிக நுட்பமான வேலைப்பாடுடன் விளங்கும் தக்ஷிணாமூர்த்தியின் விக்ரகம் பார்ப்பவர்கள் மனதைப் பரவசப்படுத்துகிறது. மீனாட்சியம்மன் சந்நதிக்குப் பக்கத்திலுள்ள வசந்த மண்டபத்தை யொட்டி மலையேறும் படிகள் அமைந்திருக்கின்றன. அதைக் கடந்து மேலேறி நடுப்பிரகாரத்தை அடைந்தால், தெற்கு நோக்கி நேத்திர விநாயகரும், பொன் முலாம் பூசப்பெற்ற கொடி மரமும் காட்சி யளிக்கின்றன. பிறவிக்குருடன் ஒருவன் பசியினால் வருந்தி உண்ணாவிரதம் இருந்து, இங்குள்ள புஷ்கரணியில் நீராடியதும், ஒரு சிலர் அவனை இந்த விநாயகர் சந்நதிக்கு அழைத்துச் சென்றனர். அவரது கருணையால் அவன் மீண்டும் தன் பார்வையை அடைந்ததால், அது முதல் 'கண் கொடுத்த விநாயகர்' என்ற மற்றொரு பெயரும் இவருக்கு ஏற்படலாயிற்று.

மற்ற எல்லா ஸ்தலங்களிலும் சுப்ரமண்யருக்கு முன்பாக நாம் மயிலைத்தான் காண முடிகிறது. ஆனால், இங்கு 'ஐராவதம்' என்று கூறப்படும் வெள்ளை யானையைக் காண்கிறோம். அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட இந்திரனை, கடவுள் காப்பாற்றியதால், இந்திரன், ஐராவதத்தை தன் ஞாபகார்த்தமாக நிறுத்தி வைத்ததாகப் புராணம் கூறுகிறது. சுப்ரமண்யருக்கு முன்பு மயில் வாகனம் காணப்படாமல், ஐராவதம் காணப்படுவது இந்த ஒரு இடத்தில்தான்! ஆதலால் இதை விசேஷமாகக் கூறி வருகின்றனர். பின் புறத்தில் விநாயகரும், உற்சவமூர்த்தி

களான சுப்ரமண்யர்(வள்ளி-தெய்வானையுடன்),விசாலாட்சிவிசுவநாதர், இலட்சுமி-சரஸ்வதி, சந்திரசேகரர் முதலானவர்கள் வீற்றிருக்கின்றனர்.

சுவாமிநாத ஸ்வாமி உள் மண்டபத்தில் தெற்கு நோக்கி 'சபாபதி' என்ற பெயருடன் தெய்வயானையோடு நான்கு கரங்களுடன் முருகன் காட்சி யளிக்கிறார். தெய்வயானையுடன் மட்டும் முருகன் வீற்றிருக்கும் கோலம் வேறெங்கிலும் காணமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்த அறையில் மாரி, பிடாரி, ஐயனார், வீரபாகு, நாரதர் முதலியவர்களது உருவங்கள் விளங்குகின்றன. சுப்ரமண்யருக்கும் (சந்திரசேகரர்) பக்கத்தில் மயில் வாகனத்தில் தண்டபாணி எழுந்தருளியுள்ளார். இடது கை சிறிது பின்னப்பட்டு காணப்படுகிறது. ஹைதர் காலத்தில்விக்ரகங்கள் உடைக்கப்பட்டது இதற்குக் காரணம் என்று கூறுகிறார்கள்.

கோயில் மண்டபத்து தூண் ஒன்றில் கார்த்த வீர்யாச்சுனன் என்ற அரசனது சிலை காணப்படுகிறது. இந்த அரசன் தான் முதலில் இக் கோயிலுக்குத் திருப்பணி செய்தது தாகக் கூறுகிறார்கள்.

அடிப்பிரகாரத்தின்கீழ்ப்புறத்தில் இருக்கும் நெல்லி மரம், பார்வதியால் சபிக்கப்பட்ட பூமிதேவி யென்று ஸ்தல புராணம் கூறுகிறது. கீழேயிருந்து மலையுச்சிக்குச் செல்லும் அறுபது படிகளும். பிரபவ முதலிய அறுபது வருஷ தேவர்களும் படிகளாக அமர்ந்திருப்பதாக ஐதீகம்.

பிரதி மாதம் கிருத்திகை தினம் இங்கு பிரபல்யமாய்விளங்குகிறது. அன்று கோவிலில் ஜனக்கூட்டம் தாங்க முடியாது. இக்கோயிலின் உற்சவங்களில், கார்த்திகை, புஷ்யம், சித்திரை இம்மூன்று பிரம்மோற்சவங்களும், ஸ்கந்த சஷ்டியும், ஸ்ரீ வள்ளி கல்யாணமும் முக்யத்வம் வாய்ந்தவை. இதைத் தவிர, பலவிடங்களிலிருந்தும் திரளான ஜனங்கள் இங்கு வந்து வேண்டுதல்களைச் செலுத்தி வருகின்றனர். காது குத்தல், முடி கொடுத்தல், காவடியெடுத்தல், கல்யாணம் செய்தல் முதலியவற்றிற்காக வருவதுண்டு. சமீபத்தில் இக் கோயிலில் முருகனுக்கு கனகாபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெற்றது. ★

தவளையின் மகிழ்ச்சி

உருவத்தில் பெரிதானதும், மிக்க பலம் வாய்ந்தது மான யானை, வஞ்சகர் குழியில் விழும்போது, அற்ப பிராணியான தவளைகூட தாவி வந்து தன் பின்னங் காலால் அதை ஒரு தரம் உதைத்து மகிழுமாம்!

—ஒரு வங்கப் பழமொழி

நிழலும் தொடராது!

வெளிச்சத்தில் இருக்கும் வரைதான் உன் நிழலும் உன்னைப் பின் தொடரும். இருளை நீ அடையும் அதே விநாடியில் உன் நிழலும் உன்னை விட்டு மறைந்து விடும். வாழ்வில் தாழ்ந்தவன் தனித்து நிற்பதன் காரணம் இது தான்.

—பரமஹம்ஸர்

மகாதேவி

சரஸ்வதி ராம்நாத்

''மலர்கின்றது மலர்
வாடி உதிரவே,
உதிக்கின்றது நிலவும்
மறைவதற்கே,
நிறைவுறு முகிலும்
பொழிவதற்கே,
ஒளிரும் தீபமும்
அணைவதற்கே,
நிலை பெற்ற யௌவனம்
அது யாருடையது?
ஓ...ஓ...நிலையற்ற
வாழ்வல்லவோ இங்கே!''

என ஹிந்தி இலக்கிய வானில் ஆன்மார்த்த கவி பாடித் திரிகின்ற வண்ணப் பறவைதான் ஸ்ரீ மகாதேவி வர்மா அவர்கள். இன்றைய ஹிந்தி இலக்கியத்தில் அவருக்கெனத் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்ததொரு இடமுள்ளது. அவருடைய பேனா முனையிலிருந்தும், தூலிகையிலிருந்தும் பிறக்கும் கவிதைகள், கட்டுரைகள், பேனாச் சித்திரங்கள், ஓவியங்கள் என யாவுமே தனிச் சிறப்பு வாய்ந்தவை. இலக்கியப் பாதையில் அதுவும் புதுமை இலக்கியத்தை வகுத்துச் செல்லும் முற்போக்குப் பாதையில் ஹிந்தி இலக்கியம் பெரும்பாலும் மேலை நாட்டு இலக்கிய வழியை பின்பற்றி வருகிறது. ''ஆன்மார்த்த வாதம்'' எனப்படும் (Mysticism) பிரிவைச்சார்ந்த கவிதைகளை இயற்றி வருபவர் ஸ்ரீ மகாதேவி அவர்கள். ''தற்கால மீரா'' என்றும் இவர் அழைக்கப்படுகிறார். இவ்வழி நமக்குப் புதியதல்ல. தொன்றுதொட்டு நம் பண்டைநாளைய மரபிலே ஊன்றி வளர்ந்திருக்கும் எண்ணம்தான் அது. ஆத்மா தன் காதலனான பரமாத்மாவை நினைந்து உருகுவதும், பிரிவாற்றாமையினால் துயருறுவதும், அவ்வழியா காதலும்..கவிகளுக்கு என்றுமே தங்கள் உள்ளக் கிடக்கையை வெளியிடத் தூண்டுகோலாக அமைகிறது. இவருடைய கவிதைகளிலே ஆன்மீகக் காதலின் வேதனையை, துடிப்பை, விரகதாபத்தைக் காணலாம். உஷையின் பொன்னொளியில் கவியின் உள்ளம் கனிந்துருகி பாடுகிறது. அந்நதியின் சோகமயமான மங்கிய ஒளியில் கவியுள்ளம் நெட்டுயிர்க்கிறது. மகாதேவியின் கவிதைகளில் இனிய கற்பனை, தெய்வீக அழகு. பொருள்நயம், சொல்லழகு, உவமையின் சிறப்பு, கவிதைகளிலே உயிர்த்துடிப்பை ஏற்றும் இசை, பாவ சித்திரம்... என எல்லாச் சிறப்பும் நிறைந்திருக்கக் காணலாம். அக்கவிதைகளிலே ஒலிக்கும் வேதனை....நம்முள்ளத்தை தன்பால் இழுக்கிறது. அவருடைய கவிதைகள் யாவற்றிலும் 'விரவி நிற்கும் இவ்வேதனையை, கருணையைப் பார்க்கும் போது, ஒருக்கால் உலக வாழ்வின் கஷ்ட நஷ்டங்களும், துயரும், வேதனையும். கவியுள்ளத்தில் ஆழ்ந்துயரைத் தோற்றுவித்து, அவ்வனுபூதியினால் கவியின் நோக்கு ஸ்தூல உலகை வாழ்வை விட்டு விலகி நின்று, சூஷ்மமான பாவ உலகில் சஞ்சரிக்கச் செய்கின்றதோ என்று தோன்றுகிறது. மகாதேவி அவர்களின் கவிதையில் ஒலிக்கும் இக்குரலுக்கு பல விமர்சகர்கள் பற்பல காரணங்களைக் காட்டுகிறார்கள். ஆனால், மகாதேவி என்ன சொல்கிறார் தெரியுமா?

இன்பமும் துன்பமும், வெயிலும் நிழலும், ஊடும் பாவும் போல் இழைந்து கிடக்கும் இவ்வாழ்வில் எனக்கு ஏன் துன்பம் பிரியமானதாக இருக்கிறது? அநேகருக்கு இது வியப்பை அளிக்கிறது. உலகம் எதைத் துக்கம் என்றும் தனக்கு கிட்டாதது என்றும் கருதுகிறதோ. அவ்வித அனுபவமோ, உணர்வோ எனக்கு ஏற்பட்டதில்லை. என் வாழ்வில் சீராட்டும், பாராட்டும், அன்பும், ஆதரவும் கிட்டியது. துன்பத்தின் சாயலே அதில் படியவில்லை. ஒருக்கால் இதனால்தான் வேதனை...எனக்கு இவ்வளவு பிரியமானதாக இருக

கிறதோ என்னமோ? ''துன்பம்'' என்னைப் பொருத்த வரையில் உலகம் முழுமையும் ஒன்ருகப் பிணைக்கும் சக்தி வாய்ந்த காவியமாகும்'' ஆம், துன்பமேஒரு காவியம்'' என்கிருர் கவி. ஒரு கவிதையில் அவர் பாடுகிருர்:

''என் சின்னஞ் சிறு
 வாழ்வில்,
திருப்தியைத் துளியும்
 தந்து விடாதே,
இருக்கட்டும் தணியா
 தாக மது,
வற்ருத கண்ணீர்
 பெருக்கட்டும்.''

தன் எழுத்துக்களில் வற்ருத கருணை ஊற்றைப் பெருகி ஓடச் செய்யும் இவர், தன் வாழ்வில் எப்பொழுதும் கலகலவென்று சிரித்துக் கொண்டிருப்பவர். ஓர் விமர்சகர் வியந்து எழுதுகிருர். ''குமுறும் எரிமலை மீது படிந்த வெண்ணிலவின் ஒளிதானு இச்சிரிப்பு?'' ஆம் பிரௌனிங் போல இவரும் அடையப் பெருத ஆசைதான் வாழ்வென்கிருர்.

மெஞ்ஞானக் காதலின் விரகம், தாபம், விரகத்திஞல் வாடும் நாயகியின் உள்ளம், ஆன்மீக காதலஞன பரம் பொருளின் அழகு. உலகின் ஒவ்வொரு அணுவிலும் வியாபித்து நிற்கும் அவன் சக்தியை அழகிய உவமைகளோடு, கவி சித்தரிக்கும் போது, நம் இதயம் சிலிர்க்கிறது.

''அசையாத இவ்
 வடி வானம் போல்
என் வாழ்வில் நீ
 அண்மையில் இரு,
ஆனுல் எட்டி நான்
 உன்னைப் பிடிக்கும்,
போதிலும் எனக்கு நீ
 எட்டாதவனுகவே இரு.''

என்கிருர். பௌத்த தர்மத்தின் ''துக்கவாதம்'' சங்கரரின் அத்வைதம், கபீரின் ஆன்மீக காதல், ஏகாத்மவாதம் முதலியவற்றின் பிரபாவத்தை நாம் இவருடைய கவிதைகளிலே காணலாம். ஸ்ரீ மகாதேவி கவி மட்டுமல்ல. சிறந்த ஓவியர், ''தீப ஒளி'' என்ற கவிதைத் தொகுப்பில் ஒவ்வொரு கவிதைக்கும் அவர் தீட்டியிருக்கும் பாவ சித்திரங்களை நாம் காணலாம். சூஷ்மான ரேகைகளும், அற்புதமான பாவமும், காவியத்தை ஓவியமாக கண் எதிரே தோற்றுவிக்கின்றன. பிரயாகை மகிளா வித்யாலயத்தின் தலைமை ஆசிரியை அவர். எம். ஏ. பட்டம் பெற்றவர். தற்சமயம் ரிக் வேதத்தை ஹிந்தி கவிதையாக மொழி பெயர்த்து வருகிருர். தன் கற்பனையையும், காவியத்தையும் பொருத்த வரையில் உலக வாழ்வுடன் ஒட்டாது, ஆன்மிக உலகில் சஞ்சரித்தாலும், தன் அன்ருட வாழ்வில் அவர் மனித குலத்திற்கு அதுவும் முக்கியமாக, அபலை பெண் குலத்திற்கு சேவை புரிந்து வருகிருர். இரவு, பகல் பாராது ஓயாது பணியாற்றும் இவர், ''இலக்கியம் என்னுடைய ஓய்வு நேரத்தின் பொழுது போக்கு'' என்கிருர். ஆனுல், இலக்கிய உலகு இவர் கூற்றை ஆதரிக்கவில்லை. இவருடைய கட்டுரைகளில் நாம் வேறொரு மகாதேவியைத்தான் சந்திக்கிறோம். ''நினைவின் ரேகைகள்,'' ''கடந்த கால நினைவுகள்'' என்று பேனு சித்திரங்களின் தொகுப்பு — இவருடைய எழுதுகோலின் வன்மையை, பாவம் நிறைந்த உள்ளத்தை எடுத்துக் காட்டுகிறது. பெண்களின் நிலை குறித்து எழுதப்பட்ட ''விலங்கின் சங்கிலிகள்'' மிக மிகச் சிறந்த நூலாகும். இவருடைய கவிதைத் தொகுதிகள் ''தாரகை, கிரணங்கள், தாமரை, சந்தியா கீதம், 'யாமா'. என்ற தலைப்பில் வெளி வந்துள்ளன.

''மகாதேவி'' வர்மா, இந்தியப் பெண் குலத்திற்கே பெருமையூட்டும் தலைசிறந்த கவி ஆவர். ஹிந்தி இலக்கியம் மட்டுமல்ல, பாரதமே பெருமைப் படக்கூடிய பெண்ணரசி இவர்.

அவருடைய எழுத்தோவியங்கள் நினைவில் என்றும் நிலைத்திருக்கும் அமரத்தன்மை பெற்றவை. பெண் உள்ளத்தே கற்பனு லயத்துடன் எழுந்த பொன் எழுத்துக்கள் அவை. ★

ஒவ்வொரு நாளும் சூரியன் அஸ்தமனம் ஆகிறது. எத்தனையோ கோடி மக்கள் அதனைப் பார்க்கின்றனர். கோடி கோடி மக்களுள் எத்தனை பேர் அந்த இயற்கைக் காட்சியை அனுபவிக்கின்றனர்? ஒரு சிலர் மட்டுமென்றே சொல்லலாம். "சூரியஸ்தமனம் அழகானதென்கிறாய், அதனை நிரூபி" என்கிறார் ஒரு நிபுணர். "எவ்விதத்தில்?" என்றேன். "பார்! இரண்டும் இரண்டும் நான்கு. இரண்டு விரல்களுடன் இரண்டு விரல்களைக் கூட்டி எண்ணினால், நான்கு விரல்கள் ஆகின்றன. அவ்விதத்தில் நிரூபி" என்றார். நியா

டைய உள்ளத்திலே, மற்றைய கோடி கோடி மக்களில் இல்லாத மேம்பட்ட வளர்ச்சி காணப் படுகின்றது. புனிதமான நோக்கம் அவர்கட்குண்டு. அந்த நோக்கம் என்றும் பிரகாசித்துக் கொண்டே கிரணங்களைப் பரப்பும். எப்பொருளை அவர்கள் நோக்குகின்றார்களோ, அப்பொருளில் அவர்களின் சக்தி ஊடுருவிப் பாய்ந்து.புலன்கட்குத் தோற்றாமல் புதைந்திருக்கும் சூட்சுமமான பொருளைக் கவர்ந்திழுக்கின்றது. இவர்கள் இலைமறை காய் போல், ஒவ்வொரு நாட்டிலும் காலத்திற்குக் காலம் தோன்றுகின்றனர் பாமர மனி

இயற்கையும் இறைவனும்

கோ. சண்முகபாரதி

யத்தினால் அதன் அழகைக் காட்ட முடியுமா? அதனை மனிதன் அனுபவித்து அறிய வேண்டும், எல்லோருடைய உள்ளமும் இந்த அனுபவத்தைப் பெற வாய்த்ததல்ல. அதற்குரிய பண்பாடு அவரவர் உள்ளத்தில் ஊற வேண்டும். அது ஒரே நாளில் ஆவதொன்றன்று, ஊழிதோறூழி பெற்ற மெய்யுணர்வினால் உண்டாவது,

உலகிலே ஒருகைப்பிடியாக ஒரு சில மனிதர் அவதரிக்கின்றனர். அவர்கள் எந்த நாட்டில் எந்தப் பண்பாட்டைத் தழுவி, எந்தப் பாஷையைப் பேசி, வாழ்ந்தாலும் சரி, அவர்களு

தனுக்கும் இவர்கட்கும் என்ன பேதமென்றதை இத்திருஷ்டாந்தத்தினால் விளங்கிக் கொள்ளலாம். வானளாவி வளர்ந்த சந்தன மரத்தின் பெரிய துண்டமொன்று நம் முன்னிலையில் இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அதனைப் பலர் திருப்பித் திருப்பிப் பார்க்கின்றனர். ஒரு தச்சன் பார்த்து விட்டுத் திருக்கல் வண்டிக்கு ஏற்றதென்றான். வயது முதிர்ந்த ஒரு பாட்டி, அடுப்பெரிக்க வாய்த்ததென்றாள். குழந்தை கௌரி, "இத்துண்டம் இங்கேயே இருக்கட்டும்; மாலை நேரத்தில் ஏறிக் குதித்து விளையாடலாம்" என்றாள்.

சிறந்த ஒரு சிற்பி கண்டான். ''ஆகா! இத்துண்டத்துள் எத்தனை குழந்தை கிருஷ்ணர்கள் வசிக்கின்றனர். தவழும் கிருஷ்ணனுக நூறு விக்கிரகங்கள் சிருஷ்டிப்பேன்'' என்ருன். ஒரே மரத்துண்டத்தின் உபயோகத்தைப் பலர் பலவாறு கணித்தனர். அவரவர் கரிசனைக்கும் உள்ளப் பண்பிற்கும் இசைய அத்துண்டத்தின் உபயோகம் தென்பட்டது. இவ்வாறே மக்கள் மனப் பண்பும் பலவேறு வகைப்படும். நுண்ணறிவும் மெய்யுணர்வும் வாய்ந்த உள்ளம் ஒரு சிலருக்கே உண்டு. அவர், தம் அகத்தெழு மெய்ப் பொருள்களினுல் ஆனந்தங் கொள்வர். சிந்தையையும் புலன்களையும் ஒருவழிப்படுத்த வல்லவர். ஒரு பொருளை 'இன்னதுதான் இது' என ஐயந்திரிபற நிர்ணயிக்க வல்லவர். தம்மிலுள்ள சக்தியைக் கண்டு அனுபவிக்க வல்லவர். தம்மைச் சூழ்ந்த இயற்கையில் போர்த்திருக்கும் சக்தியையும் உணர்ந்து, அதன் வடிவங்களைக் காண வல்லவர். இவர்களே உலக மக்கட்கு உபதேசஞ் செய்யும் தீர்க்கதரிசிகள். பாமர மக்கள் காண்பதையேகண்டு, அவர்கள் பேசும் பாஷையையே பேசி, காணும் பொருளில் ஓர் உண்மையைப் பேசும் பாஷையிலேயே எடுத்துக் காட்ட வல்லவர். தம் உள்ளத்திலெழும் மெய்யுணர்வுகளை மற்றவர்களும் நுகர்ந்து கொள்ள, உயிர் பெற்ற சொற்களிலே பதிவு செய்து தர வல்லவர். அச்சொற் பதிவைப் படிப்பவர்கள் தம் உள்ளத்திலும் அந்த மெய்யுணர்வுகளைப் பெறுகின்றனர். இந்த இடத்திலேயே கவிதை உதயமாகின்றது.

''இயற்கையினதும் இயற்கையில் தோன்றிய மனிதர்களுடையதும் பிரதிரூபம் கவிதை'' என்கிருர் வேட்ஸ்வர்த். ''இயற்கையினதும் இயற்கையில் தோன்றிய மனிதனதும்'' என்ற சொற்ருெடர்களில், மனித வாழ்வும், வாழ்வின் திரிகாலங்களும் வாழ்வுதித்த பிரபஞ்சமும் அடங்கும். கவிஞன் புனையும் கவிதையில், பிரபஞ்சத்தின் ஒரு காட்சியையோ, வாழ்விலோர் காட்சியையோ, மனிதனின் இயல்பிலோர் காட்சியையோ சித்தரிப்பதைக் காணலாம். இவற்றை ஏன் கவிஞன் சித்தரிக்கின்ருன்? மக்களின் சரித்திரத்தை எழுதுபவன் ஒரு நோக்கத்தைக் கொண்டு தன் தொழிலைச் செய்கின்ருன். 'நமக்கு முன் வாழ்ந்த நம் இனத்தின் சரித்திரம் இது' எனவாசிப்போர் அறிகின்றனர். மருத்துவன் பிணியகற்ற வைத்தியஞ் செய்கின்ருன். மாலுமி கடல் கடத்தக் கப்பல் ஓட்டுகிருன். நியாயவாதி வழக்கில் வெற்றியடைய வாதிக்கிருன். வானசாஸ்திரி கோள்களின் நிலைகளை அனுமானிக்கின்ருன். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வோர் நோக்கமுண்டு. கவிஞன் என்ன நோக்கத்துடன் பாடுகிருன்? மனிதனுக்கு மெய்யுணர்வும் இன்பமும் உண்டாகப் பாடுகின்ருன். தான் முளைத்தெழுந்த வித்து இயற்கை. இயற்கை அவனைப் பெற்ற தாய். மனிதனும் எண்ணிறந்த ஜீவன்களும், இயற்கை யன்னையின் மடியில் தவழ்ந்து விளையாடும் குழந்தைகள். தன்னையீன்ற தாயின் எண்ணிறந்த தோற்றங்களைக் கண்டு கவிஞன் பரவசமடைகின்ருன். இப்பிரபஞ்சத்தையும் ஜீவராசிகளையும் அன்பு நிறைந்த அகக்கண்ணினுல் நோக்குகின்ருன். அவனுக்கு இன்பமாகிய

அனுபவம் உண்டாகிறது; அந்த அனுபவம் உந்தவே ''ஏ! மனிதா! உன் அன்னையின் மடி மீதமர்ந்து அவள் மார்பகங்களில் எழும் அமுதத்தைப் பருகாது ஏன் சதா உழல்கிறாய்?'' என்று கேட்கின்றான். இக் கேள்வியே அவனைப் பாடத் தூண்டுகிறது.

மணிவாசகப் பெருமான் இயற்கையின் உன்னத வடிவங்களைக் கண்டு மெய்யுணர்விற் பொங்கி எழுந்த பேரன்பில் ஆண்டவனைக் கண்டும் அனுபவித்தும் உணர்ந்த உண்மைகளைப் புலப்படுத்த அவ்வப் போது கல்லும் கரையும்படி உருகிப்பாடிய திருப்பாட்டுக்களே திருவாசகமாகும். அத்திரு வாசகத்தில் ஒரு பாவை இங்கே தந்து, மணிவாசகரைப்போல் இயற்கையின் உன்னத காட்சிகளைக் கண்டு பரவசங் கொண்ட மேல்நாட்டுக் கவிஞர் வேட்ஸ்வர்த் அருளிய ஓர் அரிய கவிதையுடன் ஒப்பிட்டு கூறுகின்றேன். இரண்டிற்கும் உரிய கருத்தொற்றுமையை கவனிப்போம்.

''வானாகி மண்ணாகி
 வளியாகி யொளியாகி
ஊனாகி யுயிராகி
 உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென்
 றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை
 என் சொல்லி வாழ்த்துவனே.''

விண், மண், காற்று, நீர், தீ என்னும் இப்பூதங்களாகியும், உடலும் உயிருமாகியும், உள் பொருளாகியும் இல்பொருளாகியும், எப்பொருட்கும் தலைவனாகியும், உலகத்திலுள்ள மக்கள் எல்லோரையும் யானென்றும் எனதென்றும் சொல்லிக் கூத்தாடும்படி செய்பவனாகியும் நிற்கின்ற நின்னைக் குறித்து யாது கூறி வாழ்த்துவேன்? இக் கருத்தையே அப்பர் சுவாமிகளும் நின்ற திருத்தாண்டகத்தில், ''இருநிலனாய்த் தீயாகி, நீருமாகி, இயமானனாய் எறியும் காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி. ஆகாயமாயட்ட மூர்த்தியாகி'' என வர்ணிக்கிறார்.

வேட்ஸ்வர்த் கவிஞர். 'ரின்ரேன் அபே' என்ற கவிதையில் இயற்கையின் மூல வடிவைக் கண்டு ஓர் மெய்யுணர்வைப் பெறுகின்றார். வானளாவிய மலைகளையும் அம் மலைகளிலிருந்து பாயும் அருவிகளையும், உயர்ந்த குன்றுகளையும், பசும் புற்றரைகளையும் அடர்ந்த சிறு காடுகளையும் கண்டார். அக் காட்சிகளிலுள்ள அழகினை அனுபவித்தார். அப்பொழுது அவர் உள்ளத்தில் ஓர் உயர்ந்த உணர்ச்சி பொங்கியது. அதனைப் பின் வரும் கவிதையில் பிரதிருபஞ் செய்கிறார்.

வேட்ஸ்வர்த் யாத்த ஆங்கில மூலக்கவிதைக்கு அடியேன் கொடுத்த தமிழாக்கத்தைக் கீழே தருகிறேன்:

''என்னுளொன் றுணர்விலெழும்
 உவகையுள் ளூறிவர
ஏறுமென் நினைவு பொங்கி
 மன்னுமென் னிதயமுயர்
மாண்புற்று வளருமே
 மற்றதென் னுட் செறியவே
பொன்னுதிரு மிரவிபடு
 கின்றதொரு
 பொழுதிலே பொழிகின்ற
 வொளிநடுவிலே
வண்ணமணி வானிலே வையகஞ்
 சூழ்கின்ற வாரியுள்ளே வதியுமே
சத்தியொன்றாய் நின்று
 சகலபிர பஞ்சத்துள்
சந்ததம் சுழலுமொன்றாய்
 எத்திசையு மானதாய்
எங்குநிறை கின்றதாய்
 எல்லாமியக் கின்றதாய்

புத்தியுள பொருளிலே
 புத்தியைத் தூண்டுமொரு
பொருளாகி நின்ற பொருளாய்
 வைத்தவுயிர் வளியிலே
மக்களின் மனதிலே
 வதியுமிவ் வுலகினுள்ளே.''

திருவாசகப் பாவினையும் இக் கவிதையையும் ஒப்பிட்டுப்பார்க் கும் பொழுது, இரண்டின் உயிர் நாடியும் ஒன்றாகவே காணப் படுகின்றது. 'என் உணர்விலே ஒன்று உதயமாகின்றது. அத னால் மகிழ்ச்சி பொங்குகிறது. நினைவுகளெல்லாம் உயர்ந்த நினைவுகளாகின்றன. என் இரு தயம் புனிதமடைந்து மேன் நிலையை அடைகிறது. உதிக் கும் அப்பொருள் என்னில் செறிந்து கலக்கின்றன. அப் பொருள் எங்கே உள்ளது? சகல பிரபஞ்சத்துள்ளும் பிர பஞ்சத்திலுள்ள எல்லாவற்றி லும் அணுவுக்கணுவாகக் கலந்து நிற்கின்றது. நின்று சகல சராசரங்களையும் இயக்கு கின்றன. நினைக்கும் சக்தியுள்ள ஜீவன்களிலே புத்தியாக நிற் கின்றது. நினைக்கப் பண்ணு கிறது. ஜீவராசிகள் சுவாசிக் கும் பிராணவாயுவிலே நிற்கின் றது. மனிதனின் மனதிலே நிறைகின்றது. நீலமணி வானிலே தோன்றுகிறது. உலகத்தைச் சூழும் சமுத்திரங் களிலே நிறைகின்றது. பொன் னொளியை அள்ளி வீசும் சூரிய அஸ்தமனத்திலே தங்குகிறது.''

மணிவாசகப் பெருமாள் கண்ட விஸ்வரூப தரிசனத் தையே வேட்ஸ்வர்த் கவிஞரும் இக்கவிதை வாயிலாகக் காண் கிறார்.

ஏகமாய் நின்ற ஒரே பரம் பொருள் தன் வயதினால் பல வாகப் பிரிந்து பிரபஞ்சமாகவும் பிரபஞ்சத்திலுள்ள எல்லாமாக வும் பரிணமிக்கின்றது. பூத்துக் குலுங்கிக் காய்கனிகள், குலை குலையாக ஏந்தி பச்சிலைத் தளிர் களினால் பந்தலிட்டுக் குயில்கள் கிளைகளூடே கிடந்து பாடவும், மானும் மயிலும் தங்கி நித்திரை செய்யவும், வானளாவி வளர்ந்து நிற்கும் விருட்சத் தைப் பார்! இதன் வேரிலிருந்து நுனிக்கிளை வரையுள்ள வஸ்து ஒன்றுதான். அதுவே மரச் சாறு, அது இயற்கையின் நியதி யினால் பலவாறாக மாறித் தோன்றுகிறது. துளிர்—பூவல்ல. பூ—கிளையல்ல. கிளை—காயல்ல. ஆனால், துளிரும், பூவும், காயும் கிளையும் ஒரே பொருளாக மரச் சாற்றிலிருந்தே ஆனவை. அப் படியே உலகமும் உலகத்தில் தோன்றும் எல்லாப் பொருட் களும் பரம்பொருளின் தோற் றமே யாகும். இந்த உண்மை யையே தமிழ் வேதமும், நான் மறையும், கீதையும் எடுத் தோதுகின்றன, வேட்ஸ்வர்த் கவிஞரும் இதனையே நமது ''கோனாகி யானெனதென் றவர வரைக் கூத்தாட்டு வானாகி நின்றாயா'' என்ற அடிக்கிணை யாக ''புத்தியுள பொருளுளே புத்தியைத் தூண்டுமொரு பொருளாகி நின்றபொருளாய்'' என்று அமைத்து மகிழ்கின் றார்.

இரண்டு கவிஞர்களும் வெவ் வேறு சாதியினராய், வெவ் வேறு மதத்தினராய், வெவ் வேறு பாஷையைப் பேசுப வராய், வெவ்வேறு பண்பாட் டைத் தழுவினவராய், வெவ் வேறு சூழ்நிலையில் வசித்தன ராய் இருந்த போதிலும், இயற்கை முன்னின்று, அதன் திவ்விய சொரூபத்தைக் கண்ட பொழுது, இருவர் உள்ளத்தி லும் ஒரே மெய்யுணர்வு பொங் கிற்று. ஒரே அனுபவம் கிடைத் தது. ஒரே உண்மை புலப் பட்டது. ஒரே மாதிரி கவிதை பிறந்தது! ★



திருவனந்தபுரம் மிருகக்காட்சி

'சத்தியபாலன்'

திரு - கொச்சி ராஜ்யத்தின் தலைநகராக உள்ள திருவனந்தபுரத்தின்கண் பார்க்க வேண்டிய இடங்களில் இம்மிருகக் காட்சி சாலை முக்கியமான இடமாகும். இக் காட்சிசாலை, நகரின் மையப் பகுதியில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவின் சிறந்த மிருகக் காட்சி இதனுள் நுழைந்தவுடனே, உண்மையிலேயே ஒரு காட்டினுள் நுழைந்தே மிருகங்களைக் கண்ணுறுவது போலத் தோன்றுகிறது. அங்கேயே செயற்கைப் பொய்கை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

நுழைவுக் கட்டணம் தலைக்கு இரண்டணு என்ருலும், அங்கே செல்வோர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகும் காட்சிகளைக் கண்டு மகிழலாம். அத்துடன் புகைப்படக் கருவிக்கும் தனிக் கட்டணம் செலுத்த வேண்டும். அவற்றிலும் சினிமாப் படம் பிடிக்கும் கருவிக்குச் சிறிது அதிகக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.

காட்சி சாலைக்குள் நாம் நுழையுமிடத்தில் கட்டணம் செலுத்தி, அனுமதிச் சீட்டு பெற்றிருக்கிருேமா, இல்லையா என்று சோதனை செய்ய, ஒருவரும் காணப்படவில்லை. வியப்பாய் இருக்கின்றதல்லவா? ஆனல், வெளியே வரும் வழியில் நாம் சோதனை செய்யப்படுகின்ருேம். இது ஓர் புதுமையான முறையாக உள்ளது,

அங்கே மிருகங்கள், பறவைகள், ஊர்வன என்றும் அவற்றிலேயே நீர் வாழ்வன, நிலத்தில் வாழ்வன என்றும் வகைப்படுத்தி வைத்துள்ளனர்.

இயற்கைச் சூழ்நிலையில் புலி

மேலும் அவைகளை அவற்றின் இயற்கைச் சூழ்நிலைக்கு ஏற்ப இயன்றவரை அமைத்து வைத்துள்ளனர்.

கிள்ளைகளின் வகைகள்

பொதுவாக நாம் பச்சைக் கிளியும், பஞ்சவர்ணக் கிளியும் தான்பார்த்திருப்போம், ஆனால், இங்கே வெவ்வேறு அழகிய நிறங்களையும், சப்தங்களையும் உடைய கிளிகள் வைக்கப்பட்டுள்ளன. இளஞ்சிவப்பும் நீல நிறமும் கொண்ட அமெரிக்கக் கிளி, இளஞ்சிவப்பு மார்பினை உடைய சீனக்துக்கிளி, நீலமும் மஞ்சளும் கொண்ட கிளி, பழுப்பு நிற மைனக்கிளி என்று பல வகையுள்ளன. இவைகளில் கடைசியில் குறிப்பிட்டுள்ள கிளி கூவும்போது நான்கு வகைச் சப்தங்களை உண்டாக்குகின்றது.

புருவின் வகைகள்

இங்கே சாதாரணமாக நாம் காணும் புருவும், மற்றும் சிறப்பாக பாறைப் புரு, வெள்ளிப் புரு என்ற மற்ற வகைப் புருக்களும் உள்ளன.

ஏனைய பறவை இனங்கள்

இவற்றைத் தவிர, நாம் கண்டிராத வால்புறம் அழகிய வண்ண வேறுபாடுகளைக் கொண்ட பல வகைக் கோழிகள், மற்றும் சாதாரணக் கழுகுகள், ராஜாளி போன்ற இராட்சஸக் கழுகுகள், 'பென்' என்ற வகைக் கோழியும், சேவலும், வெண் நாரை, வெண் கழுத்து நாரை, கருங்கழுத்து நாரை, கொக்கு, ஒரு வகைப் பெரிய நாரை, நீண்ட தலையுடைய வாத்து, பிராமண வாத்து, 'மஸ்கோவின்' குள்ள வாத்து, பழுப்பு நிற 'பெலிகன்'



துயில் நீங்காத நாரை

பறவை, வெள்ளைப் பெலிகன், 'ரோமன்' புரு, மயில்கள், வெள்ளி நிற வான்கோழிகள், தங்கநிற வான்கோழிகள், பழுப்பு மீன் கோழி போன்ற பல இனப் பறவைகள் இருக்கின்றன. ஒவ்வொரு கூண்டிற்கும் வெளியே ஒரு பலகையில் உள்ளே உள்ளவற்றின் பெயர்களையும், அவை பெருவாரியாகக் காணப்படும் நாடுகளும் காண்போருக்கு வசதியாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறியவைகளைப் பார்த்தவுடன் நாம் நமது முன்னோர்களைக் காணலாம். அதாவது குரங்குகளின் வகைகள் ''கோல்டன் லாங்குர்'' என்ற வகைக் குரங்கின் வால் அழகிய பொன்னிறமாக உள்ளது. சிம்பன்ஸி என்ற மனிதக் குரங்கும் உள்ளது. டார்வின் என்ற ஆராய்ச்சி வல்லுநரின் கொள்

கைப்படி இவை 'மனிதனின் முன்னோர்கள்' என்றழைக்கப் படுகின்றன. இவைகளின் உரு வம் பெரியதாகவும், ஏறக் குறைய இதனுடைய பழக்க வழக்கங்கள் எல்லாம் மனி தனைப் போலவேயும் இருக்கின் றன. ஆனால், பார்ப்பதற்குச் சற்று அருவருப்பாக உள்ளது. மற்றும் சிங்கவாலைப் போன்ற வாலுடைய குரங்கு, கப்பூச்சின் குரங்கு, இந்தியக் குரங்கு, கருங்குரங்கு ஆகிய பலவகைக் குரங்குகள் இருக்கின்றன.

மற்றைய மிருகங்களின் இனங்கள்

நில ஆமை, நீர் நாய், நீர் யானை, மந்தக் கரடி, குள்ளநரி இமயமலைக் கருங்கரடி ஆகிய பிறவும் உள்ளன. இமயமலைக் கருங்கரடியின் மார்புறத்தில் 'V' போன்ற வெள்ளை வடிவம் ஒன்று உள்ளது. மிகப் பெரிய உருவத்தை உடையது. நீர் நாய்க்குத் தனியாக ஓர் சிமெண்ட் தொட்டி கட்டி உள்ளே விடப்பட்டுள்ளது. இது உள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. நீர் யானைகள் இரண்டு உள்ளன. இவை வஞ்சமில்லாமல் வளர்ந் துள்ளன. நாம் ஏதாவது ஒரு பொருளைக் காட்டினால் 'ஆ' என்று பயங்கரமாக வாயைப் பிளக்கின்றன.

பின்னர் தனித்தனி கூண்டு களில் சிங்கம், சிம்மம், வரிப் புலி, சிறுத்தை, போன்ற சிங் கம், ஹெயான சிங்கம், ருஷ்யப் பழுப்பு நிறக்கரடி ஆகியவை கள் உள்ளன. மற்றும் காண் டாமிருகம், ஒட்டைச் சிவிங்கி, பன்றிகள், கழுதைகள், புள்ளி மான்கள், கங்காரு, இந்திய பைசன், காட்டெருமைகள், காட்டாடுகள், வரிக்குதிரை, யானை, மலை அணில், கருங் குரங்கு, தீக்கோழிகள் முதலி யவை உள்ளன. நாகப்பாம்பு, கொம்பேரி மூக்கன் பச்சைப் பாம்பு, மண்ணுளிப்பாம்பு, உடும்பு, மலைப்பாம்பு ஆகிய பாம்பு வகைகளும் உள்ளன.

இத்துணை வகைகளும் உடைய திருவனந்தபுரம் மிரு கக்காட்சி, பொழுது போக் கிற்கு உதவுதோடு அறிவையும் வளர்க்கக் கூடியதாயுள்ளது.★

சங்கு

கரிய திருமாலின் ஒரு பெருங்கை சங்கேந்திய கை அல்லவா? கண்ணபிரானின் சூழ்ச்சிகளுள் சங்கு ஒரு சிறப் பிடத்தைப் பெறுகிறது. இடையர்கோன், பாரதப்போரில் சங்கை முழக்கியல்லவோ தருமனின் வாய்ச்சொற்களுக்குப் பிரிது பொருள் கற்பிக்கிறான்? இத்தகைய சிறப்பு மிக்க சங்கு பண்டுதொட்டு மன்னர் தம் போரில் வெற்றி பெறுங் காலங் களில் முழங்குவதற்கேற்ற வெற்றிச் சங்காகவும் இருந்து வரு கிறது. சங்கிலிருந்து வளையல்கள் செய்து வாழ்ந்துவந்த சங்கறுப்போர் குடி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்திலிருந்து வந்துள்ளது. சிறந்த பழந்தமிழ்ப் புலவர் களுள் ஒருவராகிய நக்கீரர், அந்தக் குடியைச் சேர்ந்தவ ரென்றே கூறுகின்றனர்.

உருளைக்கிழங்கு

ஏ. அண்ணாமலை

1537-ம் ஆண்டு ஒரு ஸ்பானிய வீர பொன்னைத் தேடிக்கொண்டு ஆண்டிஸ் மலையிலுள்ள ஒரு கிராமத்திற்கு தன் சகாக்களுடன் வந்து சேர்ந்தான். பிரயாணக் களைப்பு மேலிட, பசிவெறி கொண்ட அவனது வீரர்கள் அந்த, கிராமத்திலுள்ள குடிசைகளில் புகுந்து உணவு தேட ஆரம்பித்தனர், அப்பொழுது பழுப்பு நிறமுள்ள உருண்டை வடிவமான ஒருவகை கிழங்குகளைக் கண்டு, அவைகளைச் சமைத்துசாப்பிட்டுவிட்டு, அது மிகவும் ருசியாக இருக்கக் கண்டு, ''ஆகா ஸ்பானியர்களாகிய நமக்கும் இது ஒரு நல்ல உணவு'' என குதூகலித்தார்கள். பொன் தேடப்புகுந்து இந்தப் பொன்னை கண்டார்கள். அதுதான் பின்னால் உலகம் முழுதும் பரவிய உருளைக்கிழங்காகும். இந்தியர்கள் இந்தக் கிழங்கை ஆரம்பத்தில் 'பப்பா' என்று அழைத்தார்கள். ஸ்பானியர்கள் 'பட்டாட்டா' என்று அழைத்தார்கள். இப்படி அழைக்கப்பட்ட இக்கிழங்குதான் பின்னால் உலகம் முழுதும் பரவி, உலகின் தலை சிறந்த உணவுப் பொருளாகமாறியதோடல்லாமல் உலகின் வாழ்க்கைத் தரத்தையும், உயர்த்தி, மக்களுக்கு வளத்தையுல் கொடுத்தது வேறு எந்த உணவுப் பொருளும் உருளைக்கிழங்கு மக்களிடத்தில் பெற்றுள்ள ஒரு இடத்தை அடைய முடியவில்லை.

மனித சமுதாயத்தில் சில உணவுகள் மக்களின் விருப்பத்தையும் பேராதரவையும் பெறும் முன்னர் மிகவும் பொய் பிரசாரங்களையும் எதிர்ப்புகளையும் கடந்து வெற்றி பெறவேண்டியிருந்தது. உருளைக் கிழங்கு கண்டுபிடிக்கப்பட்டு ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு அது பெருநோய், இருமல், ரிக்கட்ஸ் ஆகிய நோய்களைப் பரப்புவதாகக் கருதப்பட்டது. பல ஆராய்ச்சியாளர்களின் கடும் ஆராய்ச்சிக்குப் பிறகு வழிகாட்டுவோரின் துணைகொண்டு தான், மக்கள் இப்புதுமையான உணவை சாப்பிட தகுதிவாய்ந்தது என்று ஏற்றுக்கொண்டார்கள்.

பப்பல் லெகேட் என்பவர் 1588-ம் ஆண்டு வியன்னு நகரிலுள்ள இம்பீரியல் தோட்டங்களின் அதிபதியான ஜுலிஸ் சார்லஸ் டி எக்லூஸ் என்பவருக்கு இரு உருளைக்கிழங்கு அனுப்பி வைத்தார் அதைப் பயிராக்கி சில வற்றை இறைச்சியுடன் கலந்து ருசியாக இருக்கக் கண்டு ஐரோப்பா முழுவதிலுள்ள சக தோட்டத் தொழிலாளர்களுக்கும் நில உரிமையாளர்களுக்கும் பயிரிடும் முறைகளை விளக்கி, நிறைய உருளைக்கிழங்குகளை இலவசமாக அனுப்பி வைத்தார். இவருடைய தீவிர முயற்சியால் ஐரோப்பா முழுவதும் உருளைக்கிழங்கு பரவலாயிற்று. இக்கிழங்கை உணவாகக் கொண்டு அப்பொழுது புசித்தவர்கள் இரு சாரார்தான். வெளி நாட்டிலிருந்து வந்த உணவாயிற்றே கண்ணியம் தரவேண்டும் என்ற நிலையில் சீமான்களும், எதைக்கொண்டாவது வயிற்றை நிரப்பிக்கொள்ளும் பராரிகளும் ஆவார்கள்.

ஜெர்மனியில் 1744-ம் ஆண்டு மகா பிரடரிக் நாட்டின் தலைவனாக இருந்தபொழுது அவன் எடுத்துக் கொண்ட முயற்சியால் உருளைக் கிழங்கு ஜெர்மனி பூராவும் பரவியது. அப்பொழுது நாட்டில் உண்டான உணவுப் பஞ்சத்தைதவிர்க்க படைவீரர்களுடன் ஒரு லாரி நிறைய உருளைக்கிழங்குகளை கால்பர்க் என்னும் நகருக்கு அனுப்பி வைத்து, விவசாயிகளை கட்டாயமாகப் பயிரிடுமாறு நிர்ப்பந்தம் செய்தான். அவன் எடுத்துக் கொண்ட இந்த நிர்ப்பந்தம் காரணமாக ஜெர்மனியின் பயிரிடும் நிலங்கள் எல்லாம்

உருளைக்கிழங்குத் தோட்டங்களாக மாறின. அப்பொழுது ஏற்பட்ட யுத்தத்தில் உருவான பஞ்சம் மக்களிடத்தில் உருளைக்கிழங்குக்கு நல்லதோர் புகலிடத்தை ஏற்படுத்தி வைத்தது. மக்களும் இதை ஒரு உயர்ந்த உணவாக மதிக்க ஆரம்பித்தனர்.

பிரடரிக் ஆட்சியின் பொழுது கைது செய்யப்பட்டிருந்த ராணுவ கைதிகளுக்கும் உருளைக்கிழங்கு உணவாகத் தரப்பட்டது. அதை சாப்பிட்டவர்களுள் அன்டோனி அகஸ்டி பெசமாண்டியர் என்னும் பிரஞ்சு மருந்து வியாபாரியும் ஒருவராவர். அவர் பிரான்ஸ் திரும்பியபொழுது அங்கும் பஞ்சம் தலைவிரித்தாடியது. பஞ்சம் தவிர்க்கப்பட உருளைக்கிழங்கு உற்பத்தி செய்தல் நல்ல வழியாகும் என நினைத்து தன் யோசனையை மன்னனான பதினைன்காம் லூயி இடம் கூறினார். உடனே மன்னனும் அன்டோனியின் யோசனையை ஏற்றுக்கொண்டு பாரிஸ் நகருக்கருகில் நூறு ஏகரா நிலத்தையும் அன்டோனியின் பால் ஒப்படைத்து, பயிரிடுமாறு கூறினான். அந்த நிலம் பண்படுத்தி உருளைக்கிழங்கு நடப்பட்டது. செடி முளைத்து பூக்கள் பூத்ததும், ராணி மேரி அப்பொழுது நடந்த ஒரு வரவேற்பு வைபவத்தின் போது, அவைகளை தன் கூந்தலில் அழகுக்காக பெருமிதத்தோடு சூட்டிக்கொண்டார் — அன்டோனி அரசர் உள்பட நாட்டுப் பிரமுகர்கள் அனைவருக்கும் ஒரு விருந்து வைத்து, அதில் உருளைக்கிழங்கை பல முறைகளில் சமைத்து படைத்தார். அதன் ருசியைக்கண்டு அனைவரும் வியந்தனர். காடு கறும்புகள் உருளைக்கிழங்கு பயிரிடும் விளை நிலங்களாக மாறின. அன்டோனியின் தோட்டத்திலிருந்து உருளைக்கிழங்கு திருட்டுபோகாமல் இருக்க ஆயுதம் தாங்கிய காக்கி உடை வீரர்கள் காவலுக்கு வைக்கப்பட்டனர். ஒரு இரவு படைவீரர்கள் இல்லாதபோது அவர் நினைத்தமாதிரியே ஏராளமான உருளைக்கிழங்கை மக்கள் திருடிச் சென்று விட்டனர். திருடும் அளவுக்கு உருளைக்கிழங்கு, மக்களின் உள்ளத்தைக்கவர்ந்தது. அன்டோனியின் கல்லறை மீது பிற்காலத்தில் உருளைக்கிழங்கு செடிகள் ஞாபகார்த்தமாகப் பயிரிடப்பட்டன.

இங்கிலாந்தில் முதன் முதலில் பிரபுக்கள் உருளைக்கிழங்கை சாப்பிட ஆரம்பித்தனர். பிறகு பொது மக்களும் பிரபுக்களைப் பின்தொடர்ந்தனர். லண்டன் மாநகரின் வீதிகளில் உருளைக்கிழங்குகள் ஏராளமாக விலையாயின.

மேற்கு அர்த்தகோளங்களில்உருளைக்கிழங்கு பரவிய இரு நூருண்டுகள் கழித்தே அது கடல்களைக் கடந்து வட அமெரிக்காவில் பரவ ஆரம்பித்தது, 1719-ம் ரெவரண்டு ஜேம்ஸ் என்பவர் வட அயர்லாந்திலிருந்து 16 குடிகளைக் கொண்டு வந்து அவர்கள் மூலம் உருளைக்கிழங்கை இரண்டரை ஏகராவில் மட்டும் பயிரிட்டார்—ஆனல் இன்று ஐக்கிய நாடுகள் முழுதும் பயிரிடப்படுகின்றன.

பின்னல் ஏற்பட்ட துக்க சம்பவங்களில் மகத்தானது அயர்லாந்தில் ஏற்பட்ட உருளைக்கிழங்கு பஞ்சமாகும்— உருளைக்கிழங்கு பரவிய ஆரம்பகாலத்திலேயே அயர்லாந்தில் ஏராளமாகப் பயிரிடப்பட்டு உணவில் ஒரு இன்றியமையாத பொருளாக மதிக்கப்பட்டு அயர்லாந்து மக்களின் ஆதரவைப் பெற்றிருந்தது இங்கிருந்துதான் இங்கிலாந்துக்கும் ஏராளமாக அனுப்பப்பட்டது. 1845-ம் ஆண்டில் அயர்லாந்தில் உருளைக்கிழங்கு ஒருதலை சிறந்த உணவாக கருதப்பட்டது. அந்த ஆண்டு கோடைகாலத்திலும் குளிர் மிகுதியாக ஏற்பட்டதால், உருளைக்கிழங்கு செடிகளின் இலைகள் மீது கரும்புள்ளிகள் ஏராளமாகத் தோன்றி ஒருவகை நோய் உண்டாகியது. சீக்கிரமாக அந்த கருநோய் அயர்லாந்து முழுதும் பரவி, பாதிக்கு மேற்பட்ட பயிர்களை நாசமாக்கி விட்டது.

அடுத்த ஆண்டும் பரிசோதிக்கப்பட்ட விதைகள் நடப்பட்ட

பொழுதும் அதுவும் ஒரு தோல்வியாகவே முடிந்தது. இதற்கு முந்திய அறுவடையில் கிடைத்த உருளைக்கிழங்குகளும் சில வாரங்களிலேயே செலவாகி விட்டன. அதைச் சாப்பிட்டவர்களுக்கு டைபஸ் என்னும் ஒருவித நோய் உண்டானது, 8 கோடி மக்களுள் 1 கோடி மக்கள் அந்த நோயினுலும் பசிக்கொடுமையாலும் மாண்டனர். மீதியிருந்தவர்களில் பெரும்பான்மையினர் ஐக்கிய நாடுகளுக்குக் குடியேறினர்.

உருளைக்கிழங்குக்கு ஏற்பட்ட இன்னெரு பயங்கர எதிரி கொலரடோ என்னும் ஒருவித வெட்டுக்கிளியாகும். இவைகள் கூட்டம் கூட்டமாக 1824-ம் ஆண்டு ராக்கி மலைத்தொடரிலிருந்து உருளைக்கிழங்கு தோட்டங்களுக்குப் படையெடுந்து வந்து, பயிர்களை நாசமாக்கின. இவைகள் மஞ்சளும் கருப்பும் கலந்த நிறத்தோடு நீண்ட கூரிய தாடைகள் கொண்டவைகளாமிருந்தன. அமெரிக்கா யுத்தத்தின்போது இவைகள் மிசிசிபி நதியைக் கடந்து வந்து 1874-ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கிழக்குக்கரையை அடைந்தன. உடனே விஷமருந்துகள் பயிர்களுக்கு தூவப்பட்டு பாதுகாக்கப்பட்டன. இன்று D.D.T. உபயோகிக்கப்படுகிறது. இந்த வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு பிரிட்டனில் 1933-ம் ஆண்டு இரு முறைகளும் 1942-ம் ஆண்டு ஒரு முறையும் ஆக மூன்று முறைகள் ஏற்பட்டன. ஆனல், விவசாய மந்திரி சபையினுல் தகுந்த நடவடிக்கைகள் ஏற்பட்டு, அவைகள் அழிக்கப்பட்டன.

நான்கு நூற்ருண்டுகளுக்கு முன்னுல் ஸ்பானியர்களால் கண்டு பிடிக்கப்பட்ட பழுப்பு நிற உருளைக்கிழங்கு அதற்குப்பின்னுல் ஏற்பட்ட படிப்படியான ஆராய்ச்சியின் காரணமாகவும் விஞ்ஞானத்தின் துணை கொண்டும் இன்று பனிநிறமுள்ள வெள்ளை உருளைக்கிழங்காக மிளிர்கிறது. உருளைக்கிழங்கு ஒரு எளிய உணவாக இன்று குறைந்த விலைக்குக் கிடைக்கிறது. இதில் இரும்புச்சத்துக்களும் குறைந்த அளவு தாமிர சத்துக்களும் வைடமின் சத்துக்களும் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இன்று பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் அணுசக்தி விஞ்ஞானிகள் தகுந்த சாதனங்களைக் கொண்டு உருளைக்கிழங்குகளை இரண்டு வருடங்களுக்கு கெடாமல் பாதுகாக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டிலும் பரிசோதனைகள் செய்யப்பட்டு நல்ல உருளைக்கிழங்குகள் பயிராக்கப்பட்டு வருகின்றன,

இந்தியாவில் வடபகுதியில் உத்தரபிரதேசம், பிஹார், மேற்கு வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாகாணங்களில் உருளைக்கிழங்கு பயிராக்கப்பட்டு வருகின்றது. சிம்லாவிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் உருளைக்கிழங்கைப்பற்றிய ஆராய்ச்சி நடந்து வருகிறது. ★

முத்து

கொற்கை, பாண்டியநாட்டின் முத்துக் கொழிக்கும் துறைமுகம். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கிளியோபெட்ரா என்னும் ரோமநாட்டு அரசியின் உள்ளத்தை கொற்கை முத்து கொள்ளை கொண்டதாம், இந்தச் செய்தியைக் கூறும் அக்கால வரலாற்று ஆசிரியன் பிளினி என்பான் முத்து வாணிபத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது இந்திய முத்துகளின் பேரில் ரோமர்களுக்குள்ள ஆர்வத்தால் ரோம்நாட்டுச் செல்வமே கொள்ளை போகிற தென்கிருன். 'ரோம்'நாட்டு செலவழிந்து வருகிறது; இந்நிலை மாறவேண்டும் என்று அவன் அங்கலாய்த்தது பாரதத்தின் சிறப்பு, ரோமரிடையே பரவியிருந்ததற்கு ஒரு தக்க சான்றல்லவா?



வெண்ணிலாவே, வேகமேன்?

'சன்மிஷ்டை'

இன்ப நிலாச் சொரிந்து—கூடும்
இதய மலர் விரித்து
அன்பர் களித்திடவே—வானில்
ஆடியசைந்து செல்வாய்!

என்ன உல்லாசமதோ—மதியே
ஏந்திழை ரோகிணியாள்
கன்னல் மொழிக்காக—விரும்பிக்
காற்றின் விரைந்தனையோ?

காதல் மயக்கமதோ—மதியே!
கட்டிளம் ரோகிணியின்
ஆதரவுள்ள பக்கம்—ஒளியுடன்
அன்பு சொரிந்து நிற்பாய்.

உன்றன் செயலெல்லாம்—எனக்கு
உன்மத்தம் விளைக்கு தந்தோ!
என்றன் தனிமையினை—மதியே!
ஏனோ கலைத்துலைப்பாய்!

கதிரவனைப் பிரிந்த—தாமரைக்
கன்னி முகம் வாடினள்
மதியே அந்நிலையை—யானும்
மருவி அழிந்திட்டேன்.

எந்தன் நாயகனை—எனது
உள்ளம் இருந்தவனைக்
கந்தவடி வேலனைக்—கண்டு
கருத்தை யுணர்த்திடுவாய்!

துப்பறியும் கலை

'ஜெய்வரமணி'

குற்றமிழைத்தவன், சட்டத்திற்கு அஞ்சி மறைந்து விடுகிறான். பொருளையோ, உயிரையோ பறிகொடுத்தவனும் செயலற்று விடுகிறான். இந்நிலையில் அரசாங்கம் குற்றவாளியைக் கண்டுபிடித்து, சட்டத்தின் பெயரால் அவனுக்குத் தண்டனை விதிக்க முயற்சிக்கிறது. ஆனால், குற்றவாளி எங்கு சென்றான்? எப்போது கிடைப்பான்? அவனைத் தேடித் திரிவதிலுள்ள ஆபத்துகள் யாவை?...

இவற்றை நன்குணர்ந்து, தன் திறமை ஒன்றின் மூலமே இறுதி வெற்றி காண்பவர்தான் சமுதாய நலனுக்காகப் பாடுபடும் ஒரு 'துப்பறியும் கலை நிபுணர்.'

துப்பறிவது மிகவும் ருசிகரமான ஒரு கலை. அதாவது அதைப்பற்றித் தெரிந்து கொள்ளுபவர்களுக்கு. ஆனால், அதில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அது மிக மிக ஆபத்தான கலை. எந்த நேரமும், எந்த விநாடியும் அவர்கள் உயிர் ஆபத்தை நோக்கித்தான் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

'துப்பறிபவர்கள்' என்றால் இங்கு அரசாங்கத் துப்பறிபவர்களைத்தான் அது குறிக்கிறது. பொதுவாக இதில் இரு பிரிவுகள் உண்டு. 1. அரசாங்கத் துப்பறிபவர்கள் (Police Detectives) 2. பிரத்தியேகத் துப்பறிபவர்கள் (Private Detectives).

மேல் நாடுகளில் பிரத்தியேகத் துப்பறிபவர்கள் அரசாங்க அனுமதி பெற்று, லைசென்ஸுடன் தங்கள் தொழிலை நடத்துகிறார்கள். தனிப்பட்ட முறையில் ஒரே நபர் அல்லது பலபேர் சேர்ந்து கூட்டாக ஒரு 'ஏஜென்ஸி' அமைத்து, அதற்கு ஒரு பெயரும்—உதாரணமாக 'டேவிட்' என்பவன் இதன் தலைவன் என்றால், ''டேவிட் டிடெக்டிவ் ஏஜென்ஸி'' என்று பெயரிட்டு, தொழில் நடத்துவதுண்டு. ஆனால், இவர்கள் தெரிந்து கொண்டிருக்கும் சமாச்சாரங்களை அரசாங்கத்தினர் விரும்பினால், மறைவில்லாது கூறிவிட வேண்டும். சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் துப்பறிய ஈடுபடக்கூடாது. அதாவது ஒரு வீட்டைப்பற்றியோ, அதனுள் நடக்கும் விவகாரங்களைப்பற்றியோ துப்பறிய வேண்டியதிருக்கிறது; ஆனால், அந்த வீட்டின் கதவு பூட்டப்பட்டிருக்கிறது; அதற்காக அந்த வீட்டின் பூட்டை உடைத்தோ, அல்லது வேறு சாவி போட்டுத் திறந்தோ உள்ளே நுழையக்கூடாது! இம்மாதிரி பல விதிகளுக்குட்பட்டுத்தான் அவர்களுக்கு 'லைசென்ஸ்' வழங்கப்படும். விதிகளை அவர்கள் மீறினால், அவர்களது 'லைசென்ஸ்' உடனடியாக ரத்து செய்யப்பட்டு விடும்.

இந்தப் பிரத்தியேகத் துப்பறிபவர்கள் பல சமயங்களில் பெரிதும் பயன்படுகிருர்கள். அதாவது ஒரு இடத்தில் கொலே நடந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம். கொலே நடந்த இடத்தில் நின்று கொண்டிருந்ததாக 'ஜேம்ஸ்' என்ற நபர் கைது செய்யப்படுகிருன். அவனே கொலே செய்ததாகப் போலீஸ் நம்புகிறது. சந்தர்ப்ப சாட்சியங்களும் அப்படி இருக்கின்றன. ஆனல், உண்மையிலே கொலே செய்தது வேறு நபர். தான் நிரபராதி என்பது ஜேம்ஸுக்கு மட்டும் தான் தெரியும். இந்நிலேயில் ஜேம்ஸ், உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடித்தால் தான், அவன் தப்பமுடியும். அப்பொழுது அவன் பிரத்தியேகத் துப்பறிபவனின் உதவியை நாடி, உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கச் சொல்லுகிருன். அதற்கு சம்பளமும் பேசப்படுகிறது. எப்படியோ அந்தப் பிரத்தியேகத் துப்பறிபவன் குற்றவாளியைக் கண்டு பிடித்து, பிடரியில் அடித்து கூண்டில் கொண்டு வந்து நிறுத்தி விடுகிருன். 'கூண்டில் கொண்டுவந்து' என்ருல் 'கைது செய்து' என்று அர்த்தமல்ல. பிரத்தியேகத் துப்பறிபவனுக்கு ஒரு நபரைக் கைது செய்ய அதிகாரம் கிடையாது. ஆனல், போலீஸ் துணேயுடன் அதைச் செய்யலாம். இப்பொழுது ஒரு நிரபராதி விடுபடவும் குற்றவாளி தண்டிக்கப்படவும் இந்தப் பிரத்தியேகப் துப்பறிபவன் பெரிதும் பயன்படுகிருனல்லவா?

ஆனல், அரசாங்கத் துப்பறிபவர்களுக்கு வசதிகள் அதிகம் உண்டு.

நம் நாட்டில் பிரத்தியேகத் துப்பறிபவர்களுக்கு வேலேயே இல்லே. பெரும்பாலும் அரசாங்கத் துப்பறிபவர்களுக்குக் கூட ஒரே மாதிரியான வேலே (Routine Work) தான் இருக்கிறது. ஒருவன் ஒரு வீட்டில் ஏதாவது ஒரு பொருளேக் களவாடிக் கொண்டு போயிருப்பான்; வீட்டுக்காரர் போலீஸில் தெரிவிப்பார். அந்த வட்டாரத்தில் அந்த மாதிரி, அந்த சாமானே களவாடக்கூடியவன் 'இவன்'கத்தான் இருக்கும் என்று போலீஸாருக்குத் தெரியும். அவனே அவர்களே லகுவில் கண்டு பிடித்து விடுவார்கள். இந்நிலேயில் துப்பறிபவர்களுக்கு என்ன வேலே? மர்மமாக நடக்கும் பயங்கரக்கொலே வழக்குகளேயும் போலீஸ் நாய்கள் கண்டு பிடித்து விடுகின்றன. எனவே நாம் துப்பறியும் கலேயைப்பற்றி ருசிகரமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானல், பெரும்பாலும் மேலே நாட்டைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அங்குதான் கல்வி அறிவு பெருகப்பெருக குற்றங்கள் பெருகுவதுடன் புதுமாதிரிக் குற்றவாளிகளும் உற்பத்தியாகின்றனர்.

உதாரணமாக — உடைக்கவே முடியாத பூட்டைக் கொண்ட ஒரு இரும்புப் பெட்டியினுள் ஒரு விலேயுயர்ந்த பொருளே வைத்திருப்பான் ஒருவன். திருடன் அவனே விட ஒரு படி முன்னேறி, அந்தப் பூட்டையும் உடைக்க வழி கண்டுபிடித்து, அதை உடைத்துத் திறந்து பொருளேக் கொண்டு போயிருப்பான்!

ஒரு திருடன் இருந்தாஞம். அவன் எப்படிப்பட்ட பூட்டாக இருந்தாலும் ஒரு கம்பியைக் கொண்டே திறந்து விடுவாஞம்! அவனே எத்தனேயோ

தடவைகள் சிறையினுள் பூட்டி வைத்தும் தப்பித்து விட்டானும். விஞ்ஞானிகள் பலநாள் ஆராய்ச்சி செய்து ஒரு புதுப் பூட்டைக் கண்டு பிடித்து, அவனை சிறையினுள் போட்டு அந்தப் பூட்டினால் பூட்டி, "இதை நீ திறந்துவிட முடியுமா?" என்று சவால்விட்டு, ஒரு சிறிய கம்பியையும் அவனிடம் கொடுத்தார்களாம். அவன் இரண்டே நிமிடத்தில் அதைத்திறந்து விட்டுவெளியே வந்து நின்றானும்!

அறிவு பெருகப் பெருக அங்கு இப்படி அக்ரமங்களும் பெருகி வருகின்றன!

மேல்நாட்டில் ஒருவன் அரசாங்கத் துப்பறிபவனாக ஆக வேண்டுமானால், முதலில் ஒரு சாதாரண போலீஸ்காரனாகச் சேர்ந்து, ஆறு மாதங்கள் முதல் 4 வருடங்கள் வரை பணியாற்றி, அதன் நெளிவு சுழிவுகளைத் தெரிந்தபின்தான் ஆக முடியும்.

இவர்களில் கைவிரல் ரேகைகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்குத்தான் மதிப்பு அதிகம். ஒரு கைதியினுடைய உயிரே இவனுடைய வாக்குமூலத்தில்தான் அடங்கியிருக்கிறது.

ஒவ்வொரு துப்பறிபவனுக்கும் சுருக்கெழுத்து, டைப்அடித்தல், கார் ஓட்டுதல், நீச்சல் முதலியவைகளும் தெரிந்திருக்க வேண்டும்.

துப்பறிபவனுக்கு ஒவ்வொரு நிமிடமும் பொன்னான நேரம். வேலை நேரம் போக மீதி நேரம் சட்ட நுணுக்கங்களைத்தெரிந்து கொள்வதில் பயன்படுத்தப்படுகிறது. துப்பறியும் வகுப்புக்கள் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற உத்தியோகஸ்தர்களால் பாடங்கள் சொல்லித் தரப்படுகின்றன. இவைகளில் பரீட்சைகளும் உண்டு. அவைகளிலும் தேற வேண்டும். எவ்வளவுதான் படித்தாலும் துப்பறியும் 'மூளை'யும் வேண்டும். ஒரு மனிதனின் முகத்தைப் பார்த்தவுடனேயே அவன் திருடனாகவோ அல்லது கொலையாளியாகவோ இருப்பானு என்பதற்குப் பதில் துப்பறிபவன் மனதிற்குள்ளேயே கிடைத்துவிட வேண்டும்.

துப்பறிபவனின் அதிகாரங்கள்

மேல் நாட்டில் சாதாரணமாக குற்றத் தடுப்பு விதி 1851, 2-வது செக்ஷன், செய்யத்தகாத குற்றம் செய்து கொண்டிருக்கும் யாரையும், யாரும் இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை கைது செய்ய அதிகாரம் அளிக்கிறது.

போலீஸ் அதிகாரிகள், பயங்கரமான குற்றத்தைச் செய்து கொண்டிருக்கும் மனிதனைக் கைது செய்து விட்டு, அதன் பிறகு 'வாரண்ட்' பெற்றுக் கொள்வதும் உண்டு. குற்றம் சாதாரணமாக இருந்து, குற்றவாளி தப்பி ஓடிவிட மாட்டான் என்று தைரியம் இருந்தால், அவனை குறிப்பிட்ட தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவு விடும் 'சம்மன்' அனுப்புவதும் உண்டு.

பலவகை வாரண்டுகள்:— வாரண்டுகளில் பல வகைகள் உள்ளன. ஒரு மனிதன் ஒரு திருட்டுச் சொத்தை வைத்திருப்பதாக ஒரு போலீஸ் அதிகாரிக்குத் தகவல் கிடைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அவர் அதை நீதிபதியிடம் எடுத்துரைத்து, குறிப்பிட்ட

இடத்தைத் தேடுவதற்கு "லார்செனி ஆக்ட்" 1861 அல்லது 1916 பிரகாரம் 'தேடுவாரண்டு' பெறலாம்.

திருட்டுக் கையெழுத்திடும் ஒருவனைப் பிடித்த பின்பு அவனது இருக்குமிடத்தை சோதனையிட 'போர்ஜரி ஆக்ட்' 1913 பிரகாரம் வாரண்டு பெறலாம். இதே மாதிரி கள்ள நாணயம், கள்ள நோட்டு சோதனையிடவும் வாரண்டு பெறலாம்.

முதலில் திருட்டுச் சொத்து சம்பந்தப்பட்டதை எடுத்துக் கொள்வோம். ஒரு மனிதன் ஒரு திருட்டுப் பொருளை, அது திருட்டுப் பொருள் என்பது தெரியாமலே வாங்கி வைத்திருக்கலாம்; தெரிந்தும் வாங்கி வைத்திருக்கலாம். தெரியாமல் வாங்கி வைத்திருந்ததாக நிரூபிக்கப்பட்டு விட்டால், அவர் குற்றவாளி இல்லை. அவருக்கு தண்டனையும் கிடையாது. தெரிந்து வாங்கி வைத்திருந்தால் அது குற்றம். அதற்கு 14 வருடங்கள் வரை சிறை தண்டனையும் உண்டு. இந்த இடத்தில்தான் ஒரு துப்பறிபவன் தன் மூளையை நன்றாக உபயோகிக்க வேண்டும். அந்த மனிதன் தெரிந்து வாங்கி வைத்திருந்தாரா? அல்லது தெரியாமல் வைத்திருந்தாரா? என்பதை சூழ்நிலைகள், தன் சூட்சும புத்தி இவைகளைக் கொண்டு கண்டு பிடிக்க வேண்டும்.

உதாரணமாக அந்த மனிதனுடைய வீட்டில் திருட்டுச் சொத்து மறைத்து வைக்கப்பட்டிருந்து, தனக்கு அது தெரியாது என்று மறுத்தால், அவன் அநேகமாக குற்றவாளியாக இருப்பான். சிலர் அந்தப் பொருளை தான் வாங்கிய விலையைச் சொல்லுவார்கள். அந்த விலை மிகக் குறைந்ததாக இருந்தால், அதே அவனுக்கு எதிரான ஒரு பலமான சாட்சியாக உருப்பெற்று விடுகிறது.

திருட்டுச் சொத்துகள் உரு மாற்றப்பட்டு விட்டால், அவைகளைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகி விடுகிறது.

துப்பறிபவன் துப்பறியும் பொழுது அனுவசியமான இடமென்று ஒன்றையும் ஒதுக்கி விடக் கூடாது. தொங்க விட்டிருக்கும் படத்தின் பின்னால், விளக்குகளுக்குள், அடுப்பிற்குள் எல்லாம் தேட வேண்டும்.

குற்றத் தடுப்பும் துப்பறிதலும்: ஒருவன் குற்றத்தை செய்த பின் அவனைத் தேடிக் கண்டு பிடிப்பதை விட, அவன் அதைச் செய்யுமுன் கூடுமானவரை அதைத் தடுத்து நிறுத்த முயல்வதே நல்லது. ஆனால், குற்றம் செய்யும் எந்த மனிதனும் தான் செய்யப் போகிற குற்றத்தைச் சொல்லி விட்டுச் செய்வதில்லை. அவன் செய்த பிறகுதான் நமக்குத் தெரிகிறது. என்ற போதிலும் ஓரளவு சந்தேகத்தை வைத்து நாம் ஏதோ கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம். இந்த விஷயத்தில் பொதுமக்களும் போலீஸாருடன் ஒத்துழைக்க வேண்டும்.

மேல் நாடுகளில் கூடிய வரையில் பொதுமக்கள் போலீஸாருடன் ஒத்துழைக்கிறார்கள்.

உதாரணமாக நியூயார்க்கில் ஒரு பிரபல பாங்கியைக் கொள்ளையிட ஒரு கூட்டத்தினர் திட்டமிட்டனர். வெளியில் காரை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்து கொள்ளையடித்து, பின் காரில் ஏறி ஓடி விடுவது அவர்கள் திட்டம். ஒரு மனிதனுக்கு, அவர்கள்

டெலிபிரிண்டர்

டைப் அடிக்கும் இயந்திரம் உபயோகிக்கத் தெரிந்த யாரும் இதை உபயோகிக்கலாம். இதன் மூலம் ஒரு நிமிஷத்திற்கு 66 வார்த்தைகள் வீதம் செய்தி அனுப்ப முடியும்.

செய்தி வாங்குமிடத்தில் செய்தியை பெற்றுக் கொள்வதற்காக ஒரு நபர் இருக்கவேண்டிய அவசியமில்லை. $8\frac{3}{4}$ அகல காகிதத்தில் தானே தெளிவாக பதிந்து விடுகிறது. அந்தச் செய்தி அனுப்பப்படுமிடத்திலும் பதிவு செய்யப்படுகிறது. தேவையான பிரதிகளை அப்பொழுதே எடுத்துக்கொள்ளலாம்.

ஏதோ தவறுதலான காரியத்தைச் செய்துவிட்டு, காரில் ஏறி ஓடப் போகின்றனர் என்பது மட்டும் தெரியும். உடனே அதை போலீசுக்குத் தெரிவித்தான்; உடனே ஒரு துப்பறிபவர் வந்து, அந்தக் காரின் உள்ளே சில 'வேலை நிறுத்த' வேலைகளைச் செய்து வைத்துவிட்டார். கொள்ளைக்காரர்கள் பணத்துடன் ஓடி வந்து காரை 'ஸ்டார்ட்' செய்தனர். அது புறப்படவில்லை. அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால், சில சமயங்களில் இம்மாதிரி செய்தி தருவது வியர்த்தமாகவும் போய் விடுகிறது. ஒரு மனிதன் ஒரு சாக்கு நிறைய ஏதோ வைத்துக் கொண்டு 'திருட்டு விழி' விழித்துக் கொண்டு அங்குமிங்கும் பார்த்தவாறே வேகமாக நடந்து கொண்டிருந்தான். ஒரு நபர் சந்தேகப்பட்டு இதை போலீஸில் தெரிவித்தான். உடனே போலீஸாரும் வந்து அவனைப் பிடித்து சாக்கைச் சோதனையிட்டனர். அதில் குப்பைக் காகிதங்களும் பழைய டப்பாக்களும் இருந்தனவாம்!

மேல் நாடுகளில் பெண்களும் இம்மாதிரி திருட்டு வேலைகளில் சர்வ சாதாரணமாக ஈடுபடுவதுண்டு. நன்றாக உடை உடுத்திருப்பார்கள், கடைகளினுள் சென்று விலை விசாரித்துக் கொண்டே செல்வார்களே ஒழிய, ஒன்றும் வாங்க மாட்டார்கள். கடைசியாகப் பார்த்தால், நிறைய சாமான்கள் அவர்கள் அழகிய ஆடைகளினுள் ஒளித்து வைக்கப்படடிருக்கும். இதை 'ஷாப்லிப்டிங்' (Shop Lifting) என்று அழைப்பார்கள்.

மாறு வேடம்:—துப்பறிபவனுக்கு சமயத்தை யொட்டி மாறுவேடம் அணியவும் தெரிந்திருக்க வேண்டும். மாறுவேடம் அணியும்போது முக்கியமாகக் கவனிக்கவேண்டியவை கண்கள். மாறுவேடமிட்டு, கண்களையும் மறைத்து விட்டால், அடையாளம் கண்டு பிடிக்கவே முடியாது!

துப்பறிபவன் மாறுவேடமிட்டு ஒரு நபரைப் பின் தொடர்ந்து செல்லுகிறானென்று வைத்துக் கொள்வோம். துப்பறிபவன் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது—தன் மாறு வேடத்தை எதிரி கண்டு கொண்டானா என்பதுதான். "கண்டு

கொள்ளவில்லை'' என்ற எண்ணத்துடன் போய் ஆபத்தில் மாட்டிக்கொள்ளக் கூடாது. வசதியைப் பொருத்து அடிக்கடி மாறுவேடம் அணிந்து கொள்ள வேண்டும். ஒரே மனிதன் தன் பின்னாலேயே வருகிறான் என்பதை எதிரி கண்டால், அவனுக்கு எளிதில் சந்தேகமுண்டாகும்.

துப்பறிபவன் தெருவில் நடந்து கொண்டே இருக்கும்போது ஜன்னல் வழியே ஒரு வீட்டினுள் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கவேண்டியதிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். நடந்து கொண்டிருக்கும்போதே 'சட்'டென்று நின்று உற்றுப்பார்க்ககூடாது! அது வீதியில் நடப்பவர்களுக்குக் கூட சந்தேகத்தை உண்டாக்கும். கீழே விழுந்து விட்ட ஒரு பொருளை எடுப்பது மாதிரி நின்று, கண்ணோட்டத்தைச் செலுத்தலாம். இது அந்த சமயத்தைப் பொருத்தது.

இதரவேலை :—ஒரு துப்பறிபவனுக்கு துப்பறிந்து கொண்டே போவது மட்டும் வேலை இல்லை. இதர வேலைகளும் எவ்வளவோ இருக்கின்றன.

உதாரணமாக, முக்கியமானது—நீதி மன்றத்தில் சென்று சாட்சி சொல்லுவது தான். 'டிபென்ஸ்' தரப்பு வக்கீல் கேட்கிற குறுக்குக் கேள்விகளுக்கெல்லாம் ஏறுக்கு மாறாகி விடாமல் தெளிவான பதிலளிக்கவேண்டும்.

ஆங்கிலத்தில் எர்ல் ஸ்டான்லி கார்ட்னர் (Erle Stanley Gardner) என்றொரு பிரபல கதாசிரியர் இருக்கிறார். அவர் தனது துப்பறியும் கதைகளிலெல்லாம் 'பெர்ரிமேஸன்' என்ற வக்கீலை கதாநாயகனாக உலவ விடுவார். எப்பொழுதும் 'பெர்ரிமேஸன்' டிபென்ஸ் தரப்பில்தான் ஆஜராவது வழக்கம். அவருக்கு எதிராக ஜில்லா அட்டர்னி ஆக 'ஹாமில்டன் பர்கர்' என்பவரும் லெப்டினன்ட் 'டிராக்', ஸார்ஜன்ட் 'ஹால்கார்ப்' ஆகியோர் படுகிறபாட்டை அதைப் படித்துத்தான் தெரிந்து கொள்ளவேண்டும்!

அரசாங்க வைத்தியர் பிணத்தை நன்றாகச் சோதனையிட்டுவிட்டு, ''சரியாக 2-மணி முதல் 3-மணிக்குள் கொலை நடந்திருக்கிறது'' என்பார்.

வயர்லெஸ்

போலீஸ்காரர்களுக்கும், துப்பறிபவர்களுக்கும் இந்தச் சாதனம் மிகவும் பயன்படுகிறது. முக்கியமாக ரோந்து சுற்றும் வேலைகளிலும் மோட்டார் சைக்கிள்களிலும் இருப்பவர்களுக்கு மத்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ள இது பெரிதும் பயன்படுகிறது. தேம்ஸ் நதியின்மீது மோட்டார் படகில் ரோந்து சுற்றும் போலீஸ்காரர்களும் இதை உபயோகிக்கிறார்கள். போலீஸ் மோட்டார்கள் லண்டனின் அநேகம் பகுதிகளில் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். மத்திய நிலையத்துக்கு ஒரு செய்தி கிடைத்ததும் சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள போலீஸ்காருக்கு வயர்லஸ் மூலம் செய்தி அனுப்பப்படுகிறது.

பெர்ரிமேஸன், "கொலை 1-59 க்கு நடந்திருக்கலாமா?" என்பார். அரசாங்க வைத்தியர் திணறுவார்! "நடந்திருக்கலாம்" என்றால் முன்கூறிய சாட்சியம் பொய்யாகும். "இல்லை" என்றால் "அவ்வளவு குறிப்பாக எப்படிக் கூற முடிந்தது?" என்று பதில் கேள்வி பிறக்கும்.

அரசாங்கத் தரப்பு துப்பறிபவரிடமும்கூட 'டிபென்ஸ்' தரப்பு வக்கீல் இம்மாதிரிக் கேள்விகள் கேட்கலாம். அவைகளுக்கெல்லாம் சரியான பதிலளிக்க வேண்டும்.

தொடர்புச் சாதனங்கள்

டெலிபோன் : — குற்றங்கள் புதிய புதிய முறைகளில் பெருகி வருகின்றன. அவைகளை விட, கண்டு பிடிக்கும் முறைகளில் துப்பறிபவர்களும் போலீஸும் முன்னேறியிருந்தால்தான் அவைகளை அடக்க முடியும். முக்கியமாக நாடெங்கும் உள்ள போலீஸ் இலாக்காக்கள் அத்தனையும் ஒரே தொடர்பில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கு டெலிபோன் மிகவும் பயன்படுகிறது. இப்பொழுது நான் கூறி வருவது, கூறப்போவது எல்லாம் அநேகமாக மேலை நாடுகளில் நடைபெறுவதுதான். இம்முறையில் தான் நம் நாடும் செயலாற்ற முயற்சி செய்கிறது.

லண்டனில் ஒவ்வொரு பீட் போலீஸ்காரரும் மத்திய போலீஸ் நிலையத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளப் போதுமான டெலிபோன் வசதி இருக்கிறது. அங்குள்ள 'மெட்ரோ போலிடன்' போலீஸார் கண்காணிப்பில்700 சதுர மைல்கள் உள்ளன. அதில் 23 போலீஸ் டிவிஷன்கள் 4 ஜில்லாக்களில் இருக்கின்றன. எல்லா நிலையங்களும் மத்திய நிலையத்துடன் (New Scotland yard) தொடர்பு கொள்ள முடியும். எனவே சாதாரணமாக ஒரு பீட்போலீஸ்காரன் மத்திய நிலையத்திற்கு தெரிவிக்கும் ஒரு செய்தியை அவர்கள் பிரிவு நிலையங்களின் மூலம் லண்டன் நகர் முழுவதும் இரண்டொரு நிமிடங்களில் தெரிவித்து விட முடியும். போலீஸ் பெட்டி முறை :—இந்தப் புது முறை லண்டனில் தற்சமயம் அமுலுக்கு வந்து வெற்றிகரமாக நடைபெறுகிறது. அவசரத்தை முன்னிட்டு பொது மக்களும் இதை உபயோகிக்கலாம். சுமார் 600 பெட்டிகள் லண்டன் நகரெங்கும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் நன்றாக கண்ணுக்குத் தெரியும்படி நீல நிறத்தில் இருக்கும். அந்தப் பெட்டியின் மீதுள்ள விளக்கு எரிந்தால், அந்த வட்டாரத்திலுள்ள போலீஸ் காரனுக்கு மத்திய நிலையத்தினர் ஒரு செய்தி சொல்ல விரும்புகின்றனர் என்று அர்த்தம். அதே மாதிரி எந்த போலீஸ் காரனும் மத்திய நிலையத்துக்கு செய்தி சொல்ல விரும்பினால், அந்த பெட்டியினுள் இருக்கும் டெலிபோனை உபயோகிக்கலாம். இந்த போலீஸ் பெட்டி முறை நல்ல வெற்றி அளித்திருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். டெலி பிரிண்டர்களும் துப்பறிபவர்களுக்கு வெகுவாகப் பயன்படுகின்றன.

டிக்டபோன் : — செய்தி தொடர்பு கொள்ளும் விஷயத்தில் போலீஸாருக்கு உதவியாக இருக்கும். இன்னொரு சாதனம் இந்த 'டிக்டபோன்.' இந்த இயந்திரம் சொன்னதை அப்படியே திருப்பிச் சொல்லும்

தன்மையுடையது. பேச விரும்பும் ஒருவர் இயந்திரத்தை ஓட விட்டு பேசும் குழாயின் மூலமாகப் பேசவேண்டும். இந்தக் குழாய் சொன்னதையெல்லாம் அப்படியே பதிவு செய்யும் ஒரு மெழுகு உருளையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அந்த மெழுகு உருளை பேசுபவைகளையெல்லாம் அப்படியே பதிவு செய்து கொள்ளுகிறது. பேசியதை மீண்டும் கேட்க வேண்டுமென்று நினைக்கும் பொழுது அதை ஓட விட்டு கேட்டுக்கொள்ளலாம். இந்த சப்தத்தை அதிகமாகவோ அல்லது குறைத்தோ கேட்கச் செய்யலாம். இதில் உபயோகப்படுத்தப்பட்ட மெழுகு உருளைகளையே மீண்டும் மீண்டும் உபயோகப் படுத்தலாம். சில சமயங்களில் டெலிபோன் மூலம் வரும் செய்தியையும்கூட பதிவு செய்ய விரும்பினால், இந்த இயந்திரத்தை டெலிபோனுடன் இணைத்து விட்டால், அது அப்படியே பதிவு செய்யப்பட்டு விடுகிறது. இன்னும் போலீஸாருக்கு 'டிக்டோகிராப்,' 'மைக்ரபோன்' போன்ற சில இயந்திரங்களும் பயன்படுகின்றன.

குற்றவாளியைத் தேடுதல்

ஒரு துப்பறிபவனுக்கு அவனது ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்கும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். பெயரைச் சொன்ன மாத்திரத்தில் 'சட்'டென்று அந்த இடம் நினைவுக்கு வரவேண்டும். துப்பறிபவனுக்கு அதிகமான ஞாபக சக்தியும் வேண்டும். ஒரு முறை பார்த்த ஒரு மனிதனை மீண்டும் பல வருஷங்கள் கழித்துப்பார்த்தாலும், அவனை எங்கு, எப்பொழுது பார்த்தோம் என்று நினைவுக்கு வர வேண்டும். ஓரிடத்தில் கொள்ளையடிக்கப்பட்டு, கொலையும் நடந்திருக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம. அந்த வீட்டில் குற்றவாளியின் காலடித்தடமோ கைவிரல் ரேகைகளோ இல்லாவிட்டால், இதில் அனுபவமுள்ள ஓர் ஆசாமிதான் இதைச் செய்திருக்க வேண்டுமென்று நம்பலாம்; எனவே போலீஸாரிடமுள்ள சந்தேகத்திற்கிடமான ஆசாமிகளின் பட்டியலிலுள்ள நபர்கள் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று பார்த்தால், பட்டியல் இரண்டு மூன்று நபருக்குக் குறைந்து விடும். பிறகு கொலை நடந்த நேரத்தில் அந்த ஆசாமிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதை மிக கவனத்துடன் தெரிந்து கொள்ள வேண்டும். பொய்யான செய்திகளில் ஏமாந்துவிடக் கூடாது! உதாரணமாக ஒரு மனிதனை அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் என்ன செய்து கொண்டிருந்தான் என்று விசாரிக்கும் பொழுது, அவன் வெகு தூரத்திலுள்ள ஒரு நண்பன் வீட்டில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்ததாகக் கூறுகிறான் என்றால், அவனை அப்படியே விட்டு விடக் கூடாது. "உன்னுடன் விளையாடியவர்கள் யார்? எவ்வளவு நேரம் விளையாடினீர்கள்? நீங்கள் விளையாடிய சீட்டுக் கட்டு யாரிடம் இருக்கிறது?" என்பன போன்ற பல கேள்விகளைக் கேட்டு உண்மையை அறிய வேண்டும்.

சந்தேகப்பட்ட நபர்கள் கடந்த சில தினங்களாக என்ன செய்து கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

கொள்ளையடித்தலும் கொலை செய்தலும் திட்டமிடப்படாமல் செய்யவே முடியாது. சுமார் ஒரு வார காலமாவது நன்றாகத் திட்டமிட்டுத்தான வேலையில் இறங்குவார்கள். எனவே அதைப் பற்றி துப்பு விசாரிப்பது பயன் தரும். திருடிய பின்போ, கொள்ளையடித்த பின்போ, எப்பேர்ப்பட்ட திறமைசாலியாயினும் ஒரு உளவாவது விடாமல் செல்வதில்லை. அவன் எவ்வளவு முன் ஜாக்கிரதையாக இருந்தாலும் அவனை அறியாமல் அவனைக் காட்டிக் கொடுக்கும்படியான இரண்டொரு உளவுகள் அகப்பட்டு விடுகின்றன. உதாரணமாக அவன் கை விரல் ரேகைகள் எங்கேயாவது பதிந்து விடும். ஈரமண் இருக்கும் பக்கம் நடந்திருப்பான். அவன் காலடித்தடம் அப்படியே பதிந்து விட்டிருக்கும். அல்லது இவன் கொள்ளையடித்த வீட்டில் புதிதாக சாயம் அடித்திருக்கலாம். அந்த சாயம் இவன் சட்டையிலோ வேட்டியிலோ ஒட்டியிருக்கலாம். இம்மாதிரி குற்றவாளி தன்னை அறியாமலே எத்தனையோ உளவுகளை விட்டுச் செல்லுகிறான். அந்த உளவுகளேதான் அவனைப் பிடிக்கவும் உதவுகின்றன.

துப்பறிபவனுக்கு விஞ்ஞானத்தின் உதவிகள்

அடுத்து ஒரு மனிதன் விஷம் கொடுத்து கொல்லப்பட்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஒரு விஷப்புட்டியும் தேடும் பொழுது கிடைக்கிறது. அந்தப் புட்டியிலுள்ள விஷத்தினுல்தான் அந்த மனிதன் கொல்லப் பட்டிருக்கிறான் என்று எப்படித் தெரிந்து கொள்ளுவது? இந்த இடத்தில் விஞ்ஞானம்தான் பயன்படுகிறது. தேர்ந்த ஒரு வைத்தியனே அல்லது விஞ்ஞானியோ இதைக் கூறிவிட முடியும்.

இவைகளைச் சோதனையிடுவதற்கு லண்டனில் போலீஸ் லாபரெட்டரிகள் இருக்கின்றன. இவைகளில் தலை சிறந்தது ''ரீஜனல் போலீஸ் லாபரெட்டரி.'' இதிலுள்ள கருவிகளில் தலை சிறந்தது 'ஒத்திட்டுப் பார்க்கும் சூட்சும தரிசனி' (Comparison Microscope) ஆகும். இதன் உதவியால் இரண்டு பொருள்கள் ஒரே நேரத்தில் பரிசோதனை செய்யப்படலாம். கொல்லப்பட்ட ஒரு மனிதனின் உடலில் ஒரு துப்பாக்கிக்குண்டு இருந்து கிடைத்தது என்று வைத்துக் கொள்ளுவோம். அங்கு ஒரு கைத்துப்பாக்கியும் கிடைக்கிறது. கிடைத்த குண்டு அந்த துப்பாக்கியிலிருந்து வந்தது தானு என்பதை இந்தக் கருவியின் மூலம் கண்டு கொள்ளலாம். ஒரே நேரத்தில் குண்டையும் துப்பாக்கி குழலையும் ஒன்றாக இந்தக் கருவியில் வைத்து சோதனையிடலாம்.

ஒரு கொலையாளி தன் உடையிலுள்ள ரத்தக்கறையை நன்கு கழுவியிருந்தாலும் 'ஸ்பெக்ட்ராஸ் கோப்' என்னும் கருவியின் மூலம் கண்டு பிடித்துவிட முடியும்.

இந்த விஞ்ஞான சாட்சியங்கள்கூட நீதி மன்றத்தில் சில சமயம் நிலை நிற்பதில்லை. சாதாரணமாக ஒரு குற்றவாளி இந்த விஞ்ஞான சாட்சியங்களை கொண்டுமட்டும் தண்டிக்கப்பட்டு விடுவதில்லை. அவன் குற்றவாளி என்பதற்குக் காட்டப்படும் காட்சியங்களுள் இதுவும் ஒன்று. அனு

பவ முதிர்ச்சி பெற்ற விஞ்ஞானி தன் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார் அவ்வளவுதான்!

கொலை செய்துவிட்டு ஓடும்பொழுது அவனைத் தன் கண்களால் பார்த்தாக ஒரு சாட்சி கூறுவான். அவன் பார்த்த நேரம் சாயங்காலமாக இருந்திருக்கும். அவனை 'டிபென்ஸ்' தரப்பு வக்கீல் குறுக்கு விசாரணை செய்யும் பொழுது குற்றவாளி போன்ற வேறொரு நபரைக்காட்டி, ''ஓடியது அவனாக இருக்குமோ?'' என்று கேட்டால் சாட்சி, குழம்பி விடுவான். அவனால் உறுதியாகக் கூற முடியாது.

ஆனால், இதே சாட்சியத்தை ஒரு விஞ்ஞானி கூறுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். ''கைதியின் பூட்ஸ்களை நான் பரிசோதித்தேன். அதில் சில புற்கள் ஒட்டிக்கொண்டிருந்தன. கொலையுண்டவரின் வீட்டுத் தோட்டத்திலுள்ள புற்களையும் எடுத்து பரிசோதித்தேன். அவை இரண்டும் ஒன்றுதான் என்று கண்டேன். கைதியின் சட்டையில் உள்ள ரத்தம் கொலை யுண்டவரின் ரத்தம் தான் என்று என் சோதனை மூலம் அறிந்தேன்.'' இவ்வாறு விஞ்ஞானி உறுதியாகக் கூறும் பொழுது அது ஒரு பலமான சாட்சியமாக அமைந்து விடுகிறது.

துப்பறிபவனுக்கு புகைப்பட உதவி

சில பொருள்களை சாட்சியமாக நீதி மன்றத்திற்கு கொண்டு வரமுடியாது. உதாரணமாக ஒரு சுவரில் ரத்தக் கறை படித்திருக்கிறது என்றால், அந்தச் சுவரை எப்படி நீதி மன்றத்திற்கு கொண்டு வருவது? இந்த இடத்தில், அந்தச்சுவரை புகைப்படமெடுத்து அதை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யலாம். இன்னும் சில சமயங்களில் சாட்சியம் மிகச் சிறிய பொருளாகப் போய் விடுவதும் உண்டு. இந்நிலையில் அப்பொருள் பெரியதாகப் படமெடுக்கப்பட்டு, நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட அனுமதிக்கப்படுகிறது.

புகைப்பட மெடுப்பதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது - எந்தெந்த பொருள்கள் துப்பறிபவன் காணும் பொழுது எப்படியிருந்தனவோ அப்படியே வைத்து படமெடுக்கப்பட வேண்டும். உதாரணமாக பிணம் முதலில் (கொலை கண்டு பிடிக்கப்படு முன்) கட்டிலின்மேல் ஒரு ஓரமாக இருந்திருக்கலாம். பிறகு தவறுதலாக யாரேனும் பிணத்தைத் தட்டிவிட்டு அது கட்டிலிலிருந்து கீழே விழுந்திருக்கலாம். இதைக் கேட்டுத் தெரிந்து கொண்ட துப்பறிபவன், பிணத்தைத் தூக்கி, அது முன்பு இருந்தபடி கட்டிலில் வைத்துப் படமெடுக்க நினைக்கக்கூடாது. துப்பறிபவன் பார்க்கும் பொழுது பிணம் எந்நிலையில் கிடந்ததோ அப்படியே அது படமெடுக்கப்படவேண்டும்.

தவிரவும் குற்றவாளிகளைப் படமெடுத்து வைத்துக்கொள்வதால் பிற்பாடு அவர்களை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளவும் முடிகிறது. ஒரு குற்றவாளியின் புகைப்படம் இரண்டு மாதிரிகளில் எடுக்கப்படுகிறது. முழு முகமும் தெரிகிறாற்போல் ஒன்றும், கைதியின் வலதுபுற முகம்மட்டும் தெரிகிறாற்போல இன்னொன்றும் எடுக்கப்படுகிறது. இன்

னும் தெருக்களில் விபத்து நேர்ந்து விட்டால் அவைகளின் நிலையை விளக்கவும் புகைப் படம் பயன்படுகிறது.

சூட்சுமதரிசினி மூலம் ஒரு பத்திரம் சோதனை செய்யப்படு கிறது என்று வைத்துக் கொள் வோம். அப்பொழுது சோதனை யாளர், அந்தப் பத்திரத்தில், சில வார்த்தைகள் மிகவும் திற மையாகச் சேர்க்கப்பட்டிருப் பதையோ எடுக்கப்பட்டிருப் பதையோ காண்கிறார். அதை அப்படியே நீதிமன்றத்தில் கொண்டு வந்து நீதிபதியையும் ஜூரிகளையும் சூட்சுமதரிசினி யின் வழியே பார்க்கச் செய்து உண்மையை அறியச் செய் வது முடியாத காரியம். ஆனால், இந்த உண்மையையும் அவர்கள் காண வேண்டும், இந்நிலையில் அது அப்படியே 'அல்ட்ரா வயலட்' முறைப்படி புகைப்பட மெடுக்கப்பட்டு, ஜூரிகளின் பார்வைக்கு வைக் கப் படுகிறது.

''மைக்ரோ போட்டோ கிராபி'' வழியில் சிறிய அளவி லுள்ள பொருள் மிகப் பெரி தாகப் படம் எடுக்கப்படுகின் றன. கைவிரல் ரேகைகளைப் பட மெடுப்பதில் தான் இது அதிகமாகப் பயன்படுகிறது. இதற்கு ''கொடாக்-பால்மர்க் ராப்ளக்ஸ்'' காமிரா பயன் படுகிறது.

காட்டிக் கொடுக்கும் உளவுகள்

எந்த இரு மனிதர்களின் கை விரல் ரேகைகளும் ஒன்று க இருப்பதில்லை. ஒரே தாய் வயிற்றில் ஒரே நேரத்தில் பிறந்த இரட்டைக் குழந்தை களுக்குக் கூட ரேகைகள் வித்தியாசப் படுகின்றன. மனி தன் வளர வளர அவனது கைவிரல் ரேகைகளும் மாறு படுமோ என்று சிலர் நினைக்க லாம். இல்லை. மாறுபடுவ தில்லை. விரல்கள் வளர, வளர அந்த ரேகைகளும் உருவத்தில் மாறுபடாமல் விரலோடு ஒட்டி வளருகின்றன. துப்பறி பவன் ஓரிடத்தில் துப்பறியும் பொழுது கைவிரல் ரேகைகள் பதிந்து இருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டியது மிக அவசியம். சாதாரணமாக டம்ளர், கத்தி, கைத் துப்பாக்கி புட்டிகள், கதவின் கைப் பிடிகள். ஜன்னல் விளிம்பு முதலியவைகளில் ரேகைகள் எளிதாகப் பதிந்திருக்கும். அவைகளை கவனிக்கவேண்டும். இப்பொருள்களைத் தொடும் பொழுதோ அல்லது எடுக்கும் பொழுதோ துப்பறிபவனின் கைரேகைகள் அதில் ஒட்டி விடாமலும், அதிலுள்ள ரேகை கள் அழிந்து விடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக அந்த இடத்தை சோதனையிடும் துப்பறிபவனு டைய கைவிரல் ரேகைகளும் வீட்டில் வசிப்பவர்களுடைய கைவிரல் ரேகைகளும் பற்பல பகுதிகளில் காணப்படும். அவைகளைக் கண்டு துப்பறி பவன், ''இது யாருடைய ரேகையோ?'' என்று குழம்பி விடாமல் இருக்க முதலிலேயே வீட்டில் வசிப்பவர்களுடைய ரேகைகளை எடுத்துக் கொள் வது நலம்.

ஓரிடத்தில் விரல் ரேகை துல்லியமாகத் தெரிந்தால், அதை அப்படியே ரேகையைப் படமெடுக்கும் காமிராவால்பட மெடுத்துக்கொள்ளவேண்டும். துல்லியமாகத் தெரியக்கூடிய இடங்கள் கண்ணாடி சம்பந்தப் பட்டவை, பளபளக்கும் உலோகங்கள், மெழுகு வர்த்தி முதலியவைகளாகும்.

ரேகைகள் நன்கு தெரிவதற்கு ஒருவித பௌடர் உபயோகப் படுத்தப்படுகிறது. இந்தப் பௌடரை ரேகை அடையாளங்களின் மீது, அது கலந்து விடாமல் தூவி, அதைப்பட மெடுப்பதே ஒரு தனிக்கலை! கைவிரல் ரேகைகளை ஒத்திட்டு கண்டு பிடிப்பதில் 'எப்பிடியாஸ்கோப்' என்னும் கருவி மிகவும் உபயோகப்படுகிறது.

திருட்டில் துப்பறிபவன் வேலை

ஒரு வீடு கதவு உடைத்தோ அல்லது வேறு வழிகளிலோ திருட்டுக்குள்ளாகியிருக்கிறதாக செய்தி கிடைத்துச் சென்றால், முதலில் வீட்டை நன்றாகச் சோதனையிட வேண்டும். சில சமயங்களில் திருடன் வீட்டிற்குள்ளேயே இருப்பான். அப்படி ஒருவனும் இல்லாவிட்டால், துப்பறிபவன் அடுத்தபடியாகக் கவனிக்க வேண்டியது எந்த முறையில் திருடன் உட்புகுந்தான் என்பது. கதவு பலாத்காரமாக உடைத்துத் திறக்கப்பட்டோ அல்லது பூட்டு உடைக்கப்பட்டோ இருக்கலாம். சில சமயங்களில் தாழ்ப்பாளருகில் துவாரமிட்டு கையை உள்ளே நுழைத்து தாழ்ப்பாளை நீக்கி உட்புகுந்திருக்கலாம். ஜன்னல் வழியாகவும் வந்திருக்கலாம், அடுத்து கவனிக்க வேண்டியது அவன் எப்படி வெளியேறியிருக்கிறான் என்பது.

அடுத்து, கைவிரல் ரேகைகள் பதிந்திருந்தால், அவைகளைப் படமெடுத்துக் கொள்ள வேண்டும். சில சமயங்களில் திருடன் சில ஆயுதங்களைக்கூட போட்டு விட்டுச் சென்றிருக்கலாம். அவற்றையும் பத்திரப்படுத்த வேண்டும்.

அடுத்து திருட்டுப்போன போன பொருட்கள் என்னென்ன என்று கவனித்து, அவைகளின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

சில சமயம், தான் களவாடப்பட்டதாக போலீஸுக்கு அறிவிக்கும் நபர் உண்மையில் களவாடப்பட்டே இருக்க மாட்டார். தனக்கு வேறு முறையில் வரவேண்டிய லாபத்திற்கு இம்முறையைக் கையாளுவார்.

லண்டனில் ஒரு வீட்டிலுள்ளவர் போலீஸுக்கு, தன் வீட்டிலுள்ள எல்லா நகை, பொருள்களும் களவாடப்பட்டு விட்டதாக அறிவித்தார். அத்தனை பொருள்களும் 'இன்ஷ்யூர்' செய்யப்பட்டிருந்தன. போலீசார் வீட்டை வந்து பார்த்தபொழுது வீட்டின் முன்புறமுள்ள கண்ணாடிக் கதவின் தாழ்ப்பாளருகே வட்டமாக வெட்டப்பட்டிருந்தது. வீட்டுக்காரர், "திருடன் கண்ணாடியை அப்படி வெட்டி எடுத்து வெளியிலிருந்தவாறே தாழ்ப்பாளை நீக்கி உள்ளே வந்து திருடியிருக்கலாம்" என்று அபிப்பிராயம் தெரிவித்தார். ஒரு கதவும் பலவந்தமாக உடைக்கப்பட்டிருந்தது. துப்பறிபவர்கள் சோதனையிட்டதில், கண்ணாடிக் கதவு வீட்டின் உட்புறமிருந்து அறுக்கப்பட்டதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. வெளிப்புறமிருந்து திருடவரும் திருடனால் உட்புறம் எப்படி அறுக்க முடியும்? கதவும் இதே மாதிரிதான் உட்புறமிருந்து தாக்கி உடைக்கப்பட்டிருந்தது. கடைசியாக அந்த வீட்டுக்காரரே இன்ஷ்யூரன்ஸ் பணத்தைப் பெறுவதற்கு இப்படி வேடமிட்டார் என்று தெரியவந்தது!

கொலையில் துப்பறிபவன் வேலை

ஒரு பிணம் ஓரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டு துப்பறிபவன் அதில் தலையிட்டதும் அவன் சில கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும். முதலில் இது கொலையா? தற்கொலையா? எப்பொழுது இறந்தான்? எப்படி இறந்தான்? விஷம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதோ? துப்பாக்கியால் சுடப்பட்டிருக்கிறானா? கத்தியால் குத்தப்பட்டிருக்கிறானா? அல்லது ஏதேனும் கனமான பொருளால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறானா என்பன போன்ற கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்கவேண்டும். வீட்டிலுள்ள ஒவ்வொரு நபரின் வாக்கு மூலமும் வாங்கப்பட வேண்டும். சிலர் தவறுதலான வாக்கு மூலம் கொடுத்து, துப்பறிபவனின் பாதையையும் கூட தவறுதலான பாதைக்குத் திருப்பி விடுவார்கள்.

திருட்டுக்காகக் கொலை நடந்திருந்தால், அநேகமாக கொலையாளி போலீஸுக்குத் தெரிந்த நபராகத்தான் இருக்க வேண்டும். உடனே துப்பறிபவன், குற்றவாளிகளின் பட்டியலிலுள்ள பெயரில் யார் கொலையுண்ட நபருடன் ஓரளவு தொடர்பு கொண்டிருக்கிறான் என்று பார்க்க வேண்டும். களவு மட்டும் கொலைக்கு காரணமாயிருக்காது. சில சமயங்களில் பொறாமை, பெண் விஷயம், பழிவாங்குதல் முதலிய எத்தனையோ காரணங்கள் இருக்கும். இதில் காரணத்தை நிச்சயிக்க கொலையுண்டவரின் கடந்தகால வாழ்க்கைபற்றி சுற்று வட்டாரத்தில் விசாரித்து அறியவேண்டும்.

துப்பறிபவன் தனக்குக் கிடைக்கும் எந்தச் சிறிய உளவையும் அலட்சியமாக விட்டு விடக்கூடாது. நிச்சயம் அவை உபயோகப்படலாம்.

துப்பறிபவர்கள் எப்பொழுதும் ஒரு நபரிடம் வழிகாட்டும் கேள்விகளை (Leading Ques-rions) கேட்கக்கூடாது. மனோதத்துவ முறைப்படி இது தவறு. அதாவது ஒருவன் ஓரிடத்தில் கொலையுண்டு கிடக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் கொலையுண்ட அந்த நேரத்தில் அவனருகே ஒரு கார் சற்று நேரம் நின்று கொண்டிருந்ததாக, பார்த்த ஒரு சாட்சி கூறுகிறான். அவனிடம் அந்தக் காரின் அடையாளங்களைப்பற்றி விசாரிக்கலாம். பத்து கார்களின் நடுவே போலீஸார் சந்தேகப்படும் காரையும் நிறுத்தி, அவனை அடையாளம் கண்டு பிடிக்கச் சொல்லலாம். அதைவிட்டு ஒரு குறிப்பிட்ட காரைக்காட்டி, ''இந்தக் கார்தானா அது?'' என்று கேட்பது தவறு. அப்படிக் கேட்டால், மனோதத்துவ முறைப்படி சாட்சியின் மனது மாறி—அவன் அதே மாதிரி வேறு காரைப் பார்த்திருந்தாலும்கூட இந்தக் காராகத்தான் இருக்கும் என்று தீர்மானமாக நினைத்து விடுவான்.

துப்பறிவது சம்பந்தப்பட்டவரை முக்கியமானவை, தேவையானவை இவைதான். மற்றவை அந்தந்த சமயங்களில் சமயோசிதம்போல் செய்ய வேண்டும். அம்மாதிரி மூளை, பழகப்பழகத்தான் வரும். எழுத்தளவில் எவ்வளவு விஷயங்களைத்தான் எடுத்துக் கூற முடியும்?

★

ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

மூர்ச்சையடைந்தார்!

எங்கள் வீட்டிற்கு எதிரில் இருந்த நண்பர் ஒருவருக்கு தமிழ்ப்பற்று அதிகம். பொழுது போகாவிட்டால் அவர் வீடு சென்று அவருடன் பேசிக் கொண்டிருப்பேன். கபிலர், கம்பர் போன்றோரின் கவிதைகள் அடிக்கடி அவர் பேச்சில் இடம் பெறுவதுண்டு.

ஒரு சமயம் ஒரு பாடல் ஒன்றைச் சொல்லி, விளக்கிவிட்டு, ''இந்தப் பாடலை யார் பாடியிருக்க வேண்டும்? உங்களால் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார். பாடல் நன்றாக இருந்ததால், கபிலரோ, கம்பரோ பாடியிருக்க வேண்டும் என்று சொன்னேன். நண்பர் திடீரென்று நாற்காலியில் சாய ஆரம்பித்தார். ஓடிப்போய் அவரைத் தாங்கிக் கொண்டேன். காப்பியோடு நின்றிருந்த அவர் மனைவியும் ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்தார். தண்ணீர் முகத்தில் பட்டதும் மூர்ச்சை தெளிய ஆரம்பித்தது. என்ன இப்படி? அடிக்கடி மூர்ச்சை வருவதுண்டா என்று அவர் மனைவியிடம் கேட்டேன். ''அப்படி ஒன்றும் இல்லை. அவர் எழுதிய பாடலைப் போய் கபிலர் பாட்டு, கம்பர் பாட்டு என்று உயர்த்தினால் மூர்ச்சை வராதா பின்னே?'' என்ற பதில் கிடைத்தது. இதை இன்று நினைத்தாலும் சிரிப்பு தாளவில்லை.

ந. ராமச்சந்திரன்,
பாலக்காடு.

அவசரம்!

பட்டம் பெற்ற என் நண்பர் ஒருவர் உயர்நிலைப்பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக வேலை பார்க்கிறார். உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அதிகாலையில் அவர் பயிற்சி யளிப்பார். பல மாணவர்களுக்குக் 'காக்கி' உடை இல்லை. சாதாரண உடையிலே அவர்கள் வருவார்கள். ஆனால், எனது நண்பர் சாதாரண உடையாயினும் ட்ரவுசரும் பனியனும் கண்டிப்பாக அணிந்து வரவேண்டும் என்று வற்புறுத்தியிருந்தார். சில மாணவர் காலரற்ற கை பனியன் அணிந்து வருவர். அன்றொரு நாள் மாணவரெல்லோரும் வந்தனர். நானும் போயிருந்தேன். நண்பர் அவர்களை சட்டையைக் கழற்றிவிட்டு வரிசையாக நிற்கும்படி சொன்னார். எல்லா மாணவர்களும் சட்டையைக் கழற்றினர். ஒரு மாணவனைக் கண்டதும் எங்களுக்குச் சிரிப்பு வந்தது. வேறொன்றுமில்லை. அவன் பனியனுக்குப் பதிலாகப் பெண்கள் அணியும் ஜாக்கெட்டை மாட்டிக்கொண்டு வந்துவிட்டான். அதன் நீலநிறம் நன்றாக எடுத்துக்காட்டியது அதிகாலையில் எழுந்ததால் தூக்கக் கலக்கத்தில் கோட் ஸ்டாண்டில் இருந்த பனியனை விட்டுவிட்டுப் பதிலாக ஜாக்கெட்டை அணிந்து விட்டான்! மறுநிமிடமே அவனை வீட்டிற்குப் போக அனுமதித்தார் என் நண்பர்.

''தேவசேனா''
ஊஞ்சலூர்.

எதிர்பாராதது!

நானும் என் சகோதரியும் உருவத்தில் அதிக வேறுபாடில்லாதவர்கள். உடை உடுத்துவதிலும் அப்படியே. ஒருநாள் ஊரிலிருந்து எங்கள் மாமா வந்திருந்தார். அவர் என் சகோதரியிடம் கைப்பையைக் கொடுத்து, வைத்திருக்கும்படி சொன்னார். என் சகோதரியிடம் கைப்பையை கொடுக்கும நேரத்தில் நான் அருகில் இல்லை.

இரண்டு, மூன்று நாட்கள் கழிந்து, மாமா ஊருக்குப் புறப்பட்டு விடடார். பஸ்ஸுக்கு நேரமாகி விட்டதென்ற அவசரத்தில் என்னை கைப்பையை கொடு, கொடு என்று அவசரப்படுத்தினார். தலைவாரிக் கொள்ளவோ, என்னவோ என்று எங்களுடைய (பவுடர், ஸ்னோ அடங்கிய) கைப்பையைக் சொண்டு கொடுத்து விட்டுப் போய் விட்டேன்.

மறுநாள் நாங்கள் தலைவாரிக் கொள்வதற்காக நான் பையை எடுத்துக்கொண்டு வந்து திறந்தேன். எனக்கு அதிர்ச்சி தாங்கவில்லை.

அதே நேரத்தில் "அவசரத்தில் உங்களுடைய மேக்-அப் பையை கொண்டு வந்து விட்டு ரொம்ப கஷ்டப்பட்டு விட்டேன். என் பையும் அதைப் போன்றே இருந்ததுதான் காரணம்" என்ற செய்தியைத் தாங்கி வந்திருந்த மாமாவின் கடிதம், எங்கள் யாவரையும் சிரிப்பிலாழ்த்தியது. இந்த ஹாஸ்ய நிகழ்ச்சியை மாமாவும் இதுவரை மறக்கவில்லை.

ஷம்ஸநிஷா,
திருநெல்வேலி.

எங்கோ ஞாபகம்

அன்று எங்கள் கலாசாலை ஆசிரியர்களின் மாதாந்திர கூட்டம் நடந்துகொண்டிருந்தது. நீண்ட மேஜையின் ஒரு மூலையில் நின்றபடி அதிபர் பேசிக்கொண்டிருந்தார். கடைசியில் இருந்த ஒரு ஆசிரியருக்கு அவர் பேசியது சரியாகக் கேட்கவில்லை. அதனால் மிக உன்னிப்பாக அவர் கேட்க முயன்றதில் களைப்படைந்து விட்டார். ஒரு தடவை இந்த ஆசிரியரின் கவனம் அயர்ந்திருந்த சமயம் 'டைம்' என்று ஏதோ அதிபர் பேசியது கேட்டது. உடனே அவர் விழித்துக் கொண்டு மீண்டும் அவர் பேச்சைக் கேட்க ஆரம்பித்தார். அப்பொழுது அதிபர், ஒவ்வொரு ஆசிரியரையும், "நீங்கள்? ... நீங்கள்?" என்று கேட்டுக் கொண்டு வந்தார். ஒவ்வொருவரும் "இல்லை", "இல்லை" என்று பதில் சொல்லிக் கொண்டு வந்தார்கள். இந்த ஆசிரியருடைய முறை வந்ததும் அவர் டக்கென்று தம் கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு, "மூன்று முப்பது" என்று பதில் சொன்னார். அவர் இப்படிச் சொல்லியதுதான் தாமதம், 'கொல்' என்று அந்தக் கூட்டத்தில் இருந்து சிரிப்பு வெடித்தது. இரண்டு நிமிஷ விடா நகைப்புக்குப் பின் ஆசிரியருக்கு விஷயம் விளக்கப்பட்டது. எங்கள் கலாசாலையில் வாசகசாலைக்கு "டைம்ஸ்" என்ற ஆங்கிலப் பத்திரிகை வாங்குவதில் ஆட்சேபமுண்டா என்றுதான் அதிபர் ஒவ்வொரு ஆசிரியரையும் கேட்டுக் கொண்டு வந்தார். ஆனால் இந்த ஆசிரியர் அதைத் தவறாகப் புரிந்து கொண்டு அப்போதைய நேரம் மூன்று மணி முப்பது நிமிஷம் என்று தயக்கமின்றிக் கூறி விட்டார். விஷயத்தை அறிந்ததும் அந்த ஆசிரியரின் முகத்தில் அசடு வழிந்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இரா. நாகலிங்கம்,
காத்தாங்குடி.

வாசகர்களுக்கு

'திங்களி'ல் பிரசுரிக்க வேண்டி அனுப்பப்படும் கட்டுரைகள்பற்றி எந்தவிதக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ள இயலாது. கட்டுரைகளுடன் போதிய தபால் தலைகள் இணைக்கப்பட்டிருந்தால் தான் அவற்றைத் திருப்பி அனுப்ப இயலும். —ஆசிரியர்.

1956 -ம் வருஷ திங்கள் பிரதிகள்

'அறிவு பொக்கிஷம்' என்று எல்லோராலும் பாராட்டப்பட்ட இந்தச் சஞ்சிகையின் 1956-ம் வருஷ 12 பிரதிகள் கொண்ட "செட்டு"கள் சொற்பமே கைவசமுள்ளன.

★

விலை ரூ. 6–0–0

தபால் செலவு இலவசம்

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

★

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோட், சென்னை-2.

நன்றி...

உழைப்பும், கவலையும்
உதிரச்செய்யும் கூந்தலுக்குப்
பாதுகாப்பளித்துக்
கண்களுக்குக் குளுமை
உண்டாக்கிய இதற்கு
என் நன்றி...

எம் என் ராஜம்

குளிர்ந்த மூலிகைகளால் செய்யப்பட்ட
சிறந்த சந்தனாதி தைலம்

லேடிடால்

ஹேர் ஆயில்

குளிர் தாமரை போன்ற மூலிகைகளினால் செய்யப்பட்ட சிறந்த சந்தனாதித் தைலம். இதை உபயோகித்து வந்தால் கண் எரிச்சலைப் போக்கி மூளைக்கும் குளிர்ச்சியைத் தரும்.
கூந்தல் வளரும்.

ஆர்.எஸ்.பதி அண்டு கோ., மதுரை